22 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733



Join Our Brokerage - Real Estate Needs
416.315.9397
www.mahendran.ca
Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca



நதி 22 | பாலம் 20 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | OCTOBER 15, 2012

# 2012 இற்கான நோபல் பரிசுகள்!

2012 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வழங்கப்படுவதாக ஒக்ரோபர் 11, 2012 இல் நோபல் பரிசை வழங்கும் குழு சுவீடனில் அறிவித்துள்ளது. தற்போது 27 நாடுகளையும் 500 மில்லியன் மக்களையும் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம், ஐரோப்பிய கண்டம் முழுவதும் அமைதி, மனித உரிமையை நிலைநாட்ட கடந்த 60 வருடங்களாக உழைத்ததற்காக இந்த விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் கடும் பொருளாதார நெருக்கடியை சந்தித்தபோது ஐரோப்பிய ஒன்றியம், இந்த ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளை இணைத்து திறம்பட நடத்தி ஐரோப்பிய கண்டத்தை பொருளாதார ரீதியாக ஒருங்கிணைத்ததும் இவ்விருது வழங்குவதற்கான இன்னொரு காரணம் என இக்குழு அறிவித்தது.




ஐரோப்பிய ஒன்றியத்திற்கு 2012 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு என அறிவிப்பு வெளியாகியதை தொடர்ந்து உலகில் பல்வேறு நாட்டுத் தலைவர்களிடம் இருந்து பாராட்டுக்களும், விமர்சனங்களும் வெளியாகிய வண்ணம் உள்ளன. 1950 களில் ஐரோப்பிய ஒன்றியம் உருவாக்கப்பட்டதை தொடர்ந்து அது சமாதானத்திற்கும் மனித உரிமையை நிலைநாட்டவும் செய்து வந்த சேவைகளை, பாராட்டுவோர் எடுத்து கூறுகின்றனர். இந்நோபல் பரிசை விமர்சனம் செய்வோர் ஐரோப்பிய ஒன்றியம் தற்போது பெரும் இடைஞ்சலில் உள்ளது. இந்த நேரத்தில் நோபல் பரிசு வழங்குவது கோமாளித்தனம் என்றும் இனியென்ன? ஐரோப்பிய ஒன்றிய தலைவரிற்கு ஒஸ்கார் விருது வழங்கப்போகிறார்களா? எனவும் கேலி செய்கின்றனர்.


2012ஆம் ஆண்டின் பௌதீகவியலுக்கான நோபல் பரிசு Serge Haroche (Morocco) இற்கும் David J Wineland (USA) இற்கும் Quantum System இல் செய்த ஆராய்ச்சிகளுக்காக வழங்கப்படுகிறது. இவ் ஆராய்ச்சி துகள்களை தனிமைப்படுத்தி அவற்றின் Quantum பௌதீக நிலை பற்றி ஆய்வுகளை மேற்கொள்வது பற்றியது ஆகும். இவ் ஆய்வுகள் வெற்றி அளித்தால் அவை மிகவும் அதிவேக கணினிகளை (Supper fast computers) அமைக்கவோ அல்லது மிகவும் நுணுக்கமாக நேரத்தை கணிக்கக் கூடிய கடிகாரங்களை உருவாக்கவோ (Extremly precise clocks) வழிவகுக்கக் கூடியன.

2012 ஆம் ஆண்டின் இராசாயனவியலிற்காக நோபல் பரிசு Robert. J. Letkowitz (USA) இற்கும் Brian K. Kobilka (USA) இற்கும் G - Protein - coupled receptors ஐ பற்றி நடத்திய ஆராய்ச்சிகளுக்காக வழங்கப்படுகின்றது. இவ் ஆராய்ச்சி மனித உடம்பில் உள்ள கலங்கள் எவ்வாறு தரவுகளை மற்றைய கலங்களுக்கு பரிமாறுகின்றன என்பது பற்றியது ஆகும். எவ்வாறு ஒரு கலத்தில் இருந்து மற்றுமொரு கலம் மூலம் உடம்பில் நீண்ட தூரத்திற்கு தரவுகள் மற்றும் செய்திகள் பரவுகின்றன என்பது பற்றி இவர்கள் ஆய்வுகளை சமர்ப்பித்துள்ளனர்.

2012 ஆம் ஆண்டின் மருத்துவவியலுக்கான நோபல் பரிசு Sir. John B. Gurdon (UK) இற்கும் Shinya Yamanaka (Japan) இற்கும் Mature cells reprogrammed பண்ணக்கூடியவை என கண்டு பிடித்ததற்காக வழங்கப்படுகின்றது. பலகாலமாக முதிர்ச்சி அடைந்த கலங்கள் நிரந்தரமாக மூடப்பட்டவை என நம்பப்பட்டு வந்தன. இவர்களது ஆராய்ச்சி இது தவறு என நிரூபித்துள்ளது. இவர்கள் இவ் ஆராய்ச்சியை தவளையின் கலங்களில் செய்து காட்டியுள்ளனர். இவர்களது ஆராய்ச்சிகள் குளோனிங் (Cloning) இற்கும் முதற்படியாக இருந்தன.

2012 ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசு Mo Yan (China) இற்கு அவரது இலக்கிய படைப்புகளுக்காக வழங்கப்படுகின்றது. இவர் 1955 இல் சீனாவில் விவசாயம் செய்து வந்த பெற்றோர்களுக்கு பிறந்து 12 வயதில் பள்ளிப்படிப்பை விட்டு விவசாயம் செய்யச் சென்றார். இவரது முதலாவது இலக்கிய படைப்பான சிறுகதை 1981 இல் இலக்கிய சஞ்சிகையில் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து பல கதைகள், புத்தகங்களை வெளியிட்டார். இவரது படைப்புக்கள் சீன மொழியில் மாத்திரம் அல்லாமல் ஆங்கிலம், பிரெஞ், சுவீடிஸ், ஸ்பானிஸ், ஜேர்மன் மொழிகளிலும் வெளிவந்துள்ளன.

1895 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி அல்பிரட் நோபல் தனது உயிலில் தனது சொத்துக்களின் பெரும்பகுதியை பௌதிகம், இரசாயனம், மருத்துவம், இலக்கியம் மற்றும் அமைதிக்காக உழைத்தவர்களுக்கு வழங்குமாறு எழுதிக் கையெழுத்திட்டார். அதன்பின்னர் அவரின் விருப்பப்படி 1901 ஆம் ஆண்டில் இருந்து நோபல் பரிசுகள் இந்த ஐந்து துறைகளிலும் உழைத்த வல்லுனர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. நோபல் பரிசாக ஒரு **தொடர்ச்சி 03ஆம் பக்கம்**



Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2
*Independently Owned and Operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214



வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated



Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி<
9 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585





துரித பணமாற்றுச் சேவை
• 54 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 21 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3 | 416.267.8221
3351 Markham Rd. #109 | 416.321.8221




இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5, Markham & Eglinton, Tel:416.264.3232
3351Markham Rd., #129, Markaham & Steeles, Tel: 416.609.2022



# REAL ESTATE

• RESIDENTIAL • INVESTMENTS

வீடு என்பது உங்கள் கனவு! தாயகம் என்பது உங்கள் நினைவு!!
இவை இரண்டையும் உங்கள் கண் முன் கொண்டுவருவேன்.

இலங்கை சென்றுவர இருவருக்கு இலவச விமானச்சீட்டு

என்னிடம் வீடு வாங்குபவர்களுக்கு மட்டும் இரண்டு பேருக்கு விமானச்சீட்டு. இலங்கை சென்றுவர எந்த வித சீட்டு குலுக்கலுமின்றி வழங்கப்படும்.

இந்த சலுகை November 20, 2012 திகதி வரை என்னிடம் வீடு வாங்குபவருக்கு மட்டும்.



"உங்கள் கண் உள் இருக்கும் கனவுகளை உங்கள் கண்முன் கொண்டு வருவேன் உங்களுக்கு அதிஷ்டம் இல்லை என்று கவலையா! என்னிடம் வந்தாலே உங்களுக்கு அதிஷ்டம் தான்"

Lourdson Antonipillai (B.sc)
Sales Representative
Dir: 416-738-8824

HomeLife/Future Realty Inc., Brokerage*
Bus: (905) 201-9977
Fax: (905) 201-9229
205-7 Eastvale Drive, Markham, ON, L3S 4N8
*Independently Owned and Operated
HOMELIFE HIGHER STANDARDS



Allstate. You're in good hands.

# Allstate Insurance Company Of Canada

## Home & Auto Insurance





Suren Navaratnarajah
(Agent)
Cell: 416.520.6916
E-mail: snavaratnarajah@allstate.ca
4525 Kingston Road
Unit H5 Scarborough, ON M1E 2P1



Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)




* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife/GTA Realty Inc. Brokerage *
HOMELIFE HIGHER STANDARDS
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666


# வைரக்கிரகம்
# Diamond Planet

பூமியில் இருந்து 40 ஒளி ஆண்டுகள் தூரத்தில் கடக ராசி (Cancer Constellation) இல் 55 Cancri - e எனப்படும் புதிய கிரகம் ஒன்றை வானவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளதாக Astrophysical சஞ்சிகை தெரிவித்துள்ளது.



இக்கிரகம் பூமியைவிட இரண்டு மடங்கு பெரியது, எட்டு மடங்கு நிறை கூடியது. இக்கிரகத்தில் பூமியின் நிறையை விட மூன்று மடங்கு நிறையளவு வைரம் (Diamond) இருக்கிறது. இக்கிரகத்தின் அமைப்பு, மேற்பரப்பு Graphite (பென்சிலில் உள்ள ஈயம்) ஆல் ஆனது. அதன் கீழ் வைரம் உள்ளது. இவ்வாறு Yale பல்கலைக் கழகத்தை சேர்ந்த வானவியல் ஆராய்ச்சியாளர் கலாநிதி நிக்கு மதுசுதன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் இக்கிரகம் முற்று முழுதாக

தொடர்ச்சி 03ஆம் பக்கம்


விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜே பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201,
TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com


விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram Publications Inc. ,
   5215 Finch Ave. E. #201,
   Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: vlambaram.com

# 2012 இற்கான...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

தங்கப்பதக்கம், ஒரு சான்றிதழ், மற்றும் பணம் வழங்கப்படும். இப்பணத்தின் பெறுமதி ஒவ்வொரு ஆண்டும் நோபல் பரிசை வழங்கும் குழுவால் கணிக்கப்படும். இவ்வாண்டு நோபல் பரிசாக $1.2 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்படுகின்றது.



மேற்கூறப்பட்ட ஐந்து நோபல் பரிசுகளையும் விட பொருளா தாரத்திற்கான நோபல் பரிசை சுவீடன் வங்கி 1968 இல் இருந்து கொடுத்து வருகின்றது. 2012 ஆம் ஆண்டிற்கான பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை பெறுபவருடைய விபரங்கள் ஒக்டோபர் 15, 2012 இல் வெளியிடப்படும்.

1901 இல் ஆரம்பித்த ஐந்து நோபல் பரிசுகளுடன் 1968 இல் ஆரம்பித்த ஆறாவது நோபல் பரிசையும் சேர்த்து 2011 ஆம் ஆண்டு வரை 549 நோபல் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பரிசுகளை 830 பேரும் 23 நிறுவனங்களும் பெற்றுள்ளன. இவற்றுள் சிலரும், சில நிறுவனங்களும் ஒரு தரத்திற்கு மேல் நோபல் பரிசை பெற்றுள்ளன. அவற்றை நீக்கிப் பார்த்தால் 2011 ஆம் ஆண்டு வரை 826 தனி நபர்களும் 20 நிறுவனங்களும் நோபல் பரிசை பெற்றுள்ளன. இவற்றில் 44 நோபல் பரிசு பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

# வட-கிழக்கில் இராணுவ மயமாக்கலை தடுக்க நடவடிக்கை வேண்டும்!

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் இராணுவ மயமாக்கலை தடுப்பதற்கு இந்தியா, இலங்கை அரசாங்கத்துக்கு உரிய வகையில் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்று இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனனிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கை அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ள வேண்டிய தருணத்தில் 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் பறித்து வருகின்றது. நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் மூலம் மட்டுமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியுமென அரசாங்கம் கூறி வருகின்றது. இது தவறான கருத்தாகும். வேறு வழிவகைகள் மூலமும் தீர்வினைக் காண முடியும். இவ்விடயம் தொடர்பிலும் இந்தியா, இலங்கை அரசுக்கு உரிய வகையில் ஆலோசனை வழங்க வேண்டும் என்றும் கூட்டமைப்பினர் இந்தச் சந்திப்பின்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.



புதுடில்லிக்கு பயணம் மேற்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான தூதுக் குழுவினர் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளையும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் ஆகியோரரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

சிவசங்கர் மேனனை சந்தித்த கூட்டமைப்பு எம்.பி.க்கள் வடமாகாணத்தில் இடம்பெற்று வரும் இராணுவ மயமாக்கல், பொதுமக்களின் காணிகள் அபகரிக்கப்படுதல், மீள்குடியேற்றம் என்ற பெயரில் எவ்வித உதவிகளுமின்றி மக்கள் காடுகளுக்குள் விடப்படுதல் மற்றும் அதிபாதுகாப்பு வலயங்களினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் என்பன குறித்து எடுத்துக் கூறியுள்ளனர்.

வடக்கு கிழக்கில் இராணுவமயமாக்கல் அதிகரித்து வருவதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். காணிகள் சுவீகரிக்கப்படுவதுடன் அதிஉயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளில் தொடர்ந்தும் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். இதனால் மக்கள் மீளக்குடியேற முடியாது திண்டாடுகின்றனர். மக்களை மீளக் குடியேற்றும் வகையில் இராணுவ மயமாக்கலை தடுத்து நிறுத்துவதற்கு இந்தியா உரிய வகையில் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்றும் கூட்டமைப்பு எம்.பி.க்கள் சிவசங்கர் மேனனிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தீர்வுத்திட்ட விடயத்தில் அரசாங்கம் இழுத்தடிப்புப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது. 2011ஆம் ஆண்டு அரசாங்கத்துடன் ஒரு வருட காலம் நாம் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தினோம். கடந்த ஜனவரி மாதம் அரசாங்கம் இந்தப் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக் கொண்டது. அதிகாரப் பகிர்வு விடயத்தில் இலங்கை அரசாங்கம் அக்கறையற்ற தன்மையைக் கொண்டுள்ளது. அதிகாரங்களை பகிர வேண்டிய இன்றைய நேரத்தில் திவிநெகும என்ற சட்டமூலத்தை கொண்டுவந்து மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் அரசாங்கம் பறித்துள்ளது.

தெரிவுக்குழுவுக்கு வந்தால் மட்டுமே தீர்வு குறித்து பேசமுடியுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் வலியுறுத்தி வருகின்றது. இது தவறான விடயமாகும். நாடாளுமன்ற தெரிவுக்குழு இல்லாமலும் பேச்சுவார்த்தை நடத்தி இனப் பிரச்சினைக்கு தீர்வினைக் காண முடியும். எனவே இந்த விடயத்திலும் இலங்கைமீது அழுத்தம் செலுத்தப்பட வேண்டும் என்றும் கூட்டமைப்பு எம்.பி.க்கள் வலியுறுத்தியுள்ளனர்.


# வைரக்கிரகம்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

திண்மமான (Solid) பாறைகளை (Rocks) கொண்டுள்ள எவ்வித வாயுக்களும் அற்ற கிரகம் ஆகும். இக்கிரகத்தின் வெளிப்பரப்பு அதிகூடிய வெப்பநிலையை உடையது. இக்கிரகம் அதனுடைய சூரியனுக்கு கிட்ட இருப்பதால் அதன் வெப்ப நிலை 2150$^0$ C ஆகும். இக்கிரகத்தை பற்றி ஆய்வு செய்த மற்றுமொரு பிரெஞ் வானவியலாளரான பிரெஞ் பல்கலைக்கழகமான Universite de Franchie Comte சேர்ந்த Dr. Oliver Mousis தெரிவிக்கையில் இக்கிரகத்தில் காலநிலை வேறுபாடு இல்லை. எப்போதும் ஒரு நிரந்தர Barbecue போலவே இருக்கும் என்றார்.

இக்கிரகம் ஆகஸ்ட் 2011 இல் கண்டு பிடிக்கப்பட்டாலும் அது பற்றிய விபரங்கள் தற்போதே ஒக்ரோபர் 2012 இல் உறுதி செய்யப்பட்டன. Princeton University யை சேர்ந்த வானவியலாளர் David Spergel தெரிவிக்கையில் கிரகத்தின் நிறையையும் வயதையும் கணக்கிட்ட பின்னர் கிரகத்தின் அமைப்பை பற்றி அறிவது சுலபம் என்றார். இந்த வைரக்கிரகத்தின் விலையை மதிப்பிட்ட Forbes சஞ்சிகை இக்கிரகத்தின் விலை $27 Nonillion என்கிறது. அதாவது $27 ஐ தொடர்ந்து 30 பூச்சியங்களை (Zeros) யை இடவேண்டும்.

இவ்வளவு தொகை வைரம் இருப்பதாக கண்டுபிடித்தாலும் எமது பூமியில் வைரத்தின் விலை தற்போது குறைவதற்கு சாத்தியம் இல்லை. வைரத்தை இந்த வைரக்கிரகத்திற்கு போய் எடுத்துவர தற்போதைய சாதனங்களின் வேகத்தில் பார்த்தால் மில்லியன் வருடங்கள் எடுக்கும். அக்கிரகத்தின் வெப்பநிலைக்கு தாக்கு பிடிப்பது வேறு விடயம்.




# நவராத்திரி விழா

அன்னை பராசக்தியின் அம்சமாகத் திகழும் துர்க்கை, இலட்சுமி, சரசுவதி ஆகிய தெய்வங்களின் மகிமையை வெளிப்படுத்துவது நவராத்திரி விழாவாகும். இதற்கு கும்பபூசை என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

சிறப்பாக பெண்கள் இவ்விழாவை மிகத் தூய்மையாகப் போற்றி இன்பம் பெறுவது குறிப்பிடத்தக்கது. இறைவனிடத்தில் அரிய வரங்களைப் பெற்ற மகிடாசுரன் என்னும் அரக்கன் விண்ணுலகர் தேவர்களை துன்புறுத்தினான். இவர்களின் துன்பத்தை நீக்கி இன்பத்தை நல்க தேவி விரும்பினாள். இதனால் ஒன்பது இரவுகளில் தேவியானவள் மகிடாசுரன் என்ற அரக்கனை அழித்து விண்ணவர் குலத்திற்கு நல்வாழ்வு அளித்தாள். தேவி போராடிய ஒன்பது ராத்திரியைத் தான் நவராத்திரி என்றும் மகிடாசுரனை வெற்றி கொண்ட பத்தாம் நாளை விஜயதசமி என்றும் போற்றுகின்றோம். ஒன்பது நாட்களும் சக்தியாக நின்றவள் பத்தாம் நாள் சிவத்துடன் ஐக்கியமாகிறாள். இது இப்பண்டிகையின் தனிச்சிறப்பாகும்.

சிறப்பாக நவராத்திரி விழாவில் முதல் மூன்று நாட்களில் துர்க்காதேவியையும் அடுத்த மூன்று நாட்களில் இலட்சுமியையும் இறுதி மூன்று நாட்களில் சரசுவதியையும் போற்றி தூய்மையாக வழிபாடு செய்து அவள் அருளைப் பெறுவார்கள். ஒன்பதாவது நாளாகிய மகாநவமியன்று இதனை சரசுவதிபூசை என்றும் கலைமகள் விழா என்றும் ஆயுதபூசை என்றும் போற்றிவழிபாடு செய்வார்கள். இப்புனித தினத்தில் நூல்கள், கலைப்பொருட்கள், இசைக்கருவிகள், தொழிற்கருவிகள் முதலியவற்றை பூசையில் வைத்து வழிபடுவது வழக்கம். பத்தாம் நாளாகிய விஜயதசமி அன்று பூசையில் வைத்த பொருட்களைப் பயன்படுத்த நற்கருமங்களைத் தொடங்கி அதில் பூரண-மான வெற்றியைப் பெறுவார்கள். இத்தினத்தில் சிறுகுழந்தைகளுக்கு ஏடு தொடக்கி எல்லையற்ற இன்பம் பெறுவார்கள். சிறப்பாக இத்தினத்தில் நாம் செய்யும் நற்கருமங்களில் தேவியின் அருள் முன்னின்று நல்லாசி வழங்குவது குறிப்பிடத்தக்கது. அன்று ஆலயங்களில் மகிடாசுரவதம், வன்னி வாழைவெட்டுதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும். இதனைவிட இசைக்கச்சேரிகள், நடனநிகழ்ச்சிகள் இத்தினத்தில் முதன்மை பெற்று விளங்குவது குறிப்பிடத்தக்கது.

ஆலயத்திலும் இல்லத்திலும் இவ்விழாவின் சிறப்பினைக்கண்டு எல்லோரும் உவகை பெறுவர். சிறப்பாக நமது உள்ளத்தில் அன்பு, உண்மை, நேர்மை, வாய்மை, ஒழுக்கம், அடக்கம், பொறுமை ஆகிய நற்பண்புகள் ஓங்கநிலை பெறுவதற்கு வழிவகுக்கின்றது. தன் உயிர்போல எல்லா உயிர்களையும் நேசித்தல் இவ்விழாவிற்குரிய சிறப்பாகும். எனவே நவராத்திரியில் சிறப்பிடம்பெறும் சக்திதெய்வங்களை அன்போடு வழிபட்டு அவள் அருளைப் பெற்றால் எல்லையற்ற தெய்வீக இன்பம் உள்ளத்தில் நிலைபெறும் என்பது நிச்சயம்.




ஈழத்திலும் இந்தியாவிலும் இவ்விழாவின் மகிமை முதன்மை பெற்றுள்ளது. மைசூர் மக்கள் இவ்விழாவை தசராவிழாவாகக் கொண்டாடி இன்பம் பெறுவார்கள். வடஇந்திய மாநிலமான உத்தரப்பிரதேச மக்கள் இதனை 'ராம்லீலா' என்று கொண்டாடி ஆனந்தம் பெறுவார்கள். வங்காளிகள் காளிபூசையாகவும் துர்க்கா பூசையாகவும் சிறப்பாக இவ்விழாவை தூய்மையாக போற்றி அவள் அருளைப் பெறுவதைக் காணலாம்.

நவராத்திரி தினத்தில் முப்பெரும் தேவியின் திருநாமங்களைப் போற்றி அன்னை பராசக்தி முப்பெரும்தேவி இறைவனை வழிபட்ட திருத்தலங்களை இத்தினத்தில் நினைத்து மனமுருகினால் அவள் அருளால் வீரம், செல்வம், கல்வி ஆகியன கூடும். அதிசயம் நிகழும். அம்பிகை இறைவனை பூசித்து வழிபட்ட தலம் திருஆனைக்கா. இது திருச்சிக்குப் பக்கத்தில் உள்ளது. ஈடுஎல்லை இல்லாத திருத்தொண்டர்கள் ஏத்தும் இடைச்சரம் பெருமை வாய்ந்த கோயிலாகும். இத்தலத்தில் இலட்சுமி, சரசுவதி, இந்திராணி சூழ பசுவடிவில் தினமும் பால்சொரிந்து இறைவனை பூசித்த சிறப்பு இத்தலத்திற்குரிய மகிமையாகும். தமிழகத்தில் உள்ள மயிலாடுதுறைக்கு அருகில் உள்ளது திருவிடைமருதூர் என்னும் புகழ்பெற்ற பெரியகோயில். இது மகாலிங்கத்தலம், பஞ்சலிங்கத்தலம் என்ற சிறப்பிற்குரியது. இவ்வாலயத்தின் வெளிப்பிரகாரம் 'அஸ்வமேத பிராகாரம்' என்னும் கீர்த்தியைப் பெற்றுள்ளது. உமாதேவியார், விநாயகர், முருகன், திருமால், காளி, இலக்குமி, சரசுவதி, வசிட்டர், உரோமேசமுனிவர், ஐராவணம், சிவவாக்கியர், கபிலர், அகத்தியர், வரகுண பாண்டியன் முதலியோர் இத்தலத்தில் உள்ள இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர். சொக்கநாதர் கோயிலில் உள்ள இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர். சொக்கநாதர் கோயிலில் உள்ள மூர்த்திக்கு அபிடேகம் செய்து மேகராகக் குறிஞ்சி பண்பாடினால் மழைபெய்யும் என்பது மக்களிடையே உள்ள நம்பிக்கையாகும். இவ்வாக்கு இன்றும் நிறைவு பெறுவதைக் காணலாம். எல்லா உயிர்களுக்கும் உய்ய அருளும் இறைவனின் அருள் வெள்ளம் மிகப் பெரிது. அம்பிகை பசு வடிவங்கொண்டு சாபம் நீக்கப்பெற்ற தலம் சோழநாட்டின் தென்கரையில் உள்ள திருக்குழம்பியம். பசுவின் காற்குளம்பு கிடறியபோது வெளிப்பட்ட இலிங்கமூர்த்தி அற்புதமானது. இது 'கோகிலேசுவர்' என்ற திருப்பெயரைக் கொண்டுள்ளது. திருஞானசம்பந்தரின் அவதாரப்பதி சீர்காழி. இலக்குமி மாங்கல்ய பிச்சை கேட்க இறைவன் அருள்புரிந்த தலமும் இதுவாகும். பரம்பொருளின் திருவருளைப் பெற்ற முப்பெரும் தேவிகளும் நவராத்திரி தினத்தில் கண்கண்ட தெய்வமாக போற்றி வழிபடுவதைச் சிறப்பாக காணலாம்.

- அ. சிவானந்தன் -
**கனடா**

நவராத்திரிவிழா 15.10.2012 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பம். யாவரும் மெய்யன்பாக வழிபட்டு தேவியின் திருவருளைப் பெறுவோமாக!



இப்ப வீடு வாங்காட்டாலும் ஆறு மாதத்திலையோ அல்லது ஒரு வருசத்திலையோ வாங்க என்ன பிளான் பண்றம் ??

டவுன் பேமன்ட் போதவில்லையா?

மோட்கேஜ் பெறுவதில் சிக்கலா?

கிரெடிட் நிலமை நல்லதில்லையா?

நிலையான வருமானம் இல்லையா?

இதுதான் உங்கள் கவலையா??

உதுக்குத்தானே இப்ப வோக் - இன் **மோட்கேஜ் கிளினிக்** நடக்குது. !

அங்க நேரபோனால்தான் உதுக்கு சரி! ! !

5 Yr Fixed Rate 2.99 %

## சனிக்கிழமை தோறும் 9.00 am - 5.00 pm வரை




மார்க்கம்/ஸ்டீல்ஸ்(Markham/Steeles)
டிமான்ட் லொகேஷன்!!
அரிய வாய்ப்பு!!




பா(f)மசி/டன்வோ(f)த்
விக்டோரியா பாக் சப்வேக்கு அருகில்
சிறந்த முதலீடு!!




மிட்லன்ட் / டன்வோ(f)த்
ஆடம்பர வசதிகளுடன் கூடியது
சிறந்த வாய்ப்பு!!




மிட்லன்ட் / லோரன்ஸ்
தளபாடங்களுடன் கூடியது



# 416-644-3555

**CENTUM Rapid Mortgages Inc.**
211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4



**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Team Leader & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc.® ⟹ **"Rapid Response; Rapid Results"**
FSCO LIC # 10156

# விளையாட்டுத் தகவல்கள் 338

## கேட்ச்சஸ் வின் மேட்ச்சஸ்

கிரிக்கெட்டில் கேட்ச்சஸ் வின் மேட்ச்சஸ் என்பார்கள். ஆனால், டுவென்டி-20 உலக கோப்பை தொடரில் வீரர்களின் பீல்டிங் தரம் சிறப்பாக இல்லை. வாட்சன், சோகைல் தன்விர் போன்ற நட்சத்திரங்கள் சுலப வாய்ப்புகளை கோட்டைவிட்டு, ஏமாற்றினர். இந்திய அணிக்கு எதிரான லீக் போட்டியில் ஆப்கானிஸ்தான் வீரர்கள் நான்கு கேட்ச்சை வீணாக்கினர். இதில், ரெய்னா (2, 19 ரன்) கொடுத்த கேட்ச்சை இரண்டு முறை தவறவிட்டனர். இதேபோல் கோஹ்லி 33 ரன்களிலும், யுவராஜ் சிங் 17 ரன்களிலும் கொடுத்த கேட்ச்சை கோட்டைவிட்டனர். சர்வதேச கிரிக்கெட்டில் போதிய அனுபவம் இல்லாததால் தான் கேட்ச் குறித்த ஞானம் ஆப்கானிஸ்தான் அணியினருக்கு இல்லை எனலாம். அதே நேரத்தில் அனுபவ ஆல் - ரவுண்டரான ஆஸ்திரேலியாவின் வாட்சனும் கேட்ச் வாய்ப்பை தவறவிட்டது அதிர்ச்சி அளித்தது. இவர், வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான லீக் போட்டியில் கெய்ல், 2 ரன்கள் எடுத்த போது கொடுத்த கேட்ச்சை கோட்டைவிட்டார். இதனை பயன்படுத்திய கெய்ல் 26 பந்தில் அரைசதம் அடித்தார். வங்கதேசத்துக்கு எதிரான லீக் போட்டியில் பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சு தான் மோசம் என்றால், பீல்டிங்கும் சொதப்பலாக இருந்தது. யாசிர் அராபத் வீசிய போட்டியின் 13வது ஓவரில் முஷ்பிகுர் 17 ரன்கள் எடுத்த நிலையில், கொடுத்த சுலப கேட்ச்சை சோகைல் தன்விர் கோட்டை விட்டார். பின் சாகிப் அல் ஹசன் கொடுத்த, கடின கேட்ச் வாய்ப்பை அப்ரிதி நழுவவிட்டார். இறுதியில் பேட்டிங் கைகொடுக்க பாகிஸ்தான் வென்றதால், சோகைல் தன்விர் போன்றவர்கள் விமர்சனத்தில் இருந்து தப்பினர். வீரர்களின் ஒரு சிறு தவறு கூட போட்டியின் முடிவை மாற்றிவிடும். கேட்ச்சை நழுவவிடுபவர்கள் அணியின் வில்லன்களாக மாறலாம்.

## ஆடுகளங்கள்

இலங்கை ஆடுகளங்கள் வேகப்பந்துவீச்சுக்கு சாதகமாக மாறிவிட்டது என கூறப்பட்டது. ஆனால், டுவென்டி-20 உலக கோப்பை தொடரில் எதிர்பார்ப்புக்கு மாறாக, சுழற்பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். பொதுவாகவே இந்திய துணைக்கண்டத்து ஆடுகளங்கள் சுழற்பந்துவீச்சுக்கு சாதகமாக இருக்கும். இதற்கு இலங்கையும் விதி விலக்கல்ல. ஆனால், முரளிதரன் ஓய்வு பெற்ற பின், இவருக்கு ஈடாக ஒரு சுழற்பந்துவீச்சாளர் இலங்கை அணியில் உருவாகவில்லை. இதனால், சமீபகாலமாக ஆடுகளங்களின் தன்மை வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக மாற்றி அமைக்கப்பட்டது. சமீபத்தில் இலங்கை சென்ற இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர்கள் விக்கெட் வீழ்த்த திணறினர். இர்பான் பதான் தான் அதிக விக்கெட் வீழ்த்தினார். இந்திய அணியின் கேப்டன் தோனியும், இலங்கை ஆடுகளங்கள் மாறி விட்டதாக அப்போது கருத்து தெரிவித்தார்.

ஹர்பஜன் எழுச்சி: இந்நிலையில் தற்போது நடக்கும் உலக கோப்பை தொடரில், சுழற்பந்து வீச்சாளர்கள் எழுச்சி பெற்றிருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தி யுள்ளது. இந்திய அணி பங்கேற்ற இரு போட்டிகளில் கைப்பற்றிய 18 விக்கெட்டுகளில் 11 விக்கெட்டுகள் சுழல் மூலம் தான் கிடைத்தன. அயர்லாந்துக்கு எதிராக யுவராஜ் (3 விக்.,), அஷ்வின் (2) அசத்த, இங்கிலாந்துடன் ஹர்பஜன் சிங் (4), சாவ்லா (2) அசத்தினர். மெண்டிஸ் அபாரம்: ஜிம்பாப்வேக்கு எதிரான லீக் போட்டியில் நீண்ட இடைவெளிக்குப் பின் களமிறங்கிய அஜந்தா மெண்டிஸ், 8 ரன்கள் மட்டும் கொடுத்து 6 விக்கெட் வீழ்த்தினார். மற்றொரு சுழற்பந்து வீச்சாளர் ஜீவன் மெண்டிஸ், இதேபோட்டியில் 3 விக்கெட் சாய்த்தார். அஜ்மல் அசத்தல்: நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியின் நட்சத்திர சுழல் நாயகன் சயீத் அஜ்மல் வழக்கம் போல மிரட்டினார். இவர் 4 விக்கெட் வீழ்த்த, அப்ரிதி தன்பங்கிற்கு 2 விக்கெட் என, ஜொலித்தார். ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரில் கோல்கட்டா அணி கோப்பை வெல்ல முக்கிய காரணமாக இருந்த சுழல் மாயாவி வெஸ்ட் இண்டீஸ் அணியின் சுனில் நரைன். இவர் அதிக விக்கெட் வீழ்த்தவில்லை என்றாலும், இவரது பந்துகளில் ரன் எடுப்பது கடினமாக உள்ளது.

## இந்திய அணியின் போஸ்ட் மார்டம்

இந்திய அணியின் செயல்பாடு சமீப காலமாக மிக மோசமாக உள்ளது. ஆஸ்திரேலியாவில் நடந்த முத்தரப்பு தொடர், ஆசிய கோப்பை மற்றும் தற்போதைய டுவென்டி-20 உலக கோப்பை தொடர் என ஏமாற்றம் தொடர்கிறது. இதற்கான காரணங்களை அக்குவேறு ஆணிவேறாக (போஸ்ட் மார்டம் போல) ஆராய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. கேப்டனாக தோனியின் வியூகம் எடுபடவில்லையா, சேவக், ஜாகிர் போன்ற சீனியர்களை நீக்க வேண்டுமா என்பது போன்ற விடயங்களை புதிய தேர்வுக்குழு ஆய்வு செய்து, அணிக்கு இளம் ரத்தம் பாய்ச்சும் முயற்சியில் இறங்க வேண்டும். கடந்த 2007ல் முதன் முதலாக இந்திய அணிக்கு தலைமை ஏற்ற தோனி, டுவென்டி-20 உலக கோப்பை வென்று தந்தார். பின் 2009, 2010ல் நடந்த தொடரில் சூப்பர்-8 சுற்றில் ஒரு வெற்றி கூட பெறாமல் திரும்பியது. இம்முறை நன்கு அறிமுகமான இலங்கையில், தொடர் நடப்பதால் பெரும் நம்பிக்கையுடன் சென்றது இந்திய அணி. ஆனால், ஆப்கானிஸ்தானையே தடுமாறித்தான் வென்றது. பின் இங்கிலாந்தை வீழ்த்திய இந்திய அணி, சூப்பர்-8 சுற்றை, வழக்கம் போல தோல்வியுடன் துவக்கியது. மீண்டும் அவுட்: ஒரு வழியாக 5 ஆண்டுகளுக்குப் பின், இச்சுற்றில் முதல் வெற்றி, பாகிஸ்தானுக்கு எதிராக கிடைத்தது. அடுத்து தென் ஆப்ரிக்காவை வீழ்த்தி 4 புள்ளி பெற்றாலும், ரன்ரேட் அடிப்படையில் அரையிறுதி வாய்ப்பு மீண்டும் பறிபோனது.

சேவக்கிற்கு எதிர்ப்பு: இந்திய அணியில் சீனியர் வீரர்களின் செயல்பாடுகள் தொடர்ந்து மோசமாகவே உள்ளது. உதாரணமாக சேவக் விளையாடிய 3 போட்டிகளில், எடுத்தது, 54 (சராசரி 18) ரன்கள் தான். இவர், குறைந்தது 15 ஓவர்கள் களத்தில் இருக்க வேண்டும். அப்படி செய்தால் எளிதான வெற்றி கிடைத்து விடும். வெஸ்ட் இண்டீசின் கெய்ல், ஆஸ்திரேலியாவின் வாட்சன் இப்படித்தான் செய்கின்றனர். ஆனால், சேவக் அவசரப்பட்டு, செய்த தவறையே திரும்பச் செய்து விரைவில் அவுட்டாகி விடுகிறார். பேட்டிங் தவிர, ஆப் ஸ்பின் பவுலிங் செய்வதிலும் இவர் வல்லவர். ஆனால், தோனிக்கு இவர் மீது நம்பிக்கை கிடையாது. ஒருவேளை, இவரது தோள்பட்டை காயத்தினால் கூட, பவுலிங் தராமல் இருக்கலாம். அப்படி என்றால் அணியில் இவர் எதற்கு இருக்க வேண்டும். சேவக்கிற்கு அடுத்து வேகப்பந்து வீச்சாளர் ஜாகிர் கான் (4 போட்டி, 3 விக்.,). துவக்க ஓவர்களில் விக்கெட் வீழ்த்த முடியாமல் தடுமாறும் இவரது சராசரி 7 ரன்னுக்கும் மேலாக உள்ளது. பீல்டிங்கிலும் ஜாகிர் கான் சொதப்புகிறார். இவரது தந்திரமான பவுலிங் திறமை டெஸ்ட் போட்டிக்கு மட்டும் போதுமானது. டுவென்டி-20, ஒரு நாள் போட்டிக்கு பிரவீண் குமார் போன்ற பொருத்தமான வேறு பவுலர்கள் தான் அணிக்கு தேவை. யுவராஜ ஏமாற்றம்: கேன்சர் பாதிப்பில் இருந்து, இரும்பு இதயத்துடன் மீண்டு, சர்வதேச போட்டிகக்கு திரும்பினார் யுவராஜ சிங். இவர், 8 விக்கெட் (சராசரி 6 ரன்கள்) வீழ்த்தியதை மறுக்க முடியாது தான். ஆனால், இவரிடம் ரசிகர்கள் எதிர்பார்ப்பது அதிரடி பேட்டிங்கை தான். இம்முறை, 5 போட்டிகளில் 61 பந்துகளை சந்தித்த இவர், எடுத்தது 66 ரன்கள் தான்.

காம்பிர் சொதப்பல்:காம்பிரை பொறுத்தவரை இத்தொடரில் 5 போட்டியில் 80 ரன்கள் (72 பந்து) தான் அடிக்க, அணியில் இவரது இடம் கேள்விக்குறி தான். ஹர்பஜன் எங்கே: ஆல் ரவுண்டர் இர்பான் பதான் செயல்பாடு திருப்தி தான் என்றாலும், பந்தின் வேகம் 120 கி.மீ.,க்கும் மேல் செல்ல மறுக்கிறது. சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங். நீண்ட இடைவெளிக்குப் பின், இங்கிலாந்துடன் அசத்தல் திறமை வெளிப்படுத்தினார். இவரை தென் ஆப்ரிக்காவுக்கு எதிரான போட்டியில் சேர்க்கவில்லை. ரோகித் வீண்: தொடர்ச்சியான 20 மோசமான இன்னிங்சிற்கு பின், இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் மட்டும் அரைசதம் (மொத்தம் 5 போட்டியில், 82 ரன்கள்) அடித்தார் ரோகித் சர்மா. ஒருநாள் மற்றும் டுவென்டி-20 போட்டிகள் என, மொத்தம் 100க்கும் அதிகமான இன்னிங்சில் விளையாட வாய்ப்பு பெற்றது, இந்திய கிரிக்கெட் வரலாற்றில் ரோகித் சர்மா ஒருவராகத் தான் இருக்கும். அப்படி இருந்தும் சொதப்பிக் கொண்டு தான் உள்ளார்.

மாற்றம் தேவை: தோனியை பொறுத்தவரை சரியான வீரர்கள் தேர்வு மற்றும் நிலைமைக்கு ஏற்ப பவுலர்களை பயன்படுத்த கற்றுக் கொள்ள வேண்டும். தென் ஆப்ரிக்காவுக்கு எதிராக ஹர்பஜனை தேர்வு செய்ய தவறினார். தவிர, இப்போட்டியில் துவக்க கட்டத்தில் ஸ்பின்னர்களை பயன்படுத்த தவறியதால், அரையிறுதி வாய்ப்பு பறிபோனது. விராத் கோஹ்லி இளம் வீரர் என்பதால், இன்னும் சில ஆண்டுகள் கேப்டனாக தோனியை தொடரச் செய்யலாம். அதேநேரம், தமிழகத்தின் முரளி விஜய், ரகானே உள்ளிட்டவர்களை சேர்க்கலாம். இந்த மாற்றங்களை எவ்வளவு சீக்கிரம் செய்கின்றனர் என்பதைப் பொறுத்து தான் இந்திய அணியின் எதிர்காலம் உள்ளது.

தோனியே காரணம்: முன்னாள் வீரர் சேட்டன் சர்மா கூறுகையில், என்னைப் பொறுத்தவரை இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேறாமல் போனததற்கு, ஒட்டு மொத்த இந்திய அணியை குறை சொல்ல கூடாது. தோனி மட்டுமே இதற்கு காரணம். இவர் ஒருவரே, இதற்கு பொறுப்பாவார். மழை மீது பழி போடுவதை நிறுத்த வேண்டும். முக்கியமான போட்டியில் ஹர்பஜன் சிங்கை களமிறக்காதது அதிர்ச்சி அளித்தது. அணியில் இருந்து இவரை விலக்கி இருக்கக்கூடாது, என்றார்.

ஐபிஎல் போட்டிகளால் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கு அச்சுறுத்தல்: கார்ல் ஹூப்பர்

ஐபிஎல் போட்டிகளின் மூலம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் அணித்தலைவர் கார்ல் ஹூப்பர் தெரிவித்துள்ளார். இந்தியாவில் நடைபெறும் டுவென்டி- 20 தொடரான ஐபிஎல் பிரபலமானது. இதில் உள்ளூர் அணிகளை சேர்ந்த வீரர்களுடன், வெளிநாட்டு வீரர்களும் இணைந்து போட்டிகளில் களமிறங்குவதால், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கு நிகரான புகழை பெற்றுள்ளது. இந்த நிலையில் ஐபிஎல் தொடர், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் அணித்தலைவர் கார்ல் ஹூப்பர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், இன்றைய கிரிக்கெட் உலகை அதிகமாக அச்சுறுத்தும் தொடராக இருப்பது ஐபிஎல். இதனால் சிறந்த வீரர்களின் ஆட்டத்தை மட்டுமே பார்க்க பார்வையாளர்கள் விரும்புகின்றனர். ஆனால் என்னை பொறுத்த வரை ஒரு கிரிக்கெட் போட்டியை பார்க்கும் போது கிறிஸ் கெய்ல் போன்ற முக்கிய வீரர்களை மறந்துவிட்டு பார்ப்பேன். மேற்கிந்திய தீவுகள் அணி வீரர்களான கிறிஸ் கெய்ல், சுனில் நரேன், பிராவோ ஆகியோர் ஐபிஎல் தொடருக்கான சொந்த நாட்டு அணியில் விளையாடுவதை விட்டுவிட்டனர். இவர்கள் ஐபிஎல் தொடர்களின் ஒப்பந்தம் முடிந்த பிறகு, அதை தொடராமல் சொந்த நாட்டு அணிக்காக விளையாட வேண்டும். மேற்கிந்திய தீவுகள் அணியின் ஒப்பந்தத்தில் சுனில் நரேன் இருந்தால், அவர் நாட்டு அணிக்காக தான் விளையாட வேண்டும். சர்வதேச அளவில் போட்டிகளில் மேற்கிந்திய தீவுகள் களமிறங்கும் போது, அதன் முக்கிய வீரர்கள் நாட்டு அணிக்காக ஆட வேண்டும். நான் ஒரு பழமை விரும்பி. என்னை பொறுத்த வரை ஒரு கிரிக்கெட் வீரர் டெஸ்ட் போட்டிகளில் நிதானமாக ஆடும் திறமையை கொண்டிருந்தால், அவரால் எந்த மாதிரியான போட்டிகளிலும் விளையாட முடியும் என்றார்.



எஸ். கணேஷ்




# அடுக்குமாடி கட்டிடங்களை காலம் தாழ்த்தும் கட்டிட நிறுவனங்கள்



2012 இன் இரண்டாம் காலப்பகுதியில் புதிதாக கட்டப்பட இருக்கும் அடுக்குமாடிக் கட்டிடத்தொகுதி அலகுகளின் விற்பனை குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளது. இந்த விற்பனை இறக்கத்திற்கு மிக முக்கிய காரணமாக July 09, 2012 இல் புதிதாக அரசினால் கொண்டுவரப்பட்ட அடமானக்கடன் சட்டங்களே. இதனால் ஏற்கெனவே விற்கப்பட்ட வீடுகளின் பெறுமதிகளிலும் இறக்கம் காணப்படுகின்றது. அடமானக்கடன் பெறுவதற்காக, வீட்டின் பெறுமதியை கணக்கிடும்போது (Appraisal) ஏற்கெனவே விற்கப்பட்ட சில வீடு மனைகளின் விலையை விட குறைவாக Appraisal Value பெறப்படுகின்றது. அதாவது Appraisal Value குறைவாகவே நிதி நிறுவனங்களிற்கு வருகின்றது. இதுவும் ஒரு காரணமாகலாம். (சில வீடுகளுக்கே இந்த நிலை ஏற்படுகிறது.)

இருந்தபோதிலும் வீடு வாங்க இருக்கும் பலர் வாங்குவதற்கான சரியான சந்தர்ப்பத்தை பார்த்து கொண்டு இருக்கின்றார்கள். அதிகளவு புதிய வரவாளர்கள், குறைந்த வட்டி வீதம், அரசின் சிறந்த பொருளாதாரக் கொள்கைகள் வீட்டின் விலையில் நீண்ட காலத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது என ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றர்.

இன்றைய காலத்தில் (ஒக்ரோபர் 2012) 420 கட்டித் தொகுதிகள் GTA இல் கட்டப்படுகின்றன. அல்லது கட்டுவதற்கான ஆயத்த வேலைகள் நடைபெறுகின்றன. பொதுவாக இந்த எண்ணிக்கை 325-350 கட்டிடத் தொகுதி ஆகவே காணப்படல் வேண்டும். 2012 இன் முதல் 8 மாதங்களில் மொத்தமாக 24,301 புதிய வீடுகள், மனைகள் விற்கப்பட்டன. ஆனால் 2011 இன் இதே காலப்பகுதியில் 30,412 வீடுகள், மனைகள் விற்கப்பட்டன. (இதேகாலப் பகுதியில் 2012 இல் 13,591 அடுக்குமாடி மனைகளும், 2011 இல் 18,055 அடுக்குமாடி மனைகளும் விற்கப்பட்டன.) 2012 இன் கோடைகால இறுதியில் விற்பனையில் இருந்த மொத்த வீடுகளின் எண்ணிக்கை 25,934. இதில் 19,984 அடுக்குமாடி மனைகளும் அடங்கும். பொதுவாக, அண்மைக்காலங்களில் சராசரியாக (25,000-30,000) மொத்த வீடு, மனைகளே சந்தையில் காணப்படுவது இயல்பு. இந்த எண்ணிக்கையில் அடுக்குமாடி மனைகளின் எண்ணிக்கையே அதிகமாகும்.

## நாமும் நமது இல்லமும்

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 376**

புதிய தொகுதிக் கட்டிடங்கள் ஏறக்குறைய 40-45 வரை இந்த வருட இறுதியில் விற்பனைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 4-6 தொகுதிக்கட்டிடங்களே விற்பனைக்கு வரலாம் என இப்பொழுது எதிர்பார்க்கப் படுகின்றது. பல நிர்மாண நிறுவனங்கள் விற்பனையை பின்போட்டுள்ளன. இருந்த போதிலும் எல்லோராலும் பல மாதங்களாக எதிர்பார்த்திருந்த TRIDEL நிறுவனத்தின், 10 York Street அடுக்குமாடிக்கட்டித்தொகுதி சந்தைக்கு வர

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


## HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

Raja Mahendran, P.Eng.

Broker / Owner



**5215 Finch Ave, E, #203, Toronto. Tel.:416.321.6969 & Traders Blvd #29, Mississauga - Tel.:905.712.2666**

### CONDO. FOR. SALE KENNEDY & HWY 401



1+ Den condo. 1 Parking. Close to HWY 401, mall. Asking Price $269,900

### CONDO FOR SALE NEILSON & MCLEVIN



1 Bedroom. 1 Washroom. 1 parking. Close to Malvern mall. Price $129,900

### BUSINESS SPACE FOR LEASE ON MAIN FLOOR



2000 sq.ft. 480sq.ft. Zoning for retail or professional office.

### HOUSE FOR SALE HWY 10 & STEELES



3 Bedroom freehold town house. Possible bsmt apartment. Possible 2nd income. Price $349,900

### CONDO FOR SALE SALE DONMILLS & EGLINTON



2 Bedroom condo. 1 Washroom. Close to science center. Price $139,900

### HOUSE FOR SALE 14TH & BOX GROVE - MARKHAM



3 Bedroom house. Sep. entrance possible. 5 Years new. 1760 Sq.ft. Hardwood floor.

# வாகனம் ஓட்டும் தவறுகளில் சிறைத் தண்டனைகள்!

## கனடிய தகவல் தொடர் 182

## *JAIL SENTENCES FOR DRIVING OFFENCES*

வாகனமோட்டும் தவறுகளில் கனடாவில் காவல் துறைகளின் கைகளில் பிடிபடும் போது பொதுவாக:

- தண்டனை ரிக்கற் (Fine Payment)
- புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் (Demerit Points)
- வாகன காப்புறுதிகளில் மேலதிக கட்டணங்கள் (Auto Insurance rate Increase)

போன்ற நிகழ்வுகளையும், தண்டனைகளையுமே பொதுவாக பலரும் சந்தித்த அனுபவங்களாக கடந்த காலங்களில் இருந்திருக்கும்.

ஆனால் அதற்கு மேலால் வாகனம் செலுத்தும் தவறுகளில் கனடாவில் சிறைத்தண்டனை வரை எதிர்கொள்ள வேண்டி வரலாம் என்ற செய்திகள் அறிந்து கொண்டீர்களா? (மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபட்டு சிறை செல்லும் நிகழ்வுகள் அல்ல) உதாரணத்திற்கு கனடிய ஊடகங்களில் வெளிவந்த சில செய்திகளை இங்கு குறிப்பிடுகின்றேன்.

**கை விலங்கிட்டு சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட மாணவி!**

இருபது வயது நிரம்பிய அந்த மாணவியை இருகைகளையும் பின்பக்கமாக பிணைத்து கைவிலங்கிட்ட நிலையில் நீதிமன்ற தீர்ப்பினை தொடர்ந்து பொலிசார் சிறை கூடத்தினை நோக்கி அழைத்துச் சென்ற அந்த காட்சியினை வீட்டில் அமைதியாக இருந்து தொலைக்காட்சியில் பார்த்த போது, அதனை பார்ப்பவர்கள் யாவருக்கும் ஒரு மௌனமான பெருமூச்சு மட்டுமே



வெளிவந்திருக்கும் என்பதில் சந்தேகமேயிருக்காது. ஏனெனில் இங்கு தீர்ப்பு இப்படித்தான் வழங்கப்பட்டது.

- இருபத்தியிரண்டு மாத சிறைதண்டனை?
- இரு வருடங்கள் தொடர்ந்து நன்னடத்தை.
- மேற்குறிப்பிட்ட தண்டனைகள் முடிவடைந்து பின்பு ஐந்து வருடங்களுக்கு வாகனம் செலுத்த தடை!

சரி! என்ன நடந்தது? அதுவே அடுத்த கேள்வி! அந்தக் குறிப்பிட்ட பெண் கடந்த டிசம்பர் 18, 2008 இல் அதிவேகத்தில் வாகனம் ஓட்டி உருவாகிய விபத்தில் சேர்ந்து போன சக மாணவி ஒருத்தி பலியாகினார். சேர்ந்து போன இன்னொருவர் படுகாயம். இவரும் எதிர்ப்பக்க வாகன சாரதியும் சிறு காயங்களுடன் தப்பிக் கொண்டனர். இந்த கொடிய விபத்து நியூபவுண்லாந்து மாகாணத்தின் தலை-நகரான ‘சென் ஜோன்ஸ்’ நகருக்கு அண்மையில் ‘ரான்ஸ் கனடா’ நெடுஞ்சாலையில் (Trans Canada High Way) நடந்தது.

‘ஏனையோரின் உயிர் பலிக்கு உடல் காயத்துக்கு காரணமான ஆபத்தான வாகன ஓட்டம்’ (Dangerous Driving Causing Death & Bodily Harm) என்ற கிரிமினல் குற்றசாட்டு பிரிவின் கீழ் இங்கு தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

**மூன்று பேரின் மரணத்திற்கு காரண-மான விபத்தில் சாரதிக்கு ஒரு வருட சிறை**

கடந்த ஆகஸ்ட் 08, 2010 இல் இந்த கொடிய விபத்து ஒன்ராரியோ மாகாணத்தில் உள்ள ‘ஓவென் சவுண்ட்’ (Owen Sound) என்னும் சிறுநகரில் ஒரு இளைஞனின் திகில் வாகனமோட்டம் ஒரே இடத்தில் மூன்று பேரினை பலி கொண்டது.

கிராமிய அமைப்பினை கொண்ட இச்சிறு நகரின் தனி ஒழுங்கை வீதியால் மழை நேரம் தமது நண்பன் ஒருவனையும் முன் சீற்றில் இருத்திக் கொண்டு அதிவேகமாக வாகனத்தில் திறில் ஓட்டம் காட்டினார். 19 வயது நிரம்பிய அந்த இளைஞன் சிறு நகரின் தனி ஒழுங்கை வீதிகளில் முன்னே போகும் வாகனம் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்ததால் அதனைக் கடந்து செல்வதற்காக எதிர்ப்பக்கமாக உள்ள மாறிச் செல்லும் ஒழுங்கையில் முந்தி அடித்துக் கொண்டு சென்றார். (Broken lane & Solid lane ares). இப்பகுதி மலைபோன்ற ஒரு மேடு உள்ள இடம். முந்தி அடித்து கடந்து செல்லக் கூடாத குறிப்பிட்ட அந்த இடத்தில் ஒரு மழை நேரம் கடந்து செல்ல முயன்றபோது எதிரே வந்த வாகனத்துடன் மோதியதில் சேர்ந்து போன அவரது நண்பன் பலி. எதிரே வந்த வாகனத்தில் வந்த தந்தையும் மகனும் பலி!

ஒரு வருட சிறை!
தொடர்ந்து மூன்று வருட லைசென்ஸ் தடை! என்ற தீர்ப்பு கடந்த செப்ரெம்பர் 04, 2012 இல் வழங்கப்பட்டிருந்தது.

‘மரணங்களுக்கு காரணமான கவனமில்லாத வாகன ஓட்டம்’ (Careless Driving Causing Death) என்ற குற்றச்சாட்டில், இக்குற்றங்களுக்கு அதிக பட்ச தண்டனையாக 14 வருடங்கள் சிறை வழங்கப்படலாம் என கனடாவின் ஆங்கில ஊடகங்கள் ஆரூடம் ஏற்கெனவே கூறியிருந்தன. ஏதோ நீதிதேவதை கொஞ்சம் இரக்கம் காட்டிவிட்டது.

**பேரூந்துக்கு நின்றவர்களை பலியாக்கி வாகன விபத்தில் சாரதிக்கு 18 மாத சிறை**

இது கடந்த செப்ரெம்பர் 16, 2010 இல் கனடாவின் தலைநகரான ஒட்டாவா நகரில் நடந்தது. 22 வயது இளைஞன் எங்கே வாகனமோட்டுகின்றேன் என்று தெரியாது வேக உந்தல் மிதி பெடலை (Accelerator Pedal) மிதிக்க இளைஞனின் வாகனம் பாய்ந்து வீதியோரமாக பஸ் வண்டிக்கு காத்து நின்ற பிரயாணிகளை கண் இமைக்கும் நேரத்தில் மோத அதில் அப்பாவியாக நின்றிருந்த தம்பதிகள் மரணமானார்கள். அந்த மரணத்தில் அனா-தையான அவர்களின் மூன்று புதல்விகளும் அதற்குரிய புகலிடத்தில் சேர்க்கப்பட்டனர்.

பொம்மை கார்களுடன் (Car Toys) விளையாடிய மாதிரி பையன் வாகனமோட்டத்தில் விளையாடியுள்ளான் என தீர்ப்பின் போது கண்டனம் செய்யப்பட்டு

- 18 மாத சிறை
- 200 மணித்தியாலம் கட்டாய சமூக சேவை

என தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேலே உதாரணத்திற்கு மூன்று சம்பவங்களை மட்டும் நீதித்துறை வரலாற்று சட்ட ஏடுகளிலிருந்து (Canadian Legal History Reports) தேடி எடுத்து இங்கு குறிப்பிட்டுள்ளேன். ஆனால் குறிப்பிடப்போனால் இன்னும் ஏராளமான சம்பங்களையும் இதே மாதிரியான செய்திகளையும் இங்கு குறிப்பிடலாம்.

**சரி! வாகனமோட்டும் தவறுகளில் எத்தகைய**



தொடர்ச்சி 10ஆம் பக்கம்

சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

**Sitham Sam Shanmugam** (Sales Rep.)
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

Brand New homes from builder detached 1900 sqft. double garage Price $285,000 London ON HWY 401 & University of Weston *10% Appreciation in 2 years expected

**Daisy Mart**
Brand New convenience store at Tim Hortons
North of Newmarket at Leslie Main Road

**LAND VALUE**
Luxuary homes with 5 acre land, North of Richmound hill, New market. HWY 404. Extention, 10 Acres, 50 acres, hobby farm.

**Scarborough Big lot's Investment**
உங்கள் 2 ஆது வீட்டை முதல் வீட்டில் இருந்து முதலீடு செய்யுங்கள்.
Rent will pay the mortgage.
Buy your 2nd home with your sleeping equity. We can handle your mortgage.

0 - 5 years Newer homes in Stouffville

**GAS STATION**
North of Barrie with property. Good income. Store + Apartment

# Annamalai University
# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

WITH COURAGE AND FAITH

"நம் கலாச்சாரத்தை நாமே காத்திடுவோம்! வளர்த்திடுவோம்!"

*"Promoting and preserving our culture for the next generation"*

## தமிழ் வகுப்புகள் இம்மாதம் ஆரம்பம்

- கனடாவில் தமிழ் மொழிக்கும் கலைக்கும் பெருமை சேர்க்கும் ஆசிரியர்கள்
- மூன்று வருடங்களில் BA, இரண்டு வருடங்களில் MA பட்டங்கள்!
- இந்தியாவின் புகழ்பெற்ற பல்கலைக்கழகத்தின் பட்டங்கள்
- தமிழில் PhD மேற்கொள்வதுற்கான வசதிகளும் செய்து தரப்படுகின்றன
- சைவ சித்தாந்தம், தமிழ் இதழியல், நாட்டுப்புறவியல் ஓர் ஆண்டு பட்டயப்படிப்பு




அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின்
முதல் தமிழ்த் துறை பேராசிரியர் (1931)

## Classes begin October! YOGA

- The Best Diploma in Yoga - Teachers Training Program in Canada!
- Year round classes, taught by one of Canada's leading Yoga specialist!
- Theory and Practical classes
- Weekend classes from September to July
- Classes conducted in English and Tamil



## NEW Correspondence Programs

The following programs are available through Annamalai University India. All certifcates and study materials will be issued from India through Canada Campus

**Post Graduate Programs**
- M.Ed. (Master of Education)
- M.A. English
- M.A. Sociology
- M.A. Economics
- M.A. Business Economics
- M.A. History
- M.A. Population Studies
- M.A. Political Science
- M.A. International Relations
- M.A. Human Rights
- M.A. Social Welfare Administration
- M.A. Linguistics
- M.A. Translation Studies
- M.A. Philosophy, Religion & Culture
- M.Com.
- M.S.W. (Master of Social Work)

**Under Graduate Programs**
- B.Ed. (Bachelor of Education)
- B.A. English
- B.A. English & Communication
- B.A. Economics
- B.A. Business Economics
- B.A. History
- B.A. History and Heritage Management
- B.A. Sociology
- B.A. Human Rights
- B.A. Social Welfare Administration
- B.A. Political Science
- B.A. Public Administration
- B.A. Social Work
- B.B.A. (Bachelor of Business Administration)
- B.B.A. Computer Applications
- B.Com

**PG Diploma in:**
- Business Administration
- Marketing Management
- Tourism Management
- Advertising
- Foreign Trade
- Entrepreneurship
- International Business
- Retailing
- Public Administration
- Human Rights

**Diploma in:**
- English Journalism
- Mass Communication
- Human Rights
- Social Welfare Administration
- Public Administration
- Self Help Group Management
- Food & Nutrition

**PLUS MORE PROGRAMS AVAILABLE THROUGH OUR CORRESPONDENCE PROGRAMS!**

**416-777-AUCC (2822) www.myAUCC.com**

1240 Ellesmere Rd. Unit 101 Scarborough Ont. M1P 2X4

Facebook @ www.facebook.com/myAUCC YouTube @ CanadaAnnamalai

# *GTA Square* இல் வெற்றிகரமாக நடைபெற்றுவரும் *Hero Catering* உணவகத்தின் ஆதரவில் வெளிவரும் கணிதம் சம்பந்தமான போட்டி

## செயல்முறை

01. கிடையான (Horizontal), நிலையான (Vertical) பெட்டிகள் ஒவ்வொன்றும் (1 - 4) வரையான இலக்கங்களால் நிரப்பப்படல் வேண்டும். ஒரு எண் ஒரு தடவை மட்டுமே பாவிக்கவேண்டும்.

02. தடிப்பான கறுப்பான கோடுகளாலான பெட்டிக்குள் இடதுபக்க மேல் மூலையில் காட்டப்படும் எண் மற்றும் செயல்பாடு (கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல்) எந்த ஒழுங்கிலாவது கணக்கிடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் உள்ள இலக்கம் பெறப்படல் வேண்டும்.

03. தனியானபெட்டியில் வரவேண்டிய இலக்கம் தரப்பட்டுள்ளது.

**விடைகள் விளம்பர பப்ளிகேஷன்ஸ் இற்கு *October 25* இற்கு முன்பாக தொலைநகல் *(Fax)*, அஞ்சல் *(Mail)* மின்னஞ்சல் *(E-mail)*** மூலம் **அனுப்பி வைக்க வேண்டும்.**

**சரியான விடையை எமக்கு அனுப்பியவர்களுள் ஒரு அதிஷ்ட சாலிக்கு $10 பெறுமதியான *Voucher* வழங்கப்படும். இந்த *Voucher* ஐ *Hero Catering* உணவகத்தில் பாவிக்கலாம். இதற்கு காசு பெறுமதி கிடையாது.**
(* Some conditions may apply)

• **போட்டி சம்பந்தமான விளக்கங்களுக்கு *(Any questions)*** 416.282.8059 **இல் தொடர்புகொள்ளவும்**

### போட்டி இலக்கம் - 2

| | | | |
|---|---|---|---|
| 6x | 3 | 3- | |
| | | 2÷ | |
| 2÷ | | 8+ | 1 |
| 3- | | | |

**போட்டி இல. 1 இல் வெற்றி பெற்றவர்** S. நிரஞ்சன் - மார்க்கம்

### விடை- போட்டி இலக்கம் _1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2- 3 | 1 | 1- 5 | 4 | 3÷ 6 | 2 |
| 3- 2 | 12x 4 | 3 | 5 5 | 5- 1 | 6 |
| 5 | 36x 3 | 2 | 6 | 4 4 | 3÷ 1 |
| 17+ 6 | 5 | 4 4 | 3+ 1 | 1- 2 | 3 |
| 4 4 | 6 | 5- 1 | 2 | 3 | 1- 5 |
| 3+ 1 | 2 | 6 | 2- 3 | 5 | 4 |

***Instructions***

1. Each row and each column must contain the numbers1 through 4 without repeating.
2. The numbers within the heavily outlined boxes, called cages, must combine using the given operation (in any order) to produce the target numbers in the top-left corners.
3. The number in the single-box cage is given.

**முன்னாள் பிரதமர் இந்திர காந்தி**

இந்திரா காந்தி காரில் செல்லும்போது அவர் கையில் எப்பொழுதும் பென்சிலும் அச்சடித்த காகிதமும் இருக்குமாம். அக் காகிதத்தில் இருக்கும் குறுக்கெழுத்து போட்டி (crossword) வெற்றிடங்களை பென்சிலால் நிரப்புவதுதான் இவரின் பொழுதுபோக்கு.

Crossword, pussle, Suduko, விளம்பரத்தின் கணிதப்போட்டி நாங்களும் முயற்சிக்கலாமே.

# வாகனம் ஓட்டும்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

**குற்றங்களுக்கு**

**சிறைத்தண்டனை வரை தீர்ப்பு கிடைக்கலாம்?**

1. முதலாவது மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபட்டால்! இது சகலருக்கும் தெரித்த விடயம்!

2. இன்னொருவருக்கு உடல் காயத்தினையோ அல்லது மரணத்தினையோ உருவாக்கும் கவனமற்ற ஆபத்தான வாகன ஓட்டம்! (Dangerous or Careless Driving Causing Bodily Harm or Death)

3. அதிவேக திறில் ஓட்டம் (Racing & Stunt Driving)

உதாரணமாக ஒரு வீதியில் சட்டரீதியாக வரையறுக்கப்பட்ட ஆகக்கூடுதலாக 60 Km/H என இருந்தால் (Legal Posted Speed) இங்கு
50 K.M / H மேலதிகமாக்கி அதாவது 110 K.M / H க்கு மேல் செலுத்தினால் இந்த குற்றச்சாட்டில் சிக்குப்படுவதிலிருந்து தப்பவேமுடியாது.

இங்கு
மூன்றாவதாக குறிப்பிடப்பட்ட 'அதிவேக திறில் வாகன ஓட்டம்' என்ற முட்டாள்தனமான சாதனையினை செய்யப்போய் பிடிபட்டால்?

1. உடனடியாக ஏழு நாட்களில் சாரதி அனுமதி பத்திரம் ரத்தாகும். ஏழு நாட்கள் எந்த வாகனத்தினை செலுத்தியிருந்தாலும் அந்த வாகனம் பறிமுதலாகும். இவற்றினை திரும்ப பெற அதற்கு ஒரு மேலதிக பண செலவு.

2. பண தண்டனை $2000 - $10,000 டொலர் வரை கிடைக்கும்.

3. நீதிமன்ற தீர்ப்பின் பின்பு இரு வருடங்கள் வரை சாரதி அனுமதி பத்திரம் ரத்தாகலாம்.

4. ஆறு புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்

5. தொடர்ந்து எதிர்காலத்தில் ஒழுங்காக வாகனம் செலுத்துவேன் என்ற காலம் கடந்த ஞானம் வந்தாலும் தவிர்க்க முடியாத அதி உச்ச வாகன காப்புறுதி விலை. இத்தகைய சிக்கல்களிலிருந்து தப்பிக்க ஒரே வழி! இந்த வேலை ஆபத்து என்பதனை புரிந்து கொண்டு அதனை செய்யாது விடுவதே! விளம்பரம் பத்திரிகை வாசகர்களுக்கு இது நல்ல முடிவுதானே?

# அடுக்குமாடி...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

இருக்கின்றது. ஏறக்குறைய 800 மனைகள் இந்த கட்டிடத் தொகுதியில் விற்பனைக்கு வரலாம் என தெரியவருகின்றது. இந்தக்கட்டிடமே ரொறொன்ரோவில் அதிஉயரமானதாகக் காணப்படலாம்.

## மார்க்கம் நகரில் புதிய *MARKHAM CENTRE*

ஆகஸ்ட் 2010 இல் மார்க்கம் முதல்வர் (Mayor) இன் உருவாகிய கனவு இன்று நனவாகின்றது போலத் தோன்றுகின்றது. ஏறக்குறைய 300,000 மக்களை தன்னகத்தே கொண்ட மார்க்கம் நகரம் புதியதொரு கட்டிடத்தை கென்னடி மற்றும் பெரும்தெரு 407 (Kennedy/Highway 407) பகுதியில் பிரமாண்டமாக கொண்டுவருகின்றது.

பெரும்தெரு 407 இல் இருந்து பெருந்தெரு 7 வரையும் கென்னடியிலிருந்து வோர்டன் வரையான பகுதி மார்க்கத்தின் புதிய டவுண்ரவுணாக பரிணாமம் பெறுகின்றது. இந்தப்பகுதியில் Markham Centre நிர்மாணிக்கப்பட இருக்கிறது.

### *Markham Centre* பற்றிய சில தகவல்கள்

1. நிர்மாணச் செலவு - $325 மில்லியன் (ஏறக்குறைய)
2. பாவிக்கூடிய வசதிகள் - விளையாட்டு நிகழ்வுகள், களியாட்ட நிகழ்வுகள், சமூக (Community) நிகழ்வுகள்
3. இருக்கைகள் - 20,000 (Seats)
4. அமையும் இடம் - கென்னடி / HWY 407
5. கார்த்தரிப்பு இடங்கள் - 4400
6. Markham Centre நிறைவேற எதிர்பார்க்கும் காலம் - 2015 ஆரம்பம்

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
**Cell: 613 850 9931**
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
**Buying or Selling**
**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**

**நந்தா ஐயாத்துரை**
***Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555***

# கலையரசி 2012

ஐப்பசித்திங்கள் ஆறாம் நாள் Marham Theatre of Performing Arts மண்டபத்தில் கலையரசி விழா வெகுசிறப்பாக நடைபெற்றது. தமிழர் பாரம்பரியத்திற்கு ஏற்ப மங்கல விளக்கேற்றலுடன் குறித்த நேரத்தில் ஆரம்பமானது. தொடர்ந்து தேசியகீதத்தை வைஸாலி கிருஸ்ணானந்தன் இசைத்தார். அடுத்து கல்லூரிக்கீதத்தை உணர்வுபூர்வமாக Dr. தயாநிதி மைதிலி இசைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து வந்தோரை வரவேற்கும் நம் தமிழர் பண்பாட்டிற்கு ஏற்ப உபதலைவர் கதிர்காமநாதன் அவர்கள் வரவேற்புரையை முறைப்படி வழங்கினார். மேலும் பரதக்கலைச்சுடர் ரெபெக்கா ரவீந்திரன் வரவேற்பு நடனத்தால் பார்வையாளர்களை மகிழ்ச்சிக்கடலில் மிதக்க வைத்தார். இவ்விழாவில் பொன். பாலேந்திரா அவர்கள் தலைமை உரை வழங்கினார். அவர் தம் தலைமை உரையில் தமிழர் தலை நிமிர் கழகமாகவும் கலைபயில் கழகமாகவும் இருந்து தாயக மக்களுக்குத் தொடர்ந்து உன்னத சேவை செய்ய வேண்டுமானால் பழைய மாணவர்களாகிய எமது பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது எனக்குறிப்பிட்டார். மேலும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி கனடா பழைய மாணவர் சங்கம் யாழ். இந்துவுக்கு வழங்கிய உதவிகள் பற்றிக்குறிப்பிட்டார். தொடர்ந்து நாட்டிய நர்த்தகி வனிதா குகேந்திரன் அவர்களின் கலைக்கோயில் இளங்கலைஞர் ஒன்றியம் மனதைக்கவரும் நடன நிகழ்ச்சியை வழங்கினார்கள். யாழினி ராஜகுலசிங்கம் தனித்துவமான தனி நடனத்தால் அவையோரை மெய்மறக்கச் செய்தார். பவித்திரா லோகேஸ்வரனின் நடனமும் குறிப்பிடத்தக்க வகையில் சிறப்பாக அமைந்தது. ஏழிசை மதுர சபா மாணவர்களின் வீணை இசை மிகச்சிறப்பாக இருந்தது. பூங்குழலி இளங்குமரனின் மாணவர்கள் "மழை" என்னும் தொனிப்பொருளில் மிக அற்புதமாக நடனமாடினார்கள். வழமைபோல யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் "இரு பக்கங்கள்" என்னும் நாடகத்தை வழங்கினர். புலம் பெயர் தமிழ் மக்கள் வாழ்வில் திருமணம் தொடர்பான பிரச்சினையை மையமாகக்கொண்ட சமகாலத்துக்கு ஏற்ற வகையில் அமைந்த நாடகத்தை அரங்கேற்றினர். அதில் நடித்தவர்கள் அத்தனை பேருமே தத்தம் பாத்திரங்களுக்கேற்ப சிறப்பாக நடித்துள்ளார்கள். மேலும் இந்நிகழ்வில் Mega Tuner இசையில் Super Singer Juniors புகழ் மகிசா, சரிக்கா அவர்களுடன் கனேடிய கலைஞர்கள் இணைந்து இசைநிகழ்ச்சியை வழங்கினார்கள். சபையோர் இசைமழையில் நனைந்து பரவசம் அடைந்தனர். பிரதம விருந்தினராக கலந்துகொண்ட திரு.செல்லையா யோகமூர்த்தி அவர்கள் தம் பிரதமவிருந்தினர் உரையில் யாழ். இந்துக்கல்லூரியில் தான் கல்வியை பயின்றிராவிட்டால் இத்தகைய ஓர் உயர்ந்த நிலைக்கு வந்திருக்க முடியாது என்றும் தான் பல்கலைகழகம் சென்றிருக்கமுடியாது என்றும் யாழ். இந்து அன்னையை நன்றியுடன் நினைவு கூர்ந்தார். மேலும் யாழ். இந்துக்கல்லூரியின் பெருமைகள் பற்றியும் சபையோர் மனம்கொள்ளும் வண்ணம் கூறினார். அத்துடன் மேன்மைதங்கிய பிரித்தானிய மகாராணியினால் பிரித்தானிய சாம்ராச்சியத்தின் அங்கத்தவர் என்று கௌரவிக்கப்பட்ட இவர் மிகவும் தன்னடக்கமாக தமது உரையை வழங்கியது சபையோர் மனதை மிகவும் கவர்ந்திருந்தது.



**- றஞ்சி கதிர் -**

யாழ். இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம் கனடா நடத்திய மாணவர்களுக்கான கணிதம், பொது அறிவு, தமிழ் போட்டிகளுக்கான சான்றிதழ்களும் அதில் கூடிய புள்ளிகள் பெற்றவர்களுக்கு பரிசில்களும் இவ்வைபவத்தில் வழங்கப்பட்டன. super singer Juniors புகழ் மகிசா, சரிக்கா இருவரையும் கௌரவித்து பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்த வேளையில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்த திரு. திருமதி தியாகராசா அவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். நிகழ்ச்சித்தொகுப்பாளர்களாக கணேஸ், காயித்திரி ஸ்ரீகதிர்காமநாதன், ஆகியோர் சிறப்பாக நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்கள்.

கலையரசி விழாவை சிறப்பாக நடத்த உதவிய அத்தனை பேருக்கும் நன்றி உணர்வோடு செயலாளர் தயாநிதி அவர்கள் நன்றி உரை வழங்கினார். கலையரசி விழா குறித்த நேரத்தில் நிகழ்ச்சிகள் யாவுமே எந்தவித தடங்கல்கள் எதுவும் இன்றி இனிதே நடந்து முடிந்தது.

Train to be a ...
Community Service Worker With CO-OP

Other Diploma Programs:
Computerized Accounting
THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE
Network Engineering
Microsoft | IT Academy Program
Business Administration
Medical Office Assistant
EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome
Customized Corporate Training available for:
MS-Office 2003, 2007, 2010
Upgrade MS-Office 2003 to 2007 or 2010
Microsoft server 2003 and 2008 Subjects
A+ Certification / Cisco CCNA
OACC PROUD MEMBER
ontario association of career colleges
You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179
citi COLLEGE
www.CitiCollege.ca
Call Now: (416) 840-9179
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005
Financial Assistance may be available to those who qualify

# Universal Community Help

### *1. EXPRESS METRO HOUSING*

வருமானம் குறைந்தவர்களுக்கும், Shelter இல் வசிப்பவர்களுக்கும், முதியவர்கள், தனியே வாழ்பவர்கள், தனிப்பெற்றோர் புதிய குடிவரவாளர்கள் அனைவருக்கும் கூடிய விரைவில் 4 கிழமை தொடக்கம் 3 மாதங்களில் Subsidized House பெற்றுத்தருவோம்.

### *2. WALKER OR WHEEL CHAIR OR SCOOTE*

இதனுடன் Washroom உட்பட 15,000 டொலர் பெறுமதியான பொருட்களை குறைந்தது 3 மாதத்தில் பெற்றுத்தருவோம். WALFARE OR O.D.S POR WSIB OR PENSION இருப்பவர்கள் உடனே விண்ணப்பிக்கவும். அரச அனுமதி பெற்ற Occupational Therapist ஒருவர் எம்முடன் இணைந்து கடமையாற்றுகிறார். June 7, 8, 16, 18, 23, 25 ஆகிய திகதிகளில் விசேட நேர்முகத் தேர்வுகள் உண்டு.

### *3. FOOT CARE CLINIC*

கால்களில் பல்வேறு காரணங்களால் பாதணிகள் பாவிக்க முடியாமல் இருப்பவர்களுக்கு Free Medicated Shoes 3 மாதங்களில் பெற்றுத் தருவோம்.

4. இலங்கை, இந்தியத் தூதரகங்கள் ஊடாக உங்களுக்குத் தேவையான கடவுச்சீட்டு, அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு, விவாக மரண விவாகரத்துப் பத்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

5. கனடியக் குடிவரவு சட்டப்படி Sponcer செய்து தாமதமாக இருப்பவர்களுக்கு துரிதப்படுத்தி வரவசதி செய்து கொடுக்கப்படும். இலங்கை இந்திய பாகிஸ்தானியர்களும் தொடர்பு கொள்ளலாம்.

6. Separation ஆக இருப்பவர்கள் அனைவர்க்கும் Quick Divorce Certificate வசதி செய்து தரப்படும். இருவரும் தனித்தனி அல்லது இருவரும் முன் கூட்டியே அனுமதி பெற்று வரவும்.

7. எமது பயிற்சி பெற்ற வைத்தியர்கள் மூலம் Special Diet Allowance Form அத்தாட்சிப்படுத்திக் கொடுக்கப்படும்.

8. நீண்டகாலமாக Tax Return பெற்றுக் கொள்ளாமல் தவறவிட்டவர்கள் Special Re Tax Return Service மூலம் Revenue Canada பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும்.

### 9. தானம் - தர்மம் - தொண்டு

புதிய குடிவரவாளர்களே ***Vegetarian Food Bank or U.C.H or Thiruchchenchdoor Murugan Temple*** தொண்டர்களுடன் இணைந்து கொள்வதன் மூலம் அரச உதவியாக 6 மாதப் பணமாக 600 டொலரையும் முதல் மாதம் மேலதிகமாக 250 டொலரையும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள சகல சேவைகளுக்கும் ஆகக் குறைந்த அலுவலகக் கட்டணம் அறவிடப்படும்.

### *10. Food handling certification certified food handle training.*

### *11. UCH Legal Clinic*

## தொடர்புகளுக்கு: *416.744.3011*

***Office Hours -*** 11.00 Am to 4.00 Pm
***Monday to Sunday -*** 416.744.4357
12.00pm to 10.00 pm
***Monday to Sunday -*** 416.554.5040
9.00 am to 9.00 pm
***Special hot line***

***Unite - B - 5***
***2370 Midland ave***
***Midland & Sheppard***
***M1S 5C6***

***Unit - E***
***3005 Isilington Ave.***
***Steel & Isilingtion***
***M9L 2K9***

# சிற்பியின் உளிகள்

## ஓடும் நீர் உறைவதில்லை 153

நாம் காணும், காலால் மிதிக்கும், கடந்து செல்லும் கற்கள் அத்தனைக்குள்ளும் சிலைகள் இருக்கின்றன என்ற உண்மையை சாதாரணமாக நாம் உணர்ந்து கொள்வதில்லை. கற்கள் கற்களாக இருக்கும் போது அதன் சிறப்பியல்பு எதுவும் வெளிப்படுத்தப்படுவ தில்லை. ஏனெனில் அந்தக் கல்லுக்குள் இருக்கும் சிலை எது என்பது பற்றி எந்தக்கருத்தும் எமக்கு எழுவதில்லை. ஆனால் சிற்பி ஒருவரது கல்லின் மீதான பார்வை முற்றிலும் மாறுபாடானது. அவரது கண்ணுக்குத் தெரிவதெல்லாம் அழகான சிலைகள் தான். கற்களல்ல.

கல்லில் இருந்து வடிக்கப்படும் சிலையின் சிறப்பைப் பொறுத்தது அதற்கான மதிப்பு அளிக்கப்படுகிறது. சிலகற்கள் காட்சிப் பொருட்களாக்கப்படுவதற்காக மிருகங்கள் பறவைகளாக வடிவமைக்கப்படுகின்றன. சிலகற்கள் உத்தமர்களது உருவச்சிலை களாகி ஊர் மக்களது மரியாதைக்கு உள்ளாகிறது. சில கற்கள் கடந்த காலச் சரித்திரங்களைச் சித்தரிப்பனவாகின்றன. சிலகற்கள் தெய்வச் சிலைகளாகி வணக்கத்திற்குரியனவாகின்றன. பலகற்கள் பயன்படாமல் காலப்போக்கில் மண்ணாகின்றன. மண்ணாகிப் போவது

**KG Master**-kgmaster@rogers.com
www.kgmaster.com

மட்டுமல்ல கல்லாக இருந்த அடையாளத்தையும் முற்றாக இழந்து விடுகின்றன.

ஒரு கல்லானது சிலையாவதற்கு ஒரு சிற்பியின் கற்பனாசக்தி அடிப்படை யாகின்றது. அந்தக் கற்பனா சக்தியின் ஆழம், அதுபற்றிய தெளிந்த அறிவு, அந்தச் சிலையின் உருவ அமைப்பு பற்றிய உணர்வுடன் கூடிய ஒரு உறுதிப்பாடு என்பன அந்தக் கல்லுக்குள் இருக்கும் அழகிய சிலைக்கு ஒரு சிறப்பைக் கொடுக்கின்றது. இங்கு ஒரு சிற்பியின் உணர்வுகளின் உயிரோட்டம் அவர் பாவிக்கும் உளிகளால் அந்தக் கல்லின் மீது செதுக்கப்படுகின்றது. இவ்வாறு பயன்படுத்தப்படும் உளிகள் அவர் எதிர்பார்க்கும் அந்தச் சிலையின் உருவ அமைப்புக்குத் தேவையான வகையில் வேறுபட்ட அளவையும், உருவ அமைப்பையும் கொண்டவையாக இருக்கும். இந்த உளிகள் அளவிலும் உருவத்திலும் வேறுபட்டவையாக இருப்பினும் உறுதி யானவையாக இருப்பது தவிர்க்கப்பட முடியாதது.

சிற்பி ஒருவரது உளிகளின் கூர்மை, உரம், உறுதிப்பாடே ஒரு கல்லின் தேவையற்ற பகுதிகளை அகற்ற உதவுகிறது. உளியும் வலிமையானது, கல்லும் வலிமையானது. இரண்டு வலிமையானவற்றுக்கிடையே இடம்பெறும் போராட்டம், அப்போராட்டத்தின் மூலம் ஏற்படும் வலி என்பன தவிர்க்கப்பட



முடியாதவையாயினும் இறுதியில் உருவச்சிலை செதுக்கப்பட்டதும் அத்தனை வலிகளும் மறந்துபோய்விடும். சிலையின் சிறப்பும் அந்தச் சிறப்பில் கிடைக்கும் ஆனந்தமும் சிற்பிக்கல்ல. சிலைக்கே சென்றடைகின்றது. ஏனெனில் சித்திரம் ஒன்றை வரைந்தவரது பெயர் சித்திரத்தின் ஏதோ ஓர் இடத்தில் குறிப்பிடப்படுவது போல் சிலையை வடித்த சிற்பியின் பெயர் சிலையில் இடம்பெறுவதில்லை.

இங்கு கல், சிற்பி, உளி, சிலை என்று குறிப்பிடப்படுவதெல்லாம் நமது வாழ்க்கையில் தவிர்க்கப்படமுடியாதவை மட்டுமல்ல, நம் அனைவருக்குமான தார்மீகப் பொறுப்புமாகும். ஒரு சிலையின் சிறப்பு அதன் வடிவமைப்பில், அந்தச் சிலை வெளிப்படுத்தும் கருத்துக்கள், உணர்வுகள் என்பவற்றின் அடிப்படையில் அளவிடப்படு கின்றது. சிலை ஒன்று வடிக்கப்பட்ட தும் அது கருங்கல்லாக இருந்தது என்ற உணர்வு கூட நம்மிடம் எழுவதில்லை. எனவே சிலை ஒன்றின் சிறப்புக்கு அடிப்படைகளாக அமைபவை சிற்பியின் கற்பனாசக்தியும் அவர் பயன்படுத்தும் உளிகளும் அதன் வலிமையும் ஆகும் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

இப்போது நாம் ஒவ்வொருவரும் சிற்பிகள் என்பது பலருக்குப் புரியாததாக இருக்கும். நாம் ஒவ்வொருவரும் கல்லைச் சிலையாக்க வேண்டிய தவிர்க்க முடியாத கடப்பாடு உடையவர்கள் என்பது தெரியாமல் இருக்கும். கல்லைச் சிலையாக்குவதற்கு தேவையான உரம் வாய்ந்த உளிகள் எவை என்பது தெளிவற்றதாக இருக்கும். இதனால் தான் சிலைகளைப் செதுக்க முயற்சித்து செதுக்குவதற்குப் பதிலாகப் பலர் சிதைக்கிறார்கள்.

இங்கே பெற்றோராகிய நாம்தான் சிற்பிகள். குழந்தைகள் தான் கற்கள். எமது எதிர்பார்ப்பு, கற்பனாசக்திதான் குழந்தைகள் எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும் என்ற விருப்பம். நமது மனோபாவங்கள் தான் குழந்தைகளைக் செதுக்கும் உரம் வாய்ந்த உளிகள்.

இனி வாழ்வியலுக்குள் வருவோம். ஒவ்வொரு குழந்தையும் பிறந்தவுடன் அந்தக்குழந்தையிடம் என்ன சிறப்பியல்புகள் இருக்கின்றன என்பதை வெளிப்படுத்துவதில்லை. அல்லது இவ்வாறு தான் உருவாக்கப்படவேண்டும் என்ற ஒரு கையேட்டுடன் வருவதில்லை. எனவே குழந்தைகள் மனோபாவ அடிப்படையில் எதையுமே வெளிப்படுத்த முடியாத, வெளிப்படுத்தாத கற்கள்.

பெற்றோர்கள் அதாவது சிற்பிகள், குழந்தை பிறந்தவுடன் உள்ளத்தில் உருவாகும் தமது கற்பனா சக்தியின் மூலம் அக்குழந்தை எதிர்காலத்தில் எப்படி இருக்க வேண்டும் என்ற எண்ணக்கருத்துக்களின் பிறப்பிடம். பெற்றோர்கள் சிந்தனைச் சிற்பிகள் மட்டுமல்ல மனோபாவ அடிப்படையில் கற்களாகப் பிறக்கும் குழந்தைகளை மனோபாவ உளிகளால் செதுக்கிச் சிறப்புமிக்க சிலைகளாக உருவாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பும் உடையவர்கள். குறிப்பாகக் கூறுவதாயின் சிற்பிகளாகிய பெற்றோர்கள் கற்களாகிய குழந்தைகளை மனோபாவம் (Attitude) எனும் உளிகளின் பயன்பாட்டால் மட்டுமே சிறப்பான சிலைகளாக வடிக்க முடியும். எனவே சிற்பியும், கற்களும் சிறந்த கற்பனாசக்தியும் இருப்பினும் உரம் வாய்ந்த உறுதியான உளிகள் இல்லாவிட்டால் சிலைகள் செதுக்கப்படு வதற்கு பதிலாக சிதைக்கப்பட்டு விடும்.

ஒவ்வொரு பெற்றோரும் தமது குழந்தைக-ளைச் சிறப்பாக வளர்த்துச் சிறந்த எதிர்காலம் ஒன்றை அவர்கள் சொந்தமாக்க வேண்டும் என்பதில் அதிகளவு ஆர்வம் கொண்டவர்களாவே இருப்பார்கள். குழந்தைகளின் சிறப்பான எதிர்காலத்துக் காகத் தம்மை இயலுமானவரை அர்பணித்துக் கொள்கிறனர். பெற்றோர்களை தாம் பிறந்ததற்கான காரணத்தை அறிந்திராவிட்டாலும் தாம் வாழ்வதற்கான காரணத்தை அடிக்கடி நினைவு கூர்வார்கள். அதாவது பிள்ளை களுக்காகத் தான் வாழ்கிறோம் என்பார்கள். அப்படியாயின், ஏன் ஒவ்வொரு குழந்தையும் சிறப்பான சிலைகளாக உருவாக்கப்படுவ தில்லை. ஏன் பெரும்பாலான குழந்தைகள் வழிதவறிவிடுகிறார்கள்?

ஆம் வாசகர்களே!
சிற்பியும், கல்லும், சிறந்த கற்பனாசக்தியும் மட்டும் சிலையை வடிப்பதில்லை. உறுதியானதும், உரமானதும், கூர்மை யானதுமான உளிகளும் பயன்படுத்தப் படுவதன் மூலமே சிலைகள் வடிக்கப்படுகின்றன. இந்த உளிகள் தான் பெற்றோர்களது சிறந்த மனோபாவங்கள். தன்னம்பிக்கை, தாழ்வு மனப்பான்மை யின்மை, தளராத முயற்சி, நேர்த்தியான சிந்தனை, நேர்மை, உண்மை, சிறந்த நட்பு, தன்னைப்பற்றிய உயர்வான மதிப்பும் எண்ணமும், தன்னலமற்ற சேவை மனப்பாங்கு, வெற்றிமனோபாவம் போன்ற உரமான உறுதிவாய்ந்த உளிகளால் குழந்தைகளைச் செதுக்குங்கள். இவ்வாறு செதுக்கும் போது கல்லுக்கும் வலிக்கும். உளிக்கும் வலிக்கும். ஆனால் சிற்பியே ஆச்சரியத்தக்க வகையில் சிலை உருவாகும். அந்தச் சிறப்பான சிலையால் சிலைக்கும் சிறப்பு சிற்பிக்கும் சிறப்பு. அதுமட்டுமல்ல குழந்தைகளாகிய சிலைகள் சிற்பிகளாகிய பெற்றோர்களை மட்டுமல்ல பெற்றோர்களின் மனோபாவங்களாகிய உளிகளையும் உலகுக்கு வெளிப்படுத்திக் கொண்டிருப்பார்கள். பெற்றோர்களே! சிறந்த சிலையின் உருவாக்கத்திற்கு சிறந்த மனோபாவ உளிகளின் பயன்பாடு அவசியம் என்பதால் உரமானதும், உறுதியானதும் கூர்மையானதுமான உளிகளின் உரிமையாளர்களாகுங்கள்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



**மஹாராஜியின் உரைகள்**

**On DVD**
இலவச DVDக்கு அழையுங்கள்
**(416) 431-5000**
**1 877 707 3221**

**On TV**
**Saturdays at 11:00 am**
**Rogers Cable Channel - 20**
**Bell Express vu Channel - 219**

# ஆபத்தான அறிகுறியில் இருந்து தப்பித்துக் கொள்ள நோயாளர் அக்கறையின்றி இருப்பது ஏன்?

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

நமது உடலில் ஏற்படும் உபாதைகளைப் பற்றி சிலர் கவனம் எடுப்பது பெரும்பாலும் குறைவு எனக் கூறலாம். தவறின் பல தீங்குகள் ஏற்பட்டு உயிரை இழக்கும் நிலையும் ஏற்படலாம். எனவே நமக்கு ஏற்படும் நோய்க்குரிய உபாதைகளைப்பற்றி அறிந்து கொள்வது நன்மை பயக்கும் எனக் கருதுகின்றேன்.

முதற்கண் நமது நெஞ்சுப் பகுதியில் ஏற்படும் 'நோய்' தன்மையைப் பற்றிப் பார்ப்போம். சிலவேளையில் இதனைச் சாதாரணமாக நினைத்து இந் நோ நின்றுவிடும் எனக் கருதி பராமுகமாக இருந்து கொள்பவர்களும் இருக்கின்றார்கள். இந்தச்சிந்தனை நமக்குப் பெரும் ஆபத்தை உண்டாக்கி விடும். இந்நிலை ஏற்படும் போது தாமதியாமல் தங்கள் குடும்ப வைத்தியரிடம் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.

பெரும்பாலும் தற்காலநிலையில் முதியவர் களுக்கு இருதயவியாதி ஏற்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. எனவே இந்த நெஞ்சுப்பகுதியில் ஏற்பட்ட 'நோ' இருதய வியாதியின் ஆரம்ப அறிகுறியாகவும் அமையலாம். இப்படிப்பட்ட இருதய வியாதியானது உரியவர் தங்கள் வயது, உடல்நிலை என்பவற்றைக் கவனிக்காது மற்றோர் செய்கின்றார்கள், நாங்களும் செய்தால் என்ன? எனச் சிந்தித்து உடற்பயிற்சிகளைச் செய்வதும் உண்டு. இது தவறான செய்கையாகும். உரியவர் தங்கள் குடும்ப வைத்தியரை நாடிச்சென்று உடல் நிலைக்கும் வயதிற்கும் ஏற்ப எப்படிப்பட்ட உடற்பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும், அதனைச் செய்யும் போது எவ்வளவு நேரம் கையாள வேண்டும் என்பதையும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். இதனால் திருப்தியான மனநிறைவைப் பெறமுடியும். பயிற்சிகள் பலவுண்டு என்பதை நாம் நன்கு அறிவோம். நாம் எதனைக் கையாளவேண்டும் என்பதைத் தங்கள் வைத்தியர்கள் கூறிக் கொள்வார்கள். இதனால் நாம் எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். வைத்தியர் களின் ஆலோசனையின்றிப் பயிற்சிகளைச் செய்யும்போது சில வேளைகளில் இருதய வியாதி கூட ஏற்படலாம். இந்நோய்
தொடர்பான அறிகுறிகள் யாதெனில் நெஞ்சுப் (மார்பு) பகுதியை அமுக்கின்ற மாதிரி நிலை தென்படும். நெஞ்சுப்பகுதி இறுக்கத்துடன் நோவும் காணப்படும். இப்படி ஏற்பட்ட நோ கழுத்துப் பகுதி பெரும்பாலும் இடப்பக்கம், முதுகுப்பக்கம் தொடர்ந்து கைப்பகுதியிலும் வேதனை தென்படலாம்.

சுவாசநிலையும் சோர்வுநிலையை அடையத் தொடங்கி விடும். இதனால் சுவாசிப்பதற்கு கஸ்டம் ஏற்படும். அத்துடன் வியர்வைத் துளிகளும் தென்படும். அத்துடன் நின்று விடாமல் ஓங்காளமும் இடையிடையே வந்த வண்ணம் இருக்கும். இந்நிலைகள் சாதாரணமாக இருப்பின் தங்கள் வைத்தியரிடம் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். ஆனால் உரியவரின் நோய் நிலை கடுமையாக இருப்பின் தாமதிக்காமல் வைத்தியசாலைக்குச் செல்வதே சாலச் சிறந்தது. இத்தன்மையான நோயைச் சார்ந் தவர் வாகனம் செலுத்த முற்படக் கூடாது என்பதையும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். இதனால் நற்பயன் உண்டு.

இப்படி இருதய வியாதியுள்ளோர் தங்கள் குடும்பத்தில் யாருக்காவது இருதயவியாதி ஏற்பட்டிருந்தால் அதனை தெளிவாகத் தங்கள் வைத்தியர்களிடம் கூறிக் கொள்ள வேண்டும். உரியவர் பேசமுடியாத நிலையில் இருந்தால் அவருடன் செல்லும் உருத்துடையோர் மறக்காமல் விபரம் கூறிக் கொள்வது மிகநன்று.

அடுத்து நமது பற்களின் பதிவுக்குக் காரணமாக அமைந்துள்ள முரசுப்பகுதியில் இரத்தம் வடிதல். இதனைச் சிலர் சாதாரணமாக நினைத்து வைத்தியம் செய்து கொள்ளத் தவறுவதும் உண்டு. இந்நிலை நாளடைவில் மனக்கவலையை ஏற்படுத்தியும் விடலாம். சில சந்தர்ப்பங்களில் இவரின் இரத்தத்தை பரீட்சித்துப் பார்க்கும்போது அது புற்று நோய்க்குரியதாகவும் அமையலாம் என அறிய முடிகின்றது. அதாவது இரத்தத்தில் உள்ள கலங்களில் ஏற்பட்ட புற்று நோய் எனவும் கூறப்படுகின்றது. எனவே எதற்கும் அறிகுறிகளை அவதானித்து செயல்படுவது உத்தமமாகும். பயவுணர்வுகளைத் தவிர்த்தல் வேண்டும். காலதாமதம் கஸ்டத்தை ஏற்படுத்தும். மற்றோர் எம்மை வித்தியாசமாக கருதுவார்கள் என்ற எண்ணத்தை தவிர்த்து நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள விரைவாகச் செயல்பட வேண்டும்.

அடுத்து நித்திரைக் குழப்பம். இதுவும் ஒரு பிரச்சினையாகும். உழைப்பில் அதிகம் ஈடுபடுதல், மன அழுத்தத்துடன் வாழ்கை நிலை, சிலநோய் நிமிர்த்தம் நித்திரை யின்மை ஏற்படலாம். பெரும்பாலும் மனநிலை பாதிக்கப்படுவதை சாதாரண வைத்தியர்கள் கண்டு கொள்வதை விட உளவளத்துறை நிபுணர்கள் கண்டு கொள்வது இலகுவாகும். அவர்களிடன் சென்று பரீட்சித்து பயன் பெறுவது மிகமிக நன்மை பயக்கும்.

மன அழுத்தம் (Depression) பெரும்பாலும் முழுமையாக வெளிக்காட்டப்படா-தவையாகும். இந்நிலை படிப்படியாக அதிகரித்துச் செயல்முறையில் மாற்றம், சுறுசுறுப்பு அற்றுக் காணப்படும். உண்மையான நிலைகளை ஏற்க மறுப்பது போன்றவையும், தான் செய்யும் வேலைகளில் விருப்பமின்மையும், நண்பர் களுடன் உறவில் பாதிப்பு, வேலைசெய்யும் அலுவலகங்களில் சக ஊழியர்களுடன் தொடர்பு மந்தநிலை அடைதல், மனநிம்மதியற்ற நிலையில் குடிப்பழக்கம் அதிகரிப்பு, போதைப் பொருட்களைத் தேடிக் கையாளுதல் போன்றவற்றை விரும்பி பின் தங்கள் உயிரைத் தாங்களாகவே இழக்க தற்கொலை செய்யும் நிலையும் ஏற்படலாம்.

நித்திரை தொடர்பான பிரச்சினையில் நித்திரைக்குச் செல்லும்போது நித்திரை வராரதினால் தலைப்பகுதியை அளவுக்கு மிஞ்சி உயர்த்திப் படுப்பதினால் இருதயவியாதி ஏற்பட இடமளிக்கும் என அறியமுடிகின்றது. தலைப்பகுதி அதிகம் உயர்த்துவதில் பாதங்களுக்கு இரத்தம் அதிகம் செல்லும் எனவும் இரத்தத்தில் ஏற்படும் அழுத்தத்தை குறைக்க முடியும் என ஆய்வுகள் கூறுகின்றன.

மேலும் நாம் மருந்துகள் சிலவற்றைப் பாவிக்கும் போது வைத்தியர்களின் ஆலோசனையின்றிப் பாவிப்பதும் உண்டு. இது தவறான செய்கையாகும். இதனால் எமக்கு நாமாகவே துன்பத்தை விளைவித்துக்கொள்ளுகின்றோம். உ+ம் தலையிடி, தலைச்சுற்று, தொண்டை நோ, ஒவ்வாமையால் ஏற்படும் சர்மத்தில் தளும்புகள், தேமல், சுவாசக்கஸ்டம்



என்பவை சில வியாதிகளுக்கு முன் அறிகுறியாகவும் அமையலாம். இதனைச் சிலர் கவனிப்பதில்லை. இதனால் நாமே நமக்கு ஆபத்தை தேடிக் கொள்ளுபவரா கின்றோம். எனவே முக்கியமாக வைத்தியர்களின் ஆலோசனைக்கு அமைய மருந்துவகைகளை எடுப்பதினால் நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ளமுடியும்.


இன்னும் சிலருக்கு மலம்கழிப்பதில் சிரமம் உண்டு. வழமைக்கு மாறாக மலம்கழித்தல் அடுத்தடுத்து மலம் கழிதல், மலம் வரட்சியுடன் கழிதல், மலம் கழியும் போது இரத்தக்கறை படிந்து காணுதல் போன்ற நிலைகள் இருப்பதினால் வைத்தியர்களின் ஆய்வு மிக முக்கியமாகும். பெரும்பாலும் வயிற்றுப் புண், மூலவியாதி (உள்மூலம்) போன்ற நிலையில் வயிற்றில் புற்றுநோய் ஏற்பட்டிருந்தாலும் இந்நிலை தென்படும்.

எனவே எதற்கும் முற்கூட்டி வைத்தியர்களின் பரிசோதனையுடன் வைத்தியம் செய்து கொள்வது மிக நன்மையாகும்.

**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.707.4378



TUTORING
By Qualified & Experienced Tutors
KEEN TUTORING CENTRE
GRADE 6 - 12, IB , MCAT, UNIVERSITY 1st & 2nd YEAR
➢ SCIENCE, PHYSICS, CHEMISTRY, BIOLOGY
➢ MATH, FUNCTIONS, CALCULUS & VECTORS
➢ DATA MGT, ENGLISH & FRENCH
Call ( 647) 341 3975 / (647) 869 3974

ELECTRICAL WORKS

FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# காலத்தோடு வளரும் கணினிகள் - 7

என் அன்புக்குரிய வாசகர்களே!

சொற்பரிமாற்றம் (Word Processing) செய்வதற்கான மென்பொருட்கள் பயன்படு மென்பொருட்களில் (Application Softwares) மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், அதிகமானவர்கள் பயன் படுத்துவதாகவும் உள்ளது. நுகர்வோர் கணினிக்குரிய சொற்பரிமாற்றத்திற்கான மென்பொருளாக Wordstar 3.0 1982 இல் வெளிவந்தது. இதிலிருந்து மூன்று வருடங்களுக்குள் Wordstar உலகில் அதிகம் பிரபல்யம் வாய்ந்த ஒரு மென்பொருளாக விளங்கியது. ஆனாலும் WordPerfect என்ற மென்பொருளின் வருகை Wordstar இனது பிரபல்யத்தை ஓரளவுக்கு குறைத்து விட்டது என்று கூறலாம். 1983இல் Microsoft Word 1.0 சொற்பரிமாற்றத்திற்கான மென்பொருளை மைக்கிரோ சொவ்ற் (Microsoft) நிறுவனம் வெளியிட்டதைத் தொடர்ந்து பலரும் இந்த மென்பொருளை பாவிக்கத் தொடங்கினார்கள். பயன்படு மென்பொருட்களின் வளர்ச்சியைப் பொறுத்தளவில் மென்பொருள் உற்பத்தியா-ளர் கைக்கொள்ளும் ஒரு வழக்கத்தை நாம் அறிந்து கொள்வது முக்கியமானது என நினைக்கின்றேன். ஒரு குறிக்கப்பட்ட பயன்படு மென்பொருளை உருவாக்கியதன் பின்னர் தொடர்ச்சியாக ஆய்வு செய்து கொண்டேயிருப்பார்கள். சில காலத்திற்குப் பின்னர் குறிக்கப்பட்டளவு மாற்றத்துடன் முந்திய மென்பொருளின் அடுத்த வெளியீடாக புதிய பெயரில் அல்லது முன்னைய பெயருடன் புதிய release அல்லது version ஆக வெளியிடுவார்கள். இதன் காரணமாகவே ஒவ்வொரு மென்பொருளின் வளர்ச்சியை நாங்கள் தொடர்ந்து கவனிக்கக்கூடியதாக உள்ளது. இந்த வழக்கம் மென்பொருள் உற்பத்தியா-ளர்களின் சந்தையை விரிவுபடுத்தும் நோக்கில் செயற்படுத்தப்படும் ஒரு உக்தியாகவும், புதிதாக உருவாகும் மென்பொருட்களினால் ஏற்படும் போட்டி யினைச் சமாளிக்கும் ஒரு உக்தியாகவும் நாங்கள் அவதானிக்கலாம். இவ்வாறாக ஒரு மென்பொருள் வருடந்தோறும் வளர்ச்சி யடைந்து செல்வதும், புதிய புதிய மென்பொருட்கள் உருவாகின்றமையும் நுகர்வோர் தொடர்ச்சியாகக் கணினிக் கல்வியில் ஈடுபட வேண்டிய தேவையை உருவாக்கி விடுகின்றன.

ஒரு கணினியை இயக்குவதற்கு பயன்படுத்தப்படும் மென்பொருளை இயக்க அமைப்பு மென்பொருள் (Operating System Software) என அழைக்கின்றோம். IBM இன் நுகர்வோர் கணினி (IBM personal Computer) பாவனைக்கு வந்ததும் மைக்கிரோ சொவ்ற் உருவாக்கிய Disk Operating System (DOS) இந்தக் கணினிகளுக்கான இயக்க அமைப்பு மென்பொருளாக விளங்கியது. அதன் பின்னர் காலத்துக்கு காலம் வெவ்வேறு Versions வெளிவந்து 1994ஆம் ஆண்டிற்கிடையில் DOS 6.22 வரை சென்றன. இதன் பின்னர் Windows Operating system வெளிவந்தது. 1989ஆம் ஆண்டு Windows Operating System வெளிவந்த பொழுது Microsoft Word 1.0 for Windows வெளிவந்தது. இதன் பின்னர் இந்த மென் பொருள் காலத்திற்கு காலம் பல versions ஆக வெளிவந்து Microsoft Word 6.0 for Windows வரை சென்றது. 1995ஆம் ஆண்டில் Windows 95 வெளிவர அதற்காக Microsoft Word 95 வெளி வந்தது.



காலத்தோடு வளரும் கணினிகள் தொடர் கட்டுரையில் கணினியின் வன்பொருள் (Hardware) பற்றிய வளர்ச்சியையும், மென்பொருள் (Software) பற்றிய வளர்ச்சியையும் நாங்கள் கவனிக்க வேண்டியுள்ளது. கணினியில் தொட்டு உணரக்கூடிய பாகங்களை வன்பொருள் என அழைக்கின்றோம். மென்பொருள் என்றால் Softwares or Programs ஆகும் எனக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். ஒரு கணினியில் எந்தத் தொழிலைச் செய்வதிலும் மூன்று பிரிவினர் ஈடுபடுவார்கள். முதலாவது வன்பொருள், அடுத்தது மென்பொருள். மூன்றாவது நுகர்வோர் (Liveware). மென்பொருள் இல்லாது வன்பொருள் மட்டும் இருப்பது பெற்றோல் இல்லாத காரின் நிலையைப் போன்றது. காரை ஓட்டுவதற்கு சாரதி வேண்டுமாப்போல் கணினியை இயக்குவதற்கும் ஒரு நுகர்வோர் தேவைப்படும்.

கணினிகளில் உள்ள வெவ்வேறு வகை களை அவற்றின் பருமனைக் கொண்டு கவனிப்போம். பருமனில் பெரிதான main-frame computers ஒரு அறையளவு பருமனைக் கொண்டது. இதற்கு அடுத்ததாக mini computers வீடுகளில் உள்ள ஒரு குளிர் சாதனப் பெட்டியின் அளவைக் கொண்டது. ஒரு மேசையின் மேல் வைத்துப் பாவிக்கப்படக்கூடிய அளவு கொண்ட கணினிகளை Desktop Computers என்போம். இவை அளவில் சிறியதாகவும், நுகர்வோரால் எளிதாகப் பாவிக்கக் கூடிய தாகவும் இருந்ததால் Personal Computers என அழைக்கப்பட்டன. காலம் செல்லச் செல்ல அளவில் சிறியதாக பல்வேறு Personal Computers பாவனைக்கு வந்தன. இவை பற்றி இப்பொழுது கவனிப்போம். எங்கள் காலின் தொடைப் பகுதியில் வைத்து பாவிக்கப்படக்கூடிய கணினிகளை Laptop Computers என்றும், குறிப்புப் புத்தகம் போலாக மெல்லிய கணினிகளை Notebook computers என்றும், கையில் வைத்துப் பாவிக்கக்கூடிய கணினிகளை Palmtop Computers என்றும் அழைக்கின்றோம். 1981ஆம் ஆண்டு நுகர்வோர் கணினிகள் எனப்படும் Personal Computers வெளிவந்த பின்னர் காலத்தோடு சிறிய அளவினதான பல்வேறு வகையான கணினிகள் வந்து விட்டன.

IBM நுகர்வோர் கணினியை (IBM PC) அறிமுகம் செய்ததன் பின்னர் பல்வேறு நிறுவனங்கள் இதைப்போன்ற கணினிகளை (clones) உருவாக்க முனைந்ததின் விளைவாக IBM PC compatibles வரத்தொடங்கின. இன்று Compaq, Gateway, Dell, Sony, Toshiba, HP, Acer எனப் பல்வேறு நிறுவனங்கள் உருவாக்கும் வெவ்வேறு வடிவங்களிலும், அளவுகளிலும் வந்து கொண்டிருக்கின்றன. அளவில் சிறிய-தாக ஆனால் அதிக சக்தி வாய்ந்த கணினிகள் வந்து கொண்டிருப்பதை நாங்கள் கவனிக்கலாம். ஒரு கணினி IBM Compatible என்று சொல்லும்பொழுது அவை ஒரே இயக்க அமைப்பு மென்பொருளினால் (Operating System Software) இனால் இயங்கக் கூடியவை யாகவும், ஒரேவிதமான பயன்படு மென்பொருட்களை ஏற்கக் கூடியதாகவும் இருக்கும். இவ்வாறான IBM clone கணினி-களை IBM family என்ற ஒரு குடும்பமாகக் கருதுவதுண்டு. உலகில் 95 வீதமானவை இவ்வாறான கணினிகளே என பொதுவாகக் கூறப்படுகின்றது. மறுபுறம் மிகுதி 5 வீதமானவை apple family கணினிகள் வித்தியாசமான இயக்க அமைப்பு மென் பொருளையும், பயன்படு மென்பொருட்களை யும் கொண்டு இயங்குகின்றன. அன்பான வாசகர்களே. தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப் படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி.

வணக்கம்.

தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com

TBC Toronto Business College
Dedicated to excellence

DIPLOMA PROGRAMS

Accounting & Payroll Admin.
35 weeks
Computerized Accounting
26 weeks
Personal Support Worker
26 weeks
Medical Office Administrator
32 weeks



★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity Benefits பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
Tuition Fees,Books,Living Expenses,
Day care & Transportation அனைத்தும் இலவசம்

Windows,Word,Excel,Power Point,Access
Quick Books,Simply Accounting,Accpac
Food Handler, First Aid & CPR, CSC & Stocks

416-291-5155
4465 Sheppard Ave. East #208
[ Sheppard & Brimley ] Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# நால்வர் நான்மணி மாலை

கடவுள் வணக்கம்

வேல்முருகன் முன்னுதித்த விநாயக வேளே
நால்வருக்கு யானியற்றும் நான்மணி மாலை
பால்கரும்பு மோதகம்முப் பழச்சுவை போலே
சால்புறநின் தண்ணருளைத் தந்தருள் வாயே.

## நூல்

வெண்பா

தமிழ்ஞான சம்பந்த சற்குருவே நின்றன்
அமுதான தேவார மான - சமுத்திரத்தில்
தோய்ந்ததால் தொற்றித் தொடர்ந்த வினையாவும்
மாய்ந்தமைக் கென்னோகைம் மாறு. (1)

கட்டளைக் கலித்துறை

மாறாத நோய்களும் மாறி யுடல்நல வாழ்வுபெறும்
ஆறாத வைம்புல வேடரும் ஆறி அடங்கநெஞ்சில்
ஊறாத அன்பும்வந் தூறுமுன் தேவாரம் ஓதுகையில்
சூறாவ ளித்தொண்டில் தோய்ந்த திருநாவுத் தூயவரே. (2)

விருத்தம்

தூயவர் உள்ளத் தாலே
சுந்தரர் தோற்றத் தாலே
வாயதன் வலிமை யாலே
வன்றொண்டர் என்னும் நாமம்
நேயவர் வழங்கப் பெற்று
நித்தமும் அவரின் தோழர்
ஆயவர் சொற்ற மிழ்நம்
அழுக்குகள் கழுவும் ஊற்றே. (3)

அகவல்

ஊற்றா யமுதை உடையவன் தன்னை
ஆற்றா தெண்ணி அழுதே அனுபவ
வாசகம் தந்த வாதவூர் ஐயவுன்
வாசகந் தானுமோர் வற்றா ஊற்றே
ஊற்றினில் இவ்விதம் உருக்கம் ஊறுமோ
ஆற்றினில் இவ்விதம் அன்பு பாயுமோ
அழுவதில் இவ்வித ஆனந்தம் உண்டோ
தொழுவதில் தூங்காத் துணிவுமொன் றுண்டோ
ஐயா உனையளந் தறிய
மெய்யாய் மேலும் வேண்டும்பல் பிறப்பே! (4)

வெண்பா

பிறப்பதனிற் சைவப் பிறப்பொன்றே மேலாம்
பிறப்பென்னும் உண்மை பிறங்க - சிறப்புறவே
வையத்திற் சைவம் வளர வழிசெய்தார்
தெய்வச்சேய் காழியர்கோன் தேர். (5)

கட்டளைக் கலித்துறை

தேரில்லை பல்லக்கு மில்லை திருவடி தேயத்தேய
ஊருள்ள கோயில்கள் உள்ளி நடந்துளம் ஊறவன்பால்
நேரினில் கண்டிறை வன்தனை நீர்வர நெக்குருகி
ஆர்வுறப் பாடிய அப்பர் தமிழ்துணை ஆருயிர்க்கே. (6)

விருத்தம்

உயிரினும் சிறந்த தோழர்
உதவியை நாடி வந்த
துயர்களைத் துடைத்து வாழ்ந்த
சுந்தரர் தாமும் செய்த
உயர்வுறு வாக்கை மீறி
உரியதண் டனையைப் பெற்ற
நியதியை நினைக்கச் சைவ
நீதியும் விளங்கு மாமே. (7)

கவிஞர் வி. கந்தவனம்



# சுன்னாகம் ஸகந்தவரோதயா கல்லூரியின் வரலாற்றில் தடம் பதித்து ஓய்வு பெறும் அதிபர்

## திரு. ஆறு. திருமுருகன்

1993 ஆம் ஆண்டு ஸ்கந்தாவின் ஆசிரியர் பணியினை ஆரம்பித்து அக்கல்விக் கூடத்தினையும், மாணவர்களையும் உருவாக்கிய பலரில் முதன்மையானவர். (குறிப்பாக ஸ்கந்தாவின் மாணவர்கள் எவரேனும் இராணுவத்தின் பிடியில் அகப்பட்டால் அவர்களை மீட்பதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகள் ஏராளம்)

ஆசிரியராக, உப அதிபராக நாலரை ஆண்டுகள் அதிபராக கல்லூரி சூழலில் சுமார் இரு தசாப்தங்கள் பணிபுரிந்து, வரலாற்றில் தமக்கென ஒரு தடம் பதித்து இவ்வருடம் நிரந்தமாக தமது 51 வது வயதில் ஓய்வு பெற்றாலும் நூற்றாண்டுகள் பல கண்ட கல்லூரியின் சரித்திரத்தில் இவரின் சுவடு எல்லோர் மனதிலும் நிலைத்திருக்கும்.



- கல்லூரியினுள் புகும் வாசலில் அழகான நுழைவாயில் வளைவு! (Beautiful Entrance Arch)
- புதிய பிரதான மண்டபம்
- கல்வி கூடத்தினுள் புகும் மாணவர்கள் யாவரும் தினமும் கண்ணெதிரே எதிர் கொள்ளும் கல்விக்கடவுள் சரஸ்வதி சிலை.
- மாணவர்கள், ஆசிரியர்கள் யாவரும் ஆலய வழிபாடு செய்துவிட்டு வகுப்பறைக்குள் செல்லும் மரபினை உருவாக்குவதற்காக கல்லூரி வளவினுள் ஸ்கந்தனுக்கு ஓர் ஆலயம்.
- ஸ்தாபகர் சிலை & 2500 அடி நீளமாக மதில்
- நிர்வாக தேவைகளுக்கு போட்டோ, பிரதி இயந்திரம், மின்சாரம் வழங்கும் சாதனம், ஒலி பெருக்கி சாதனம்

கடந்த இரு தசாப்தங்களில் ஏற்பட்ட மேற்குறிப்பிட்ட வசதிகளுக்கும் அவற்றின் மாற்றங்களில் எல்லாம் அதிபர் திரு. ஆறு திருமுருகனின் பங்களிப்புகள் ஏராளம் ஆகும்.

இடப்பெயர்வு காலங்களில் இடம்பெயர்ந்த இடங்களிலும் கல்வியினை மேம்படுத்த ஏனையோருடன் இணைந்து வகுப்புகளை நடத்தினார். போர் சூழல் காலங்களில் போக்குவரத்து வசதிகள் தடைப்பட்ட நேரத்தில் திருகோணமலையில் நடந்த தேசிய மட்டத்திற்கான தமிழ் தின விழாவில் பங்குபற்றும் மாணவர்களை கப்பலில் அழைத்து சென்று அவர்களும் பங்கு பற்றும் ஒழுங்குகளை செய்தார். பாடசாலையின் சிரமதான வேலைகளில் பல தடவைகளில் அவர் ஒரு தொழிலாளியாகவும் செயல்பட்டார். முக்கியமாக வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிகளில் அவர் ஒரு வழிகாட்டும் தீபமாக இருந்தார்.

கனடாவுக்கு இரு தடவை வருகை தந்து பழைய மாணவர் சங்க உறுப்பினர்களை சந்தித்து அவர்களின் உதவிகளை உபயோகித்து பரிசளிப்பு விழாக்களை நடத்தினார். அமெரிக்காவில் இருக்கும் பழைய மாணவர்களை தனிப்பட்ட ரீதியில் சந்தித்து கல்லூரியின் பணிகளுக்காக அவர்களின் பங்களிப்புக்களை பயன்படுத்தி னார். கல்லூரியின் வளர்ச்சிக்கும், மாற்றங்களுக்காகவும் அரசாங்கத்திடம் மட்டுமல்லாது வெளிநாடுகளில் வாழும் பழைய மாணர்களின் கரங்களை கல்லூரியுடன் இணைத்தார்.

## சிவ. பஞ்சலிங்கம்

ஆலயத்தினையும், பூஜைகளையும் ஈழத்தின் மரபுரீதியான இந்து மதக் கோட்பாடுகளை மட்டும் செய்யாமல் மக்கள் பணி தொடர வேண்டும் என்ற பாதையினை உருவாக்கிய இந்துமத துறவியான சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வழிநின்று தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய தலைவர், அதன்பின் 'சிவபூமி அறக்கட்டளை மையம்' என ஆரம்பித்து அதன் கீழ் சிறுவர் மனவிருத்தி பாடசாலை, முதியோர் இல்லம், மருத்துவ பாசறை, அனாதை குழந்தைகளின் இல்லம் இப்படியான பல பணிகளை முழுமையாக தொடர்வதற்காக தமது கல்லூரி பணியிலிருந்து இவ்வருடம் ஓய்வு பெறுகின்றார்.

ஏற்கெனவே தொடர்ந்து வரும் ஆத்மீக, சமூக பணிகளை முழுமையாக தொடர்வதற்காக ஸ்கந்தவரோதயா கல்லூரியோடு சேர்ந்த ஆசிரியர், அதிபர் பணியிலிருந்து இளைப்பாறினாலும், கல்லூரியின் வரலாற்றில் ஏறக்குறைய பத்தொன்பது ஆண்டு கால அவரது பணி என்றும் மனதில் நிற்கக்கூடிய ஒரு தடயம் என்றால் அதற்கு இரு கருத்து இருக்க முடியாத உண்மையாகும்.

# குளிர்காய்ச்சலும், குளிர்காய்ச்சல் தடுப்பூசியும்

## குளிர்காய்ச்சல் என்றால் என்ன?

புளு (flu) என்று பரவலாக அறியப்படும் குளிர்காய்ச்சல் (influenza) ஒரு நச்சுயிரியால் உண்டாவது. குளிர்காய்ச்சலால் பீடிக்கப்படுவோருக்கு காய்ச்சல், தடிமல், தசைநார் வலி, தலைவலி, தொண்டை நோ, மூக்கொழுகல், இருமல், பலவீனம், களைப்பு ஏற்படும். இந்நோய்க்குறிகள் இரண்டு முதல் ஏழு நாட்கள் வரை நீடிப்பது வழக்கம். இருமலும் பலவீனமும் ஆறு கிழமைகள் வரை நீடிக்கக்கூடும். வயது முதிர்ந்தவர்களுக்கு காய்ச்சல் ஏற்படாது போகலாம். சிறுவர்களுக்கு குமட்டல், வாந்தி, வயிற்றுப்போக்கு போன்ற வயிற்று நோய்க்குறிகள் ஏற்படக்கூடும்.

## குளிர்காய்ச்சல் பீடிக்கும் ஆபத்தை எதிர்நோக்குவோர் யார்?

குளிர்காய்ச்சல் எவரையும் பீடிக்கக்கூடும். இதனால் பீடிக்கப்படுவோருள் அநேகர் கடுமையாக நோய்வாய்ப்பட மாட்டார்கள். எனினும் குளிர்காய்ச்சல் பீடிக்கும் ஆபத்தை அதிகம் எதிர்நோக்குவோர் உபநோய்களால் மிகவும் பாதிக்கப்படுவர்: இரண்டு வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள், இரண்டு முதல் நான்கு வயதும், உடல்நலமும் கொண்ட பிள்ளைகள், 65 வயதும், அதற்கு மேற்பட்ட வயதும் கொண்டவர்கள் தாதிமை அகங்கள் (nursing homes), அல்லது நீடித்த பராமரிப்பு நிலையங்கள் (chronic care facilities) என்பவற்றில் வசிப்பவர்கள், நீரிழிவு, புற்றுநோய், நுரையீரல் நோய், இதய நோய், சிறுநீரக நோய் போன்ற நீடித்த நோய் பீடித்தவர்கள் கர்ப்பிணிகள், பழங்குடிமக்கள், உடற்பருமன் மிகுந்தவர்கள் அனைவரும் மிகவும் நோய்வாய்ப்படுவர். நுரையீரல் அழற்சி, காதில் நச்சுயிரி வகைகள் பீடித்தல், வறள்வு போன்ற உபநோய்களும், அரிதாக இறப்பும் ஏற்படும்.

## குளிர்காய்ச்சல் எவ்வாறு பரவுகிறது?

இருமல், தும்மல் துளிகள் மூலம் குளிர் காய்ச்சல் மிகவும் எளிதாகப் பரவுகிறது. முத்தமிடல் அல்லது கைகுலுக்கல் மூலமும், குளிர்காய்ச்சல் பீடித்த ஒருவர் தொட்ட புறங்களையோ பொருட்களையோ தொட்டு விட்டு, நச்சுயிரி படிந்த கையினால் உங்கள் கண்ணையோ மூக்கையோ வாயையோ தொடுவதன் மூலமும் அது பரவலாம்.

## குளிர்காய்ச்சலைத் தடுப்பதற்கு நான் என்ன செய்யலாம்?

ஆண்டுதோறும் குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றவும். பின்வரும் எளிய நடவடிக்கைகள் மூலம் உங்களைப் பாதுகாக்கவும். உங்கள் கைகளைக் கழுவவும் உங்கள் கைகளைத் தவிர்த்து, வேறொரு பொருளினால் மூடி இருமவும் அல்லது தும்மவும் கையழுக்குடன் உங்கள் கண்ணையோ, முக்கையோ, வாயையோ தொடுவதைத் தவிர்க்கவும் நோய்வாய்ப்பட்டவர்களுடன் நெருங்கித் தொடர்புகொள்வதைத் தவிர்க்கவும் நோய்வாய்ப்பட்டால் வீட்டிலேயே தங்கியிருக்கவும் நன்கு ஓய்வெடுக்கவும் உடற்செயல் புரியவும் நீரம் வகைகள் அதிகம் பருகவும் சத்துணவு உண்ணவும்.

## குளிர்காய்ச்சல் தடுப்பூசி என்றால் என்ன, அது என்ன செய்யும்?

ஆண்டுதோறும் மூன்று குளிர்காய்ச்சல் வகைகள் பீடிக்காவாறு குளிர்காய்ச்சல் தடுப்பூசி (flu shot) பாதுகாக்கிறது. இந்த ஆண்டு H3N2, H1N1, B வகை குளிர்காய்ச்சல் பீடிக்காவாறு குளிர்காய்ச்சல் தடுப்பூசி பாதுகாக்கிறது. ஊசி மூலம் ஏற்றப்படும் குளிர்காய்ச்சல் தடுப்புமருந்தில் உயிருடன்கூடிய குளிர்காய்ச்சல் நச்சுயிரி



இல்லை. ஆகவே அதனை ஏற்றுவதால் உங்களுக்கு குளிர்காய்ச்சல் ஏற்படாது. தடுப்பூசி ஏற்றிய பின்னர், நச்சுயிரி பீடிக்காவாறு பாதுகாப்பு ஏற்படுத்த உங்கள் உடலுக்கு இரண்டு கிழமைகள் தேவைப்படும். இப்பாதுகாப்பு நான்கு மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் நீடிக்கும். குளிர்காய்ச்சல் தடுப்பூசியால் தடிமல், மற்றும் குளிர்காய்ச்சல் என்று தவறாகக் கருதப்படும் வேறு நச்சுநோய் வகைகள் பீடிக்காவாறு பாதுகாக்க முடியாது.

## கடந்த ஆண்டு நான் குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றினேன், இந்த ஆண்டும் நான் தடுப்பூசி ஏற்ற வேண்டுமா?

குளிர்காய்ச்சலை ஏற்படுத்தும் நச்சுயிரிகள் அடிக்கடி மாறுபவை. நீங்கள் ஆண்டுதோறும் தடுப்பூசி ஏற்றி உங்களைப் பாதுகாக்க வேண்டும். நீங்கள் கடந்த ஆண்டு H1N1 தடுப்பூசி ஏற்றியிருந்தாலும், உங்களை வேறு குளிர்காய்ச்சல் வகைகள் பீடிக்காவாறு பாதுகாப்பதற்கு இந்த ஆண்டும் நீங்கள் தடுப்பூசி ஏற்ற வேண்டும். இந்த ஆண்டுக்கான குளிர்காய்ச்சல்-தடுப்பூசி இரண்டு புதிய குளிர்காய்ச்சல் வகைகளுக்குரியது. இந்த ஆண்டு முன்வைக்கப்படும் தடுப்பூசி எதிலும், கடந்த ஆண்டுக்கான H1N1 தடுப்பூசியில் இடம்பெற்ற adjuvant எதுவும் இடம்பெறாது.

## குளிர்காய்ச்சல் தடுப்பூசியின் பக்க விளைவுகள் எவை?

குளிர்காய்ச்சல் தடுப்பூசி மிகவும் பாதுகாப்பானது. அநேகமான பக்க விளைவுகள் மிருதுவானவை. தடுப்பூசி ஏற்றிய இடம் நோதல், சிவத்தல், தலைவலி, களைப்பு, வேதனை போன்றவை அவற்றுள் அடங்கும். தடுப்பூசி ஏற்றி ஓரிரு நாட்களுள் பக்க விளைவுகள் தென்படும். கடுமையான பக்க விளைவுகள், ஒவ்வாமை விளைவுகள் ஏற்படல் அரிது. கடந்த ஆண்டுகளில் குளிர்காய்ச்சல்-தடுப்பூசி ஏற்றியோருள் ஒருசிலர் விழி-மூச்சுக்குழல் கோளாறுக்கு (Oculo-Respiratory Syndrome) உள்ளானார்கள். விழி-மூச்சுக்குழல் கோளாறினால் கண் சிவக்கும், இருமல், நெஞ்சுப் பிடிப்பு, மூச்சு முட்டு, குரல் கரகரப்பு, தொண்டை நோ, முகவீக்கம் உண்டாகும். தடுப்பூசி ஏற்றி 24 மணித்தியாலங்களுள் தோன்றும் இந்நோய்க்குறிகள் 48 மணித்தியாலங்களுள் மறையும். குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றுவதால் மிகவும் அரிதாகவே (பத்து இலட்சம் தடவைகளுள் ஏறக்குறைய ஒரு தடவையே) தசைநார்ப் பக்கவாதம் ஏற்படுத்தும் நரம்புக் கோளாறாகிய Guillain-Barré Syndrome தற்காலிகமாய் ஏற்படுவதாகக் கருதப்படுகிறது. நீங்களோ, உங்கள் பராமரிப்பில் உள்ள எவருமோ தடுப்பூசி ஏற்றி, பக்க விளைவுக்கு உள்ளானால், சிகிச்சை பெறவும்.

**தமிழ்: மணி வேலுப்பிள்ளை**

## யார் குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்ற வேண்டும்?

குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றாதிருப்பதற்கு மருத்துவ காரணம் இருந்தாலொழிய, பிறந்து ஆறு மாதம் கழிந்தோர் அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர் அனைவரும் இத்தடுப்பூசியால் நலம்பெற முடியும். நீங்கள் குளிர்காய்ச்சல் சார்ந்த உபநோய்கள் பீடிக்கும் ஆபத்தை அதிகம் எதிர்நோக்குபவர் (மேலே 'குளிர்காய்ச்சல் பீடிக்கும் ஆபத்தை எதிர்நோக்குவோர் யார்?' என்னும் கூறினைப் பார்க்கவும்), அல்லது குளிர்காய்ச்சல் சார்ந்த உபநோய்கள் பீடிக்கும் ஆபத்தை அதிகம் எதிர்நோக்கும் (சுகாதார பராமரிப்பு பணியாளர்கள், அத்தியாவசிய சமூக சேவை பணி யாளர்கள் போன்றவர்களுடன்) பணியாற்றுபவர் என்றால், தடுப்பூசி ஏற்ற வேண்டும்.

## நான் எத்தனை தடவைகள் தடுப்பூசி ஏற்ற வேண்டியுள்ளது?

வயது வந்தவர்கள் ஆண்டுதோறும் ஒரு தடவை தடுப்பூசி ஏற்ற வேண்டும். ஒன்பது வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் முன்னொரு பொழுதும் குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றவில்லை என்றால், ஒரு மாத இடைவெளிவிட்டு இரண்டு தடவைகள்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# யோகாவும் மருத்துவரீதியான பலன்களும்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

யோகாசனம் என்பது பல்லாயிரம் ஆண்டுகளாக உடல், மன ஆரோக்கியத்திற்காகப் பயின்று வரப்படும் ஒரு கலையாகும். இதனால் நமது தற்கால தேவைகளுக்கேற்ப உடல் கூறுகளையும் மனத்தின் தன்மைகளையும் செம்மைப்படுத்த முடிகிறது. நம்மிடமிருக்கும் மருத்துவம் சார்ந்த அனைத்து குறைகளையும் நீக்க உதவுகிறது.

ஒவ்வொருவரது உடற்கூறும் மற்றவரது உடற்கூறிலிருந்து மாறுபடுவதால் ஒருநோய் பலருக்கு ஏற்பட்டாலும் கூட ஒவ்வொருவருக்கும் அவரவரது உடற்கூற்றிற்கு ஏற்றவாறு சிகிச்சை முறையும் மாறுபடுகிறது. இன்றைய விஞ்ஞான உலகின் புதுப்பது கண்டுபிடிப்புகள் மனிதனின் உடல் ஆரோக்கியம் சம்பந்தமான பல நல்ல பலன்களைத் தந்து வருகிறது. ஆனால் மனிதனைப் பாதிக்கும் கொடிய நோய்கள் அவனது மனநிலையில் ஏற்படும் தாக்கத்தினால் தான் உருவாவதை மருத்துவ உலகம் ஏற்றுக் கொள்கின்றது. உடலுக்கும் உள்ளத்திற்கும் நேரடியான தொடர்புண்டு. எனவே அத்தகைய உடல் நோய்களைக் குணப்படுத்த மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்காக நோயாளிக்கு சக்திவாய்ந்த இரசாயன மருந்துகளைக் கொடுத்து நோயின் தீவிரத்தன்மையைக் குறைக்க முடிகிறது. இதற்கு எதிர்மாறாக அந்த மருந்தின் தாக்கம் பிறிதொரு நோயை உருவாக்குகிறது. இந்த நேரத்தில்தான் நோயாளிக்கு யோகாசன சிகிச்சை தேவையாகின்றது. இது எந்தவித பக்கவிளைவில்லாததுடன் இதன் பலன் நீடித்து நிற்க வல்லது. அத்துடன் இதற்கான செலவும் மிகவும் குறைவானது.

நோய் வாய்ப்பட்ட நோயாளி தொடக்க நிலையிலேயே யோகா பயிற்சியில் கவனம் செலுத்தினால் வியக்கத்தக்க பலனை அடைய முடியும். ஆனால் அது மருந்தினைப்போல உடனடியான பலனைக் கொடுக்காது சிலநாட்கள் செல்லத்தான் நிலையான பலன் கொடுக்கும். அத்துடன் மருந்துவகைகள் தற்காலிக பலனைத்தான் பெரும்பாலும் தரும். இருதயத்துடிப்பை கட்டுப்படுத்த வேண்டுமா? இரத்த ஓட்டத்தையோ அல்லது அழுத்தத்தையோ சீராக்க வேண்டுமா? உடல் எடையை தனது விருப்பப்படி கூட்டவோ குறைக்கவோ வேண்டுமா? இவற்றை எல்லாம் யோகா மூலம் மனிதன் தன் விருப்பப்படி நிறைவேற்றலாம். அத்துடன் சீரான யோகா பயிற்சியின் மூலம் கட்டிகளையும் புற்று நோய்களையும் குணப்படுத்தலாம். சுவாசத்தைக் சீராக்குவதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகிறது. தலைவலிகள் மற்றும் தசை நரம்பு வலிகள், வாத, பித்த, வாயு சம்மந்தமான உபாதைகள் சீர் செய்யப்படுகின்றன.

### நோய்கள் வராதிருக்க வழிமுறைகள்

மனித உடலின் இராஜ உறுப்புகளாக மூளை, இதயம், நுரையீரல் (Lungs), சிறுநீரகங்கள் (Kidney), கல்லீரல் (Liver) என்பன விளங்குகின்றன. இவற்றுள் ஏதேனும் ஒன்று பாதிக்கப்பட்டு அதனோடு தொடர்புடைய மற்றைய உறுப்புகளில் தாக்கம் ஏற்படும் போதுதான் அங்கு நோய் உருவாகின்றது. வந்த நோயானது பல நாட்களாக குணமடையாதிருந்தால் அதன் தாக்கம் உடலின் நரம்பு மண்டலங்களைப் பாதித்து வேறு பல நோய்களையும் தோற்றுவிக்கலாம். எனவே மேற்கூறிய ஐந்து இராஜ உறுப்புகளையும் செம்மைப்படுத்தி சீராக இயங்கச் செய்வதே யோகாவின் முதல் நோக்கம். இதன்போது உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து ஆரோக்கியத்தை மேலோங்கச் செய்கிறது.

### ஒழுக்கம் - மன ஒருமைப்பாடு

வளரும் குழந்தைகளுக்கு ஒழுக்கத்தைக் கற்றுத்தர வேண்டியது மிக அவசியம். அவர்களுக்கு எவ்வளவு சீக்கிரம் யோகாசனப்பயிற்சி அளிக்கிறோமோ அவர்களுக்கு இளம்வயதில் தோன்றும் நோய்கள் நீங்குகின்றன. உடல் வளையும் தன்மையுடையதாகிறது. சக்தி விரயமாவதைத் தடுக்கிறது. களைப்பு நீங்குகின்றது. ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்கின்றது. மனம் அமைதி பெறுவதால் அதை ஒருமுகப்படுத்தும். ஆற்றல் உருவாகின்றது. இதனால் கல்வியில் முன்னேற முடிகிறது. தீய பழக்கங்கள் நீங்குகின்றன.



### மருத்துவ முறையிலான யோகாசனங்கள்

யோகா சிகிச்சை முறையில் ஒரு குறிப்பிட்ட நோயை நீக்குவதற்கு ஒரு சில ஆசனங்களின் அட்டவணைகள் இருக்கின்றன. அதனைத் தேர்ந்தெடுத்து ஆரம்பத்தில் ஒரு யோகாசன ஆசிரியரின் உதவியுடன் பழகியபின் அவற்றை தினமும் பயிற்சி செய்து வரும்போது வியக்கத்தக்க பலன்கள் விரைவில் அடையலாம்.

### யோகாவும் உணவு கட்டுப்பாடும்

உடல் ஆரோக்கியத்திற்கு உணவு முறைகளை எவ்வாறு தேர்ந்தெடுப்பது அதனை எப்படி? எவ்வளவு உண்ண வேண்டும் உண்ட உணவு செரிமானமாகும் கால அளவு, உடல் கழிவுகள் முழுமையாக வெளியேறும் பயிற்சி முறைகள் என்பனபற்றி யோகாவின் பயிற்சி முறைகளில் விபரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கழிவுகள் கால நேரத்தில் வெளியேற்றப்படுமானால் மனிதரை நெருங்கிவரும் பெரும்பாலான நோய்களை விரட்டியடிக்கலாம். இறுதியாக யோகாவின் ஒவ்வொரு பயிற்சி முறையும் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட மருத்துவ பலன்களை நமக்களிக்கின்றன.




ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
**416.289.2033** *after 7:00pm*
**416.617.5721**


# குளிர்காய்ச்சலும்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

தடுப்பூசி ஏற்ற வேண்டும்.

யார் குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றக்கூடாது?

- முட்டை அல்லது இத்தடுப்பு மருந்தின் (neomycin, thimerosal போன்ற) கூறுகள் எவையும் ஒவ்வாதவர்கள் அல்லது முன்னொரு தடவை குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றியபொழுது பாரதூரமான விளைவுகளுக்கு உள்ளாகியோர்.
- பிறந்து ஆறு மாதம் ஆகாத குழந்தைகள்
- காய்ச்சல் பீடித்த எவரும் குணமடையும் வரை குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றுவதை ஒத்திவைக்க வேண்டும் (மெதுமையான தடிமல் பீடித்தவர்கள் தடுப்பூசி ஏற்றலாம்).
- Guillain-Barré Syndrome (GBS) நோய்வாய்ப்பட்டிருந்தவர்கள் அல்லது நரம்புக் கோளாறு பீடித்துள்ளவர்கள் தடுப்பூசி ஏற்ற முன்னர் ஒரு மருத்துவருடன் கலந்தாலோசிக்க வேண்டும்.
- Oculo-Respiratory Syndrome (ORS) நோய்வாய்ப்பட்டிருந்தவர்கள் பலரும் மீண்டும் குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றுவது பாதுகாப்பானதே. அதேவேளை அவர்களும் முன்கூட்டியே ஒரு மருத்துவருடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

### குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றுவதற்கு சிறந்த பருவம் எது?

ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் முதல் நவம்பர் மாத நடுப்பகுதி வரையான காலப்பகுதியே குளிர்காய்ச்சல் தடுப்பூசி ஏற்றுவதற்குச் சிறந்த பருவம். ரொறன்ரோவில் குளிர்காய்ச்சல் பீடித்தல் திசம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை உச்சக் கட்டத்தை அடைவது வழக்கம்.

### எனக்கு குளிர்காய்ச்சல் ஏற்பட்டால் நான் என்ன செய்ய வேண்டும்?

நன்கு ஓய்வெடுக்கவும். அதிக நீர்மம் அருந்தவும். அடிக்கடி கை கழுவவும். பிள்ளைகள், வயது முதிர்ந்தோர் அல்லது கடுஞ் சுகயீனமுற்றோர் எவருக்கும் உங்களிடமிருந்து குளிர்காய்ச்சல் தொற்றவாறு விலகியிருக்கவும். நோ, வேதனை, காய்ச்சல் தணிக்கும் மருந்து பற்றி உங்கள் மருத்துவரிடம் கேட்டறியவும். (aspirin போன்ற) acetylsalicylic acid கொண்ட மருந்துவகைகளால் Reye's Syndrome என்னும் கோளாறு உண்டாகக்கூடும். அதனால் மூளையும் ஈரலும் சேதமடையக்கூடும். ஆதலால் அவற்றை சிறாருக்கு கொடுக்கக் கூடாது. குளிர்காய்ச்சல் பீடித்தமை வேளைக்கே கண்டறியப்பட்டால், உங்கள் மருத்துவர் சில குளிர்காய்ச்சல் தடுப்பு மருத்துவகைகளைக் குறித்துத் தரக்கூடும். அவை உங்கள் மன உலைவைத் தணித்து, சுகயீனத்தைக் குறுக்கக்கூடும்.

### நான் மேலதிக விபரங்களை எங்கே கண்டறியலாம்?

உங்கள் மருத்துவருடன் கலந்தாலோசிக்கவும். அல்லது ரொறன்ரோ பொது சுகாதாரத் துறையின் தடுப்புமருந்து தகவல் இணைப்பை அழைக்கவும்: 416-392-1250.


**YOGA - MEDITATION CLASSESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**

தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham*** - செல்வ சோதி - ***416.289.2033***

கனடாவில் மிகக்
குறைந்த வட்டி வீதத்தில்
2%* முதல்

நீங்கள் பல மடங்கு பணத்தை வட்டியில் சேமிக்கவும்
உங்கள் நகைகளுக்கு நிறைவான பெறுமதித் தொகையை அடைவில்
பெறவும் நீங்கள் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.

SKN
FINANCIAL
(Pawn Brokers)

416-269-5393

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

முழுக்காப்புறுதி செய்யப்பட்ட ஒரே நிறுவனம்

- உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்கு சிறந்த பல விதமான திட்டங்கள் உள்ளன!
- கூடிய தொகையோ, குறைந்த தொகையோ எதுவானாலும் உங்கள் தேவையைப் பூர்த்தி செய்ய
- புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- புதிய மனை வாங்குவதில் பணச் சிக்கலா?
- உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- வட்டித் தொகைக்கு வரி விலக்குப் பற்றுச் சீட்டு வழங்கப்படும்

உங்கள் நகைகளுக்கு பாதுகாப்பு, குறைந்த வட்டி, நிறைந்த பெறுமதி,
அன்பான சேவையைக் கனடாவில் வழங்கும் ஒரே நிறுவனம்.

5 நிமிடங்களில்
உங்கள் கையில் பணம்
இன்றே நாடுங்கள்

SKN FINANCIAL
(Pawn Brokers)

4-2677 Eglinton Ave. East
Scarborough, ON M1K 2S2
(Eglinton & Brimley)


SKN FINANCIAL is operated by
SKN CONSUMER FINANCE LTD.

* 2% per month equivalent to 24% per annum
Terms and conditions may apply


மற்றுமொரு சந்தர்ப்பம்
TRIDEL இன் புதியவரவு
TEN YORK
RISING ABOVE IT ALL
TRIDEL®
BUILT FOR LIFE
416.321.6969
GARDINER EXPY.
LAKESHORE BLVD. W
LOWER
SIMCOE ST.
TEN YORK
YORK ST.
BAY ST.
HARBOUR ST.
LAKESHORE BLVD. E
QUEENS QUAY W.
Exclusive Brokerage
VIP ACCESS & Special Price
Call for more information
www.homelifegtarealty.com
HOMELIFE/GTA REALTY INC.
BROKERAGE, INDEPENDENTLY OWNED AND OPERATED
HOMELIFE
GTA SQUARE 5215 Finch Ave. E. #203 Toronto, M1S 0C2.
145 Traders Blvd., #29 Mississauga, ON L4Z 3L3.
Off: 416.321.6969
Fax: 416.321.6963
Off: 905.712.2666
Fax: 905.712.0037



Trinity Events
VIJAY
TV PARTNER
PRESENTS
பிரபல பாடகர்கள்
Yuvan
Karthik Raja
This Legendary Singer Official Announcement will be on OCT 14/2012
KJ Yesudas
Hariharan
Mano
Vijay Yesudas
Karthik
Haricharan
Bhavatharani
K.S. Chitra
Sadhana Sargam
Manjarai
Bella Shende
Ramya
தென்னிந்திய திரைப்பிரபலங்கள்
Vivek
Gobinath
Sneha
Prasanna
Gautham Menon
Parthiban
Bharathiraja
எங்கேயும்... எப்போதும்...
ராஜா
NOV 2012 3
100 க்கும் மேற்பட்ட இந்திய இசை கலைஞர்கள் பங்குபெறும்
மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி
TICKETS AVAILABLE AT:
SCARBOROUGH
PHOTO FAST LTD
416-757-1623 416-230-3733
ANNAMS JEWELLERS
416-265-9166
KUMAR VIDEO
416-292-9043
NANTHA CATERING
416-626-8421
UTHAYAS SUPERMARKET
416-742-1425
MARKHAM
MARKHAM VIDEO
905-294-4253
SOUTH ASIAN SUPER MARKET
905-201-9833
MISSISSAUGA
NEW KAVERI SUPER MARKET
905-290-6925
BRAMPTON
GOLUMBIA VIDEO
905-456-8433
VAUGHAN
MAPLE SHANGHAI
905-417-6069
MONTREAL
514-944-9315
ROGERS CENTRE (SKYDOME)
TOLL FREE : 1.855.554.4554
ticketmaster
1-855-985-5000
www.trinityeventsonline.com
TICKETS: VVIP, $150.00(VIP), $100.00, $80.00, $60.00, $39.00



உ

சுவாமியே சரணம் ஐயப்பா

# கனடா சபரிமலை ஐயப்பன் ஆலயம்

# CANADA SABARIMALAI AYAPPAN ALAYAM



Sun Sity Plaza, 2761 Markham Road, Unit# 30, Toronto, Ontario M1X 0A4 | Tel: 416-565-3000 | Email: contact@ayyappancanada.com

## 2012 நந்தன வருட ஐப்பசி மாத விஷேட நிகழ்ச்சிகள்

**15-10-2012** திங்கள் நவராத்திரி விரதம் ஆரம்பம்

**24-10-2012** புதன் விஜயதசமி, ஆலயத்தில் வீற்றிருக்கும் வித்தைக்கு அதிபதி சரஸ்வதி தேவியின் முன்னால் ஏடு தொடக்குதல் சமயபாட, பண்ணிசை வகுப்புகள் ஆரம்பம். அன்றைய தினம் கேதாரகௌரி விரதம் தொடங்கி 21 நாட்கள் நடைபெறும்.

**29-10-2012** திங்கள் பூரணை தினத்தன்று சத்திய நாராயண பூஜை மாலை 6.00மணியளவில் நடைபெறும்.

**31-10-2012** புதன் கார்த்திகை விரதம் முருகப் பெருமானுக்கு விஷேட அபிஷேகம், தீபாராதனை நடைபெறும்.

**05-11-2012** திங்கள் மணவாளக்கோல விழா ஐயப்பசுவாமிக்கு 1008 சங்காபிஷேகம், சுவாமி வீதிவலம் வந்து அருட்காட்சியளிப்பார்.

## ஏடுதொடக்குவோம் (இலவசம்)



**24-112012** புதன்கிழமை விஜயதசமியன்று காலை 9.00மணி தொடக்கம் மாலை 8.00மணிவரை ஆலயத்தில் வீற்றிருக்கும் அழகிய சரஸ்வதி தேவியின் முன்னால் குழந்தைகளுக்கு ஏடு தொடக்கி வைக்கப்படும்.

கனடாவில் கடந்த 15 ஆண்டுகளாக 1000க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு ஏடு தொடக்கி எழுத்து அறிவித்த முதுபெரும் புலவர், வெள்ளிநாக்கு நாவலர் தலத்திரு குன்றக்குரு அடிகளாரின் ஞானவாரிசு ஈழத்துச் சிவானந்தனார் சரஸ்வதி தேவியை ஆலாவனம்பண்ண குழந்தைகளுக்கு ஏடு தொடக்கி வைக்க உள்ளார்.

பிள்ளைகள் எழுத, வாசிக்க, பேச ஆசீர்வாதம் பெறவும் விஜயதசமியன்று சபரிமலை ஐயப்பன் திருவருளும் பிள்ளைகளில் பாலித்து பல நன்மைகளைப் பெருகவைக்கவும் முன்கூட்டியே பதிவு செய்தல் நல்லது.



## ஆன்மீக பக்திப் பெருவிழா

ஐயப்ப மாலை அணிந்து விரதமிருக்கும் நாற்பது நாட்களும் சமயத்துறை அறிஞர்களின் சமய இலக்கியச் சொற்பொழிவுகளும் சமய உணர்வுப் போதனைகளும் தனித்தனியே நடைபெற உள்ளது. சிறுவர்களுக்கான சமய உணர்வுப் போதனைகளை வெள்ளிநாக்கு நாவலர் புலவர் ஈழத்துச் சிவானந்தன் அவர்கள் போதிக்க உள்ளார். சிறுவர்களுக்கான இந்தச் சங்கமத்தில் பெரியோர்களும் கலந்து கொள்ளலாம். சுரை போட்டால் சுரை விளையும் சமய விதை போட்டால் உறவு, உணர்வு, ஒற்றுமை, அன்பு வளரும். சந்தர்ப்பத்தைப் பெறுவது புண்ணியம்.

வருக வாழ்வு பெறுக.!

நன்றி

அறங்காவலர் சபை, கனடா சபரிமலை ஐயப்பன் ஆலயம்

---

# சில மணி நேரத்தில் வீட்டில் இருந்துகொண்டு $100 இல் இருந்து $1000 வரை சம்பாதிப்பது எப்படி?




## சந்தையை தீர்மானிக்கும் சூப்பர் பவர்கள்!

தெளிவான திட்டமிடல், நேர்த்தியான அணுகுமுறை,
தொடர்ச்சியான ஆர்வம், தளராத மனநம்பிக்கை
இதனோடு கொஞ்சமே கொஞ்சமாய் பணம் இருந்தால்
போதும் சாதித்து விடலாம், சாதிக்கலாம் வாருங்கள்!

## EMini S&P500 டெக்னிக்கல்ப் பார்வை:

டெக்னிக்கலாக ஸ்ட்ராங்காகவும், ஃபண்டமென்டல் செய்திகள் ஒன்றன்பின் ஒன்றாகவும் வந்து சந்தையை நல்ல வேகத்தில் மேலே எடுத்துச் சென்றுவிட்டது EMini S&P 500 - 1468 என்பது மிகச் சுலபமான டார்கெட்டாகவும் 1443 WILL PENETRATE TO 1457 AND 1468 TO MAKE A NEW HIGH 1474 & 1487 TO REACH 1505 வரையிலும் போகும் பலம் பெற்றதாகவும் சந்தை மாறியுள்ளது. செய்திகள் பாசிட்டிவ்வாக வந்துகொண்டேயிருப்பதால் இந்த டார்கெட் வந்தேவிடலாம். அதே சமயம் தற்பொழுது 1424 Retracement செய்துள்ளது,1428 WILL SLIDE DOWN TO 1417 AND 1409 TO HIT THE PREVIOUS LOW 1387!

222-5215 Finch Ave E. Scarborough, ON, M1S 0C2

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

வீட்டுக்கு முதன் முதலில் வந்த பாதருக்கு சிறு உபசரிப்புச் செய்தபின்னர், சற்று நேரம் அளவளாவிக் கொண்டு இருந்தனர். சிறிது நேரத்தின் பின்னராக சிறியதொரு செபத்துடன் பாதர் அருள் புறப்பட ஆயத்தமானார். வாசல்வரை வழியனுப்ப வந்த தம்பதிகளைப் பார்த்து ஒருகணம் தயங்கி பின்னர் கேட்டார், 'றொபேர்ட், எனது மனதில் பட்டதை, எனது மனக் கண்களில் கண்டதை உங்களிடம் மறைக்கக் கூடாது. உங்களின் வீடு புதிதாகக் கட்டப்பட்டதுதானே?' என்று பீடிகையோடு கேட்டார். 'ஓமோம் பாதர், இப்ப புதுசாய்க் கட்டின வீடுதான். எங்கடை றியல் எஸ்ரேர் ஏஜன்ட் ஜோய்தான் வாங்கித் தந்தவர். இந்த இடத்திலை இருக்கிற எல்லா வீடுகளுமே புதிசுகள்தான்', என்றவன் 'ஏன் அப்படிக் கேட்க்கிறியள், பாதர்?' எனக் கேட்டான். 'இல்லைத் தெரியாதே, ஒருவேளை இந்த இடத்திலை வீடு கட்டத் தொடங்கு முன்னர் ஏதாவது இருந்திருக்குமோ எண்டு நினைச்சேன்.' 'பாதர் அருள். 'அதெல்லாம் நான் நல்லாய் விசாரிச்சித்தான் வாங்கினனான். இந்த வீடு கட்ட முந்தி இந்த இடத்திலை சின்னதாய் ஒரு பண்ணை இருந்ததாம். இப்பதான் இந்த இடமெல்லாம் வீடுகள் கட்டத் தொடங்கி'

**◊ கனி ◊**

நட்டத்தை தவிர்க்க வேண்டுமாயின் பல மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். பார்வையாளர்களின் எண்ணிக்கையை அதி-கரிக்க வேண்டும். எவ்வாறு? ஆங்கிலத்தில் மூன்று G க்களை குறிப்பிடுவார்கள். Glamour. Glitz and Gossip. மிகப் பெரிய நடிகர்கள் வரவேண்டும். அப்படியாயின் அவர்கள் படங்களும் திரையிடப்பட வேண்டும். சாதாரண பார்வையாளர்களையும் இந்த கவர்ச்சி உலகத்திற்குள் இழுக்க வேண்டும். திரைப்படங்கள் திரையிடப்பட்ட பின்னர் இரவு நேர விருந்துகள் நடைபெறுகின்றன. படங்களின் தரத்தில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஐரோப்பிய - அமெரிக்க நகரங்களின் திரைப்பட விழாக்களில் பொலிவூட் படங்கள் அலங்கரிக்கின்றன. அங்கு வாழும் இந்தியர்களை (இந்தியர், இலங்கையர், பங்களாதேசிகள், பாகிஸ்தானியர் அனைவரும் இதில் அடங்கும்) கவருவதற்காக இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. அல்லது ஐஸ்வரியாராய்க்கு திரைப்பட விழாவில் என்ன தேவையுள்ளது. சிவப்புக் கம்பள வரவேற்பு??. சிறிதேவியின் இங்கிலிஸ் விங்கலிஸ் போன்ற படங்கள் கூட திரைப்பட விழாக்களில் காண்பிக்கப்படு கின்றன. அதுவும் GALA (அதி கூடிய) நிகழ்வுகளில் காண்பிக்கப்படுகின்றன. இதற்கான நுழைவுக் கட்டணங்கள் இரு மடங்காக இருக்கும். (ரொரண்ரோவில் 43 டொலர்கள் (வரிகள் உட்பட))

அறுபதுக்கு மேற்பட்ட சரித்திரம் கொண்ட கான்ஸ் திரைப்பட விழாவின் பார்வையாளர்களின் எண்ணிக்கை 200,000. இன்று உலகின் தலைசிறந்த 5 திரைப்பட விழாக்களில் ரொரண்ரோ திரைப்பட விழாவும் ஒன்று என பல வல்லுனர்கள் கணித்துள்ளனர். கான்ஸ்க்கு அடுத்த இடத்தில் ரொரண்ரோ உள்ளது. தொடர்ந்து அமெரிக்காவின் யுற்றா மாநிலத்தில் நடைபெறும் Sundance Film Festival இதனைத் தொடர்ந்து பேர்ளின் வெனிஸ் ஆகிய திரைப்படவிழாக்களும் இடம் பெறுகின்றன.

3. இந்த திரைப்பட விழாவால் ரொரண்ரோ நகருக்கு என்ன லாபம்? இன்றைய பொருளாதார நெருக்கடியில் எம் அனைவரிடமும் எழும் கேள்வி இதுவாக இருக்கும். ரொரண்ரோ நகருக்கு இவ்விழா 170 மில்லியனை வருமானமாகக் கொடுக்கின்றது. இவ்விழாவிற்கு என வரும் நடிகர் நடிகைகளை பார்க்கவே பெரும் கூட்டம் காத்திருக்கின்றது. விழா நடைபெறும் 11 நாட்களும் உணவகங்கள், போக்குவரத்து டாக்சி, விமானம் போன்ற பல நிறுவனங்கள் வருமானங்களை ஈட்டுகின்றன.

32 மில்லியனுக்கு மேல் வருமானத்தைப் (Revenue not Profit) பெறும் ரொரண்ரோ திரைப்பட விழா லாபகரமாக நடைபெறுகின்றதா? 2011ம் ஆண்டு 1.6 மில்லியன் நட்டத்திலேயே இவ்விழா நடை-




பெற்றது. மேலே குறிப்பிட்ட 32 மில்லியனில் 60 வீதம் அரச கொடுப்பனவுகள், பெறும் நிறுவனங்களின் நன்கொடைகள் என்பனவும் அடங்கும். 40 வீதமான வருமானமே பார்வையாளர்கள் மூலம் கிடைக்கப் பெறுகின்றது. திரையிடப்படும் திரையரங்கு களுக்கான கட்டணங்கள், திரைப் படங்களுக்கான கட்டணங்கள், தொழில்நுட்ப கலைஞர்கள், நடிக, நடிகைகளுக்கான போக்குவரத்து தங்குமிட செலவுகள், சந்தைப்படுத்தல், முகாமைத்துவம் போன்ற பல செலவுகள் உள்ளன. பல ஊடகங்கள் இதனை கேள்வி எழுப்பியுள்ளன. ரொரன்ரோவின் மட்டுமல்ல கனடாவின் அடையாளமாகவும் இத்திரைப்பட விழா உள்ளது. இதற்கு மத்திய மாநில அரசுகள் மேலும் உதவிகளை செய்ய வேண்டும் என்பது ஊடகங்களின் விருப்பம்.

2010ல் ரொரண்ரோ திரைப்பட விழாவிற்கான தலைமைக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. இக்கட்டிடம் 350 மேற்கு இராஜ வீதியில் அமைந்துள்ளது. 40 மாடிகளைக் கொண்ட இக்கட்டிடத்தில் ஒரு திரையரங்கும் உண்டு. வருடம் முழுவதும் இத்திரையரங்கில் சர்வதேச திரைப்படங்கள் திரையிடப்படு கின்றன. இவ்வருடம் டன்டாஸ் சதுக்கத்தில் இலவசமாக பல திரைப்படங்கள் திரை யிடப்பட்டன. சுமார் 300,000 பேர் வரையில் இப்படங்களை பார்வையிட்டனர்.

4. ஊடகங்கள் பார்வையாளர்கள் மீது தமது விருப்பு வெறுப்புக்களை திணிக்கின்றன என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து முன்

## தூறல்

### வானரன்

வைக்கப்படுகின்றன. ரொரண்ரோ விழாவைப் பொறுத்தவரை பெரும் சமூக பத்திரிகையான ரொரண்ரோ ஸ்ரார், Globe and Mail ம், கலை இலக்கிய இலவச வாரந்தரியான Now ம் தமது விமர்சகர்கள் மூலம் சிறந்த படங்களை அடையாளங் காட்டுகின்றன. இப் படங்கள் திரையிடப்படும் அரங்குகள் நிறைந்து காணப்படுகின்றன என்பது உண்மையே. பல நல்ல திரைப் படங்களை இப்பத்திரிகைகள் தவற விட்டு விடுகின்றன. திரையிடப்படும் 300க்கும் மேற்பட்ட படங்களைப் பற்றி இணையத்தளங்களில் குறிப்புக்களை பெற்று திரைப்படங்களை தேர்வு செய்வது என்பது மிகவும் கடினமான காரணம். எனவே இவர்களின் தேர்வையே நாட வேண்டிய தேவை உள்ளது.

5. ரொரண்ரோ விழாவின் குறிப்பிடத்தக்க படங்கள் சில: Amour அதாவது காதல் என அர்த்தம். கான்ஸ் விழாவில் சிறந்த படத்துக்கான பரிசு பெற்ற படம். தனித்து வாழும் இரு 80 வயதான தம்பதிகளிடையே ஏற்படும் பாசப்பிணைப்பே இப்படம். உருகுவே இயக்குனர் Pablo Rebella ன் '3' படம் பல பரிமாணங்களை வெளிப்படுத்தி யது. தனது தாயுடன் தனித்து வாழும் இளம் பெண்ணின் வாழ்வில் சந்திக்கும் பிரச்சினைகள், சவால்களே இப்படம். தாய்க்கும் மகளுக்குமான ஒரேயொரு உரையாடல் மையமாக அமெரிக்க ரெலி சீரியல்கள் உள்ளன. அப்பொழுது தான் சில வார்த்தை பரிமாற்றங்கள் நடக்கும். பத்து வருடங்களுக்கு முன்னர் பிரிந்து சென்ற தந்தைக்கு புதிய மனைவியால் மன வருத்தம். பழைய உறவை புதுப்பிக்க வருகின்றார். அங்கும் சிக்கல்கள். முன்னாள் மனைவிக்கு புதுக் காதலன். சிறுமி - தாய், தந்தை, தாயின் காதலன், தந்தையின் மனைவி இவர்களுக்கிடையில் சிக்கிக் கொள்கின்றாள். இந்தச் சிக்கலை சமூக விமர்சனமாக முன்வைக்கின்றார் இயக்குனர். லெபானிய பெண் இயக்குனரான Annemarie Jacir ன் When I saw you என்ற படம் போரையும் சிறுவர்களையும் கூறு போட்டு பார்க்கின்றது. 1967 இஸ்ரேலிய-பாலஸ்தீனிய போரால் தாயுடன் தனித்து வாழும் சிறுவன் தந்தையை தேடிச்செல்லும் போது ஏற்படும் பிரச்சினைகளை மையமாகக் கொண்டுள்ளது. போரும் அரசியலும் ஆண்கள் கையிலேதான் உள்ளது என விமர்சிக்கின்றார் இயக்குனர். பெயரைப் பார்த்து சென்ற படம் 'மூன்று உலகங்கள்'. மற்றொரு பெண் இயக்குனர் Catherine Corsini ன் படம். Hit and Run என்பார்கள். அதாவது காரால் ஒருவரை அடித்து விட்டு தப்பி ஓடுதல். இது ஒரு சம்பவம். இச்சம்பவத்தினூடு பல முகங்களை, பரிமாணங்களை இப்படம் வெளிப்படுத்தியுள்ளது. கிரேக்கத்தில் பிறந்து பாரிசில் வாழும் Costa-Gavras ன் மூலதனம் மற்றொரு குறிப்பிடத்தக்க படம். பாரிசில் நடைபெறும் பெரும் நிர்வாக குளறுபடிகளை வெளிச்சம் போட்டுக்

**தொடர்ச்சி 32ஆம் பக்கம்**

# மைக்கல்சன் மோர்லியின் பரிசோதனை

## சார்பியல் - 5

### விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

இம்முறை மைக்கல்சன் - மோர்லியின் பரிசோதனை பற்றிப் பார்ப்போம். இப் பரிசோதனையைப் பார்ப்பதற்கு முன்னதாக அவர்களது மெச்சத்தக்கதான உத்தியையும் நாம் பார்க்கத்தான் வேண்டும். தண்ணீரில் நாங்கள் நீந்துகிறோம் என்போம். (அல்லது மீன் ஒன்று நீந்துகின்றது என்போம்). அப்பொழுது தண்ணீருக்கு என்ன நடக்கிறது என யோசித்துப் பாருங்கள். நாங்கள் நீந்தும் அல்லது மீன் நீந்தும் திசைக்கு எதிரான திசையில் தண்ணீர் அசைகின்றதல்லவா. அவ்விதமே ஈதரில் ஒரு பொருள் அசையுமாயின் ஈதரிலும் நாங்கள் எடுத்துக் கொண்ட எடுகோளுக்கமைய அசைவு ஏற்பட வேண்டுமல்லவா. இந்தவிதமான எதிர் பார்க்கப்பட்ட ஈதரின் அசைவை 'ஈதர்க் காற்று' என அழைத்தார்கள். இந்த ஈதர்க் காற்றின் விளைவுகளை இனம் கண்டு கொண்டோமேயாயின் ஈதர் இருப்பது நிரூபணமாகிவிடும். இதுதான் மைக்கல்சனின் எண்ணம். அடுத்து ஈதர் காற்றின் வலிமை சிக்கலாக இருந்தது. ஈதர்க் காற்றினை இனம் காணவேண்டுமெனில், ஈதர்க் காற்றும் பெரிய அளவில் இருக்க வேண்டும். பெரிய அளவில் ஈதர்க் காற்றை ஏற்படுத்தவல்ல இயக்கம் ஒன்று ஈதரில் ஏற்படவேண்டும். சாதாரணமான கல் போன்றவற்றால் உண்டாக்கப்படும் ஈதர்க் காற்றினை இனம் காணமுடியாது. அதன் பெறுமானம் மிகமிகச் சிறியதாக இருக்க, ஈதர்க் காற்றை உணர முடியாது. இந்த நேரத்தில் எமது புவியின் அமைவு மைக்கல்சன் - மோர்லி இருவரது கவனத்தையும் ஈர்த்தது. அக்காலத்தில் வேகமாக இயங்கும் பொருளாக புவியே விஞ்ஞானிகளுக்குத் தெரிந்திருந்தது. மணிக்கு 93,000 கிலோமீற்றர் வேகத்தில் ஈதரினுள் செல்லும் புவியினால் கட்டாயமாக உணரத்தக்கதான ஈதர்க் காற்றினை புவி இயங்குத் திசைக்கு எதிராக ஏற்படுத்த முடியும். அதனை இனம் காண்பதில் இருந்து ஈதரைக் கண்டு கொள்ளலாம் என்பது இருவரதும் நம்பிக்கையாக இருந்தது.

அதுசரி, இவ்வளவு வேகமாகவா எங்களது புவி கதிரவனைச் சுற்றி வருகிறது? ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா. அப்படியாயின் ஒரு வருடத்தில் புவி கடக்கும் மொத்தத் தூரத்தினைக் கணித்துப் பாருங்கள். அதனை உங்களிடம் விட்டுவிட்டு எங்களின் ஈதர் விடயத்திற்கு வருகிறேன். மைக்கல்சன்-மோர்லியின் பரிசோதனையை விளங்கிக் கொள்வதற்கு இன்னொரு விடயத்தினையும் தெரிந்து கொள்வோம். செம்மையியலின் சார்புவேகத் தத்துவத்தின் முடிவு ஒன்றினை பார்ப்போம். வண்டி ஒன்று 40 கிலோமீற்றர் வேகத்தில் செல்கிறது. அவ்வண்டியினுள் நிற்கும் உங்களது நண்பரை வண்டிக்கு வெளியில் இருந்து பார்த்தால், அவர் 40 கிலோமீற்றர் வேகத்தில் வண்டி போகும் திசையில் போவது போன்று உங்களுக்குத் தெரியும். உங்களது நண்பர், வண்டி ஓடிக்கொண்டு இருக்கையிலேயே, வண்டியின் முன்புறமாக இருக்கும் வாசலை நோக்கி 2 கிலோ மீற்றர் வேகத்தில் நடந்தால் இப்போது அவரது வேகம் 40 + 2 = 42 கிலோ மீற்றராக உங்களுக்குத் தெரியும். ஒருவேளை வண்டியின் கதவு பின்புறமாக இருக்க, ஓடுகின்ற வண்டியில் பின்புறமாக உங்களது நண்பர் நடந்தால் அவரின் வேகம் 40 - 2 = 38 கிலோ மீற்றராக உங்களுக்குத் தெரியும். கலிலியோவின் சார்புவேகத் தத்துவம் இதனைத்தான் கூறுகின்றது. வண்டிக்கு வெளியில் நின்று பார்க்கையில், (புவியின் சட்டத்தில்) ஒரே திசையில் சென்றால் வேகங்கள் கூட்டப்படும், எதிரெதிர்த் திசை களில் சென்றால் வேகங்கள் ஒன்றில் இருந்து ஒன்று கழிக்கப்படும். இதுபோன்ற விளைவையே ஈதரிலும் காண்பதற்காக மைக்கல்சனும் மோர்லியும் விளைந்தார்கள். எப்படியெனப் பார்ப்போம்.


புவியின் கதிரவனைச் சுற்றும் பாதையில் 6 மாங்களுக்கு ஒரு தடவை எதிரெதிர்த் திசைகளில் செல்லுமல்லவா. இனி, ஒளியானது ஈதரின் ஊடாக வருகின்றது என்பது தெரியும். எனவே, ஒளியானது புவியின் அருகில் வருகையில் புவியால் ஏற்படுத்தப்பட்ட ஈதர்க் காற்றினைத் தாண்டித்தான் வரவேண்டும். அப்படி வருகையில் ஆறு மாத கால இடைவெளிய- ில் ஒரு தடவை ஈதர்க் காற்றுக்கு எதிராகவும், ஒருதடவை ஈதர்க் காற்றின் திசையிலுமாக வரவேண்டும். ஏனெனில் ஈதர்க் காற்று ஒரு தடவை ஒளியின் திசையிலும், மறுமுறை

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



தொடர்ச்சி 36ஆம் பக்கம்

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

Gulshan Sharma, B. Eng.

Broker

HWY 27 & REXDALE

Excellent 2 acres vacant land for sale. Area suitable for various commercial uses. 1 Acre is subject to conservation authority. Asking Only $999,888

HOTEL FOR SALE

95 Room well known brand hotel with busy restaurent includes 10 suites and 85 room recentely renovated. 1 Hour west of Toronto. Asking price $5.9 million.

Well established Grocery / convenience in Markham. Lotto 649. Good location store. Steady traffic. Reasonable price.

HWY 07 & MARKHAM

Good sized auto repair garage. Access to plenty of parking and with office set up. Asking rent only $1800 / month plus tax.

5215 Finch Ave., E., #203, Toronto. Tel.:416.321.6969 & Cell: 416.407.5911

# TIFF 2012...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

காட்டுகின்றது இப்படம். The Patience Stone என்ற இன்றைய மத்திய கிழக்கை வெளிப்படுத்துகின்றது. கோமாவில் இருக்கும் கணவனுடன் வாழும் பெண்ணை இப்படம் பதிவு செய்துள்ளது. சதா பிரணவனின் 'போராளிக்கு இட்ட பெயர்' என்ற குறும் படத்தை நினைவூட்டியது கவுதமாலாத் திரைப்படம் Julio Hernández Cordón ன் இயக்கத்தில் வெளிவந்த DUST (புழுதி) ஒரு குறிப்பிடத்தக்க படம். கவுதமாலாவின் உள்நாட்டு யுத்தத்தில் காணாமல் போகின்றார் தந்தை. இதற்கு காரணமானவர்களை மகனுக்குத் தெரியும். மகன் ஒரு சில தடவைகள் தற்கொலைக்கு முயற்சிக்கின்றார். தந்தையின் இடத்திலிருந்து குடும்பத்தை காப்பாற்ற வேண்டிய முப்பது வயது இளைஞன் தற்கொலைக்கு முயற்சிக்க வேண்டிய காரணம் என்ன? போரின் பின்னால் உள்ள வாழ்வியலை இப்படம் பதிவு செய்கின்றது.

Crimes of Mike Recket ஒரு கனடிய படம். சானியா, ஒன்ராரியோவில் பிறந்த Bruce Sweeneyன் இயக்கத்தில் இப்படம் வெளிவந்துள்ளது. தனியார் நிறுவன உலகத்தில் ஏற்படும் பாதிப்புக்களை இப்படம் வெளிப்படுத்தியுள்ளது. வீடு விற்பனை முகவர் மைக்கிற்கு பெரும் கடன் சுமை. இதனால் மனைவியால் வீட்டை விட்டு வெளியேற்றப்படுகின்றார். இவரது கைக் குழந்தையை பார்க்கவும் முடியவில்லை. என்ன செய்வது? விதவையான ஒரு பணக்கார பெண்ணிடம் தஞ்சமடைகின்றார். திடீரென பணக்கார பெண் காணாமல் போய்விடுகின்றார். பொலிஸார் விடுவார்களா? மைக் கொலை செய்தாரா இல்லையோ? இறந்து விட்டாரா? எதுவும் உறுதிப்படுத்தப்படாமலே மைக் சந்தேக குற்றவாளியாகின்றார். Inch'Allah (God willing) - இயக்கம் Anaïs Barbeau-Lavalette. இதுவும் ஒரு கனடியத் திரைப்படம். பாலஸ்தீனத்தின் மேற்கு கரை (West Bank) ஒரு பகுதி இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக் குள்ளும், மறு பகுதி பாலஸ்தீனியத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளும் உள்ளது. கியுபெக் - கனடாவைச் சேர்ந்த வைத்தியர் பாலஸ்தீன கட்டுப்பாட்டு பகுதிக்குள் வேலை செய்கின்றார். அவரது வசிப்பிடம் இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள்ள மேற்கு கரை. இவர் அன்றாடம் சந்திக்கும் கண்கூடாக பார்க்கும் அவலங்களை இப்படம் வெளிப்படுத்தியுள்ளது.




இவற்றைத் தவிர பல குறிப்பிடத்தக்க படங்கள் உள்ளன. குறிப்பாக இம்முறை போரின் பின்னாலான புழுதி வாழ்விற்கு இவ்வருட விழா முக்கியத்துவமளித்துள்ளது. After the Battle எகிப்திய-கெய்ரோ போராட்டங்களுக்கு பின்னான வாழ்வியலை மையமாகக் கொண்டது. Aida Begic என்ற பெண் இயக்குனரின் இயக்கத்தில் வெளிவந்த Children of Sarajevo, 1979 ஆர்ஜன்ரீனாவின் உள்நாட்டு யுத்தத்தை மையமாகக் கொண்ட Clandestine Childhood, இஸ்ரேலிய படமான Eagles போன்ற பல படங்கள் போரின் பின்னாலான புழுதியை வெளிப்படுத்தியுள்ளது. பல படங்கள் குழந்தைகள் சிறுவர்களின் வாழ்வியல் அவலங்களையும் பதிவு செய்துள்ளது. இவ்விழாவின் மற்றொரு சிறப்பம்சம் பல பெண் இயக்குனர்களின் படங்களை திரையிட்டுள்ளது. Michèle Maheux இயக்கிய Jackie, Gay தம்பதியரால் வளர்க்கப்படும் இரட்டைச் சகோதரிகள் தமது தாயைக் காண அமெரிக்கா வருகின்றனர். தாயை அவர்கள் ஒரு போதும் கண்டதில்லை. உண்மையான இரட்டைச் சகோதரிகள் இப்படத்தில் சகோதரிகளாக நடித்துள்ளனர். Virgin Margarida என்ற மற்றொரு பெண் இயக்குனரின் படமும் குறிப்பிடத்தக்க படம்.

6. மும்பை பற்றிய படங்கள் அனைத்தும் வன்முறை, தாதா வாழ்வையே வெளிப்படுத்தியுள்ளன. மும்பை என்றவுடன் இதுவே நினைவுக்கு வரும். முன்னர் காட்டப்பட்ட நகரங்களின் பன்முகத் தன்மைகள் திரையிட்ட படங்கள் மூலம் வெளிவந்துள்ளன. போரையும் மரணத்தையும் நாள்தோறும் சந்திக்கும் இஸ்ரேலின் ரெல்-அவிவ்வின் பல முகங்களை பல படங்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர் அமைப்பாளர்கள். மும்பைக்கு மாத்திரம் ஏன் இந்த ஓர வஞ்சனை? ரொரன்ரோத் திரைப்பட விழா கனடிய படங்களுக்கு அதிக முக்கியத்துவமளிக்கின்றது. அவ்வகையில் இம்முறையும் பல நல்ல படங்களும் குறும் படங்களும் திரையிடப்பட்டன. இனி வரும் இதழ்களில் ஒரு தனிக் கட்டுரையாக இவற்றைப் பார்ப்போம். Mainstream Media போரின் புழுதி வாழ்வியலை கவனிக்கத் தவறிவிட்டது. பத்திரிகைகளும் இணையத் தளங்கள், சமூகத் தளங்களுடன் போட்டி போடுகின்றன. பெரும்பாலான பத்திரிகைகளின் 80 வீத வருமானம் விளம்பரத்திலேயே தங்கியுள்ளது. விளம்பர கட்டணத்தை அதிகரிக்க வேண்டுமெனில் விற்பனை அதிகமாக இருக்க வேண்டும். கவர்ச்சியே விற்பனையை அதிகரிக்கும் என்பது அவர்களது கணிப்பு. இதனால் பல நல்ல படங்கள் மக்களை சென்றடைய முடியாமல் உள்ளன.

அடுத்த இதழில் மேலும் சில முக்கிய படங்களைப் பற்றி தொடர்வோம்

# தாழ்வுமனப்பான்மை...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

கூறியுள்ளார். இதிலுள்ள உண்மைகளை அனுபவங்கள் நிரூபிக்கின்றன. எங்கள் மனத்தை விசுவாசம், நம்பிக்கை, பாதுகாப்பு ஆகிய எண்ணங்களால் நிரப்ப வேண்டும்.

நாம் எங்களின் மீது நம்பிக்கையை ஏற்படுத்த சில நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். நாம் வெற்றிபெறுவது போன்ற மனக்காட்சியை எமது மனத்தில் குடியேற்ற வேண்டும். அது மங்கலாகி மறைந்து போக விடக்கூடாது. நாம் தோற்றுப் போவோம் என எண்ணக்கூடாது. தற்போதைய நிலை எவ்வளவு மோசமானது எனினும், 'வெற்றி' குறித்த காட்சியே எம் மனத்தில் நிலைக்க வேண்டும். சாதகமான ஆற்றல்கள் பற்றியே சிந்திக்க வேண்டும். கற்பனைகளில் முட்டுக்கட்டைகளை போடக்கூடாது. அதனை ஆய்வு செய்து திறமையாகக் கொள்ள வேண்டும். மற்றவர்களைப் பார்த்து நாம் வியப்படைய வேண்டியது இல்லை. அவர்களை அப்படியே பின்பற்ற வேண்டியதும் இல்லை. மற்றவர்களும் உங்களைப் போலவே வியப்படைவர்கள் என்பதனை மறக்க கூடாது. எம்மைப் போல் எவராலும் செயலாற்ற முடியாது என்ற எண்ணமே தொடர்ந்து வரவேண்டும். நல்லதொரு ஆலோசனையாளரிடம் அணுகுவதில் தவறில்லை. எமது தாழ்வு மனப்பான்மை மற்றும் சுய சந்தேக உணர்வுகள் எங்கே தொடங்கியது என அறிய முயலலாம். எங்கள் சொந்தத் திறன் குறித்த ஓர் உண்மையான மதிப்பீட்டை உருவாக்க வேண்டும். பின்பு அதனை பத்துசதவீதம் உயர்த்திக் கொள்ள வேண்டும். அகங்காரம் மட்டும் வந்துவிடக் கூடாது. ஆனால் முழுமையான சுயமரியாதையை உருவாக்க முயல வேண்டும். வாழ்வின் சவால்களை எதிர்கொள்வதற்கான சக்தி என்னுள் இருக்கிறது என நம்பவேண்டும்.


நம்பிக்கை விதைகளை எமது மனதில் ஊன்றுவது முக்கியமானது. எமது மனம் பாதுகாப்பின்மை மற்றும் போதாமை போன்ற எண்ணங்களால் ஆட்கொள்ளப்பட்டிருந்தால், அத்தகைய யோசனைகள் நெடுங்காலமாக எங்கள் சிந்தனையின் மீது ஆதிக்கம் செலுத்தி வந்திருப்பது தான் அதற்கான காரணம். எனவே தான் சாதகமான சிந்தனைகள் தேவைப்படுகின்றன. இன்றைய அவசர யுகத்தில் எங்கள் மனத்தை மறுபயிற்றுவிப்பு செய்து, அதை ஓர் ஆற்றல் உற்பத்தித் தளமாக மாற்றவேண்டும். நம்பிக்கை எண்ணங்களை ஆழ்மனத்திற்குள் செலுத்துவதே எமது வேலையாகும்.

சுரபி சுரேந்திரா என்ற இந்திய அறிஞர் வார்த்தைகளை தாழ்வு மனப்பான்மைக்கு எதிராக விடப்படும் ஒரு ஆலோசனை போல் இருக்கிறது 'உனது ஆண்மை கட்டளையிடுவதை செய், பிறரிடமிருந்து பாராட்டை எதிர்பார்க்காதே, உன்னைத் தவிர, உயர்வான அற வாழ்க்கையை வாழ்பவர் தனது சட்டங்களை தானே ஆக்கி அதன்படி நடக்கின்றான்' என்ற மிகச்சிறந்த கருத்தொன்றினை கூறியுள்ளார். அல்பிரட் டபிள்யூ அட்லர் (Alfred W Adler) தாழ்வு மனப்பான்மையை பின்வருமாறு பார்க்கிறார். இயலாமையின் உணர்வு அதிகளவு தீவிரமடையும் போது அந்தக் குழந்தை தனது குறைகளை ஒருபோதும் ஈடு செய்ய முடியாது என்று நம்பி விடுகிறது. (The Feeling of Inferiority is Highly interfied to the degree that the child believe that he will never be able to compensate for his weakness) பலவீனங்கள், பயங்கள், ஒப்பீடுகள், தோல்விகள் எதுவுமின்றி எமது ஆளுமைகளை விருத்தி செய்யும் போதுதான் எமது மறுபரிசீலனை ஆரம்பிக்கின்றது. நேர்மறைச் சிந்தனை (Positive Thinking) ஒரு வியத்தகு சக்தியாக மாறி விடுகிறது.



விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com

# அறிவும் அழகும்



கொக்கைப் பார்த்து சில பறவைகள், 'உங்கள் மூக்கு நீளமாக இருக்கிறதே!' என்றன. இன்னும் ஒன்று, 'Pinocchio போல் நிறைய பொய் சொல்லியிருக்கிறான் என்று தோன்றுகிறது!' என்றது. இதைக் கேட்டு மற்ற பறவைகள் சிரித்தன. கொக்குக்கு இதைக் கேட்டு வருத்தமில்லை. அது சிறு வயதிலிருந்து இப்படி கேலி பண்ணப்பட்டது. கொக்கு இருந்த ஆற்றின் மறு கரையில் ஒரு மயிலும் இருந்தது. அது தண்ணீரில் தன் நிழலைப் பார்த்துக் கொண்டிருந்தது. அதற்கு அழகு பிரச்சினையே இல்லை, குரல் தான் பிரச்சினை. அதன் வாயை திறந்தால், மற்ற பறவைகளின் அழகிய பாடல்கள் மாதிரி இல்லாமல், பயங்கரமான குரல் கேட்கும். அதனால் மயில் எதுவும் பேசுவதில்லை.

இதேநேரம் காட்டில் சில வேடர்கள் இருந்தனர். யானையை தந்தத்திற்காக தேடுவதை விட்டு, மயிலை சிறகுக்காக வேட்டையாடத் தொடங்கி விட்டனர். அவர்களும் ஆற்றங்கரையில் மயிலைத் தேடிக் கொண்டு இருந்தார்கள். கொக்கும் மதிய உணவிற்காக மீனைப் பிடிக்க ஆற்றங்கரைக்கு சென்றது. அதன் நீண்ட சொண்டைநீட்டி தண்ணீரில் வைத்த போது, மறு பக்கத்திலிருந்த மயிலின் நிழல் மறைந்தது. மயிலும் தலையை நிமிர்த்தி, கொக்கை முறைத்துப் பார்த்து, 'என் நிழலை ஏன் கலைத்தாய்?' என்றது.

'நிழலைவிட என் உணவு முக்கியம்!' என்றது கொக்கு. 'நீங்களும், உங்கள் சொண்டும்...' என மயில் கூறியது. மயில் திரும்பி எழும்பும் போது, அங்கு வேடர்கள் அப்பக்கம் நின்று கொண்டிருந்ததைக் கண்டது. அது பயத்தில் 'ஓ' எனக் கத்தியது. அந்த பயங்கரமான குரலைக் கேட்டு அங்கிருந்த எல்லா மிருகங்களும் பயந்து ஓடின. கொக்கும் வேடர்களும் மட்டும், அது மயிலின் குரலென அறிந்து மயிலை நோக்கினர். வேடர்களிடமிருந்து தப்ப மயில் ஆற்றினுள் ஓடியது. ஆறு அகலம் குறைந்ததாயிருந்தும், மிகமிக ஆழமாயிருந்தது.

இதை அறிந்த வேடர்கள் அதற்கு கிட்டநெருங்காமல், 'மயில் சாகட்டும், அப்போது சிறகை எடுக்கலாம்' என்றனர். மயில் இதைக் கேட்டு அழத் தொடங்கியது. இதையெல்லாம் பார்த்த கொக்கு, தன் நீளமான சொண்டினால் மயிலை தன்னுடைய கரைக்கு இழுத்துக் கொண்டு வந்தது. இதைக்கண்ட வேடர்கள் ஒன்றும் செய்ய முடியாமல் திரும்பிச் சென்றனர்.

மயிலும் கொக்குக்கு நன்றியும் கூறி மன்னிப்பும் கேட்டுவிட்டு சென்றது. இதன் பின்னர் மற்ற மிருகங்களும் கொக்கின் சொண்டைக் கேலி செய்வதை விட்டுவிட்டன.

**நீதி: உருவம் கண்டு எள்ளாமை வேண்டும்.**



**ஞா. ஆரணி**
**அகவை 14**

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# வைகறை...

29ஆம் பக்கத்தொடர்ச்சி

நிற்கின்றன எனக் கூறி இவ்வாறானதோர் கவிதைத் தொகுப்பினை வழங்கிய மாவலி மைந்தன் மிகவும் சிறந்த தகுதி படைத்த கவிஞரே எனப் புகழ்ந்து விடை பெற்றார்.

அடுத்து நூலாசிரியர் மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா அவர்கள் தனது ஏற்புரையின் ஆரம்பத்தில் கவிநாயகர் கந்தவனம், பண்டிதர் அலெஸ்சாந்தர் ஆகிய இரு அறிஞர்களும் தமிழ்க் கவிதைக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் ஆற்றிவரும் அளப்பரிய சேவையைப் புகழ்ந்துரைத்து அவர்களது சேவையைப் பாராட்டி அரங்க மேடையில் வைத்து இருவருக்கும் பொன்னாடை போர்த்திக் கௌர வித்தார். தொடர்ந்து அவரின் உரையில் தனது கவிதைப் பயணத்தின் பரிமாணங்களாக வைகறை வானம் கவிதைத் தொகுதியில் ஒவ்வொரு பகுதியும் அமைந்திருக்கின்ற தென்பதைக் குறிப்பிட்டுக்காட்டினார். நூலின் மூன்றாவது பகுதியான விடுதலைக் காற்றில் விரிந்த மொட்டுக்கள் தான் சார்ந்த இனத்தின் சமகால வரலாற்றின் பிரதிபலிப்பென்றும், அதைப்பதிவு செய்ய வேண்டியது காலக்கண்ணாடியாக இருக்கும் ஓர் இலக்கியவாதியின் இன்றியமையாத கடமையுமாகும் எனக் குறிப்பிட்டார். தனது கவிதை நூலின் உருவாக்கத்திலும் வெளியீட்டிலும் பங்காற்றிய அத்தனை பேருக்கும் நன்றியைத்தெரிவித்ததுடன் வாசகர்களுக்கும் நன்றி தெரிவித்து அவர்களின் விமர்சனங்களும் கருத்துக்களுமே தான் ஏறவிருக்கும் உயரத்துக்கான படிக்கட்டுகளாக அமையும் என்றும் அவற்றை வரவேற்பதாகவும் கூறி உரையை முடித்துக்கொண்டார்

கவிதைத் தொகுதியின் வெளியீட்டுரை நிகழ்த்திய கனடாக் கவிஞர் கழகத்தின் செயலர் திரு த. ஞானகணேசன் அவர்கள் நூலிலுள்ள சில பாடல்களைத் தேர்ந்தெடுத்துச் சபையோரை ஈர்க்கும் வண்ணம் அவற்றின் பொருளை மிகவும் நகைச் சுவையுடன் விமர்சித்தார். வருகை தந்தோர் அப்புத்தகத்தை விரும்பி வாங்கிச் செல்லும்படியாக அவரது பேச்சு அமைந்திருந்தது. தொடர்ந்து வெளியீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. நூலாசிரியர் பிரதி-களை வழங்க முதற் பிரதியை மகப்பேற்று மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி கிருபா குமாரசாமி அவர்கள் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து நன்றியுரையினை ஆசிரியரின் உறவினரான திரு. ஐ சண்முகநாதன் ஆற்றினார். சபையோருக்கான பிரதிகள் வழங்கப்பட்டதுடன் அனைவருக்கும் உணவு பரிமாறப்பட்டது. அத்துடன் விழாவானது முடிவுக்கு வந்தது.

நீண்ட நாட்களின் பின்னர் கிடைத்த அரிய வாய்ப்பாக இவ் வெளியீடானது அமைந்திருந்தது. அன்பான வரவேற்பினாலும், அறுசுவை உணவுகளாலும் மாவலி மைந்தன் குடும்பத்தினர் எம்மை மகிழ்வித்தனர். தனது பாடல்வரிகள் சிலவற்றையும். அவற்றின் பொருள் விளங்கும் வண்ணம் வடிக்கப்பட்ட காட்சிகளையும் தாங்கிய அட்டைப் படங்களை ஒழுங்கு முறையில் மக்களின் பர்ாவைக்கு வைத்து, அனைவரினதும் கண்களையும் கருத்தையும் அவற்றின்பால் ஈர்க்க வைத்த கவிஞரின் முன் மாதிரியான செயற்றிறன் போற்றத்தக்கதே!






சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


நிரு
பிராண்ட்
BRAND
Niru
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.

# 'இங்கிலீஷ் விங்கிலீஷ்' - திரை விமர்சனம்

நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஸ்ரீதேவி நடித்திருக்கும் படம் என்பதால் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் படம்!

ஆங்கிலம் தெரியாத நடுத்தர வர்க்க குடும்பத்து பெண், தனது பிள்ளைகள் மற்றும் கணவனிடத்திலும் சமூகத்திலும் எப்படியெல்லாம் அவமானத்துக்கு உள்ளாகிறார். பிறகு, அதிலிருந்து எப்படி மீண்டு வருகிறார் என்பதுதான் கதை.

கணவர், இரண்டு குழந்தைகள் என்ற அளவான குடும்பத்தைச் சேர்ந்தவர் ஸ்ரீதேவி. அதிகம் படிக்காதவர். என்றாலும், லட்டு செய்வதில் கைதேர்ந்தவர். கணவரும் குழந்தைகளும் அவரது சமையலைப் பாராட்டுகிறார்கள். போதாக்குறைக்கு லட்டு செய்து விற்பனை செய்து வரும் சம்பாத்திய சிறுவாட்டுப் பணம் அவர் கைகளில் ஐநூறு ரூபாய் நோட்டுகளாக சிரிக்கிறது. அழகான, சந்தோஷமான வாழ்க்கை. ஆனால், குழந்தைகள் நன்கு படித்த பிறகு இவர் படிக்காதவர் என்பது ஒரு பெரிய பிரச்சினையாகிறது. இரண்டு குழந்தைகளும் நன்கு இங்கிலீஷ் பேசக்கூடியவர்கள். ஸ்ரீதேவியின் மூத்த மகள், அம்மாவுக்கு



ஆங்கிலம் பேசத் தெரியாது என்பதால் மிகவும் அவமானப்படுத்தும் விதமாக நடந்து கொள்கிறார். ஒருசில இங்கிலிஷ் வார்த்தைகளை பேச முயற்சித்து தவறாக உச்சரிக்கும் ஸ்ரீதேவியை அவருடைய மகள், மகன், கணவன் உள்ளிட்ட குடும்பமே கூடி கிண்டல் செய்கிறது. இது ஸ்ரீதேவியின் மனதை மிகவும் புண்படுத்துகிறது. இந்நிலையில் ஸ்ரீதேவியின் அக்கா மகளுக்கு அமெரிக்காவில் திருமணம் நிச்சயிக்கப்படு கிறது. எனவே, ஸ்ரீதேவி திருமணத்திற்காக தனியாக அமெரிக்கா செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

இங்கிலீஷ் தெரியாததால் விமானத்தில் தண்ணீர் கேட்பதற்குக்கூட முடியாத நிலையில் தவிக்கிறார். பக்கத்து சீட்டில் பயணிக்கும் நடிகர் அஜீத் அவருக்கு உதவுகிறார். விமானத்தில் இருந்து வெளியே வரும் வரை அவர் உதவுவதால் விமான பயணத்தை சமாளித்துக்கொள்கிறார் ஸ்ரீதேவி.

அமெரிக்காவில் தனது சகோதரி வீட்டில் தங்கும் ஸ்ரீதேவி தனியாக கடைக்குச் செல்கிறார். அங்கு தனக்கு வேண்டிய உணவை வாங்க முயல்கிறார். அப்போது, ஆங்கிலம் தெரியாததால் சிரமப்படுகிறார்.

- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -

தொடர்ச்சி 37ஆம் பக்கம்





# Education

**Review Tutorials - 125**

➢ **CHEMISTRY 12 & IB**

Give IUPAC names of the following compounds

A.  B. 

**(11)** A 20.0 g sample that is 95% $K_2Cr_2O_7$ is allowed to react with 50.0 g of gaseous hydrogen chloride. How much $Cl_2$ is produced in grams?

$K_2Cr_2O_7\,(aq) + 14HCl(g) \rightarrow$
$7H_2O(l) + 2KCl\,(aq) + 2\,CrCl_3(aq) + 3\,Cl_2(g)$

**(12)** Balance the equation in acidic solution

$FeS + NO_3^- \rightarrow Fe^{3+} + NO + SO_4^-$

➢ **Physics 11**

**(11)** An airplane is heading due N 20° E from a city at a speed of 800km/ h for 2.5 hours and then changes its direction 40° east of north to reach another city. The total time taken for this journey is 6 hours. Determine the displacement of the plane and calculate the average velocity of the plane.

**(11 & 12)** A Child (P) slides down a frictionless slide –X with 32° incline. An another Child (Q) slides down a slide -Y with 32° . The speed of child -Q at the bottom of the slide is exactly half of the speed of child- P. Determine the coefficient of kinetic friction between the child -Q and slide- Y. (Assume the lengths of the slides X and Y are same)

➢ **Math 11& 12**

**(11-A)** Factor $x^5$-16x

**(11-B)** If a bus travelled 10km/h faster, it would take 2 h less time to make a 400km trip. Determine its speed?

(12 – A) Write the expression $27x^3 - 1$ in factored form

(12 – B) The polynomila function $24x^3 - m\,x^2 - 16x - 6$ has factors (3x+1) and (2x +2). Determine the value of m.

➢ **BIOLOGY**

Outline the potential benefits and possible harmful effects of genetic modification?

## Answer key 124

➢ **BIOLOGY 12 & IB**

Sucrose glucose 1α→2 fructose

➢ **CHEMISTRY 11,12 & IB**

(A ) $CaCO_3 + 2HCl \rightarrow CaCl_2 + H_2O + CO_2$

Number of moles of HCl added , n= cv = 0.50 x0.10= 0.05 Excess HCl in the mixture was titrated with 22ml, 0.5mol/L NaOH ; $NaOH + HCl \rightarrow NaCl + H_2O$

Number moles of NaOH , n= cv; n= 0.50x 0.022= 0.011mol ; Excess HCl in the mixture= 0.011mol

Moles of HCl reacted with $CaCO_3$ = 0.05- 0.011 = 0.039

Moles of $CaCO_3$ = 0.039 /2 ( stochiometric ratio 1:2)

Mass of $CaCO_3$ = n x Mm = 0.0195 x 100= 1.95 g

Mass percent of $CaCO_3$ = (1.95 x100)/2= 98%.

**(B)** The emission spectrum of atomic hydrogen is divided into a number of spectral lines. These lines are due to electrons moving between energy levels in the atom. Transition of electron in hydrogen between quantized energy levels with different quantum numbers yields a photon by emission with quantum energy

**(C)** Third ionization energy magnesium > 3rd ionization energy of Fluorine. Reason – removal of an electron from an octet (3rd) is harder.

➢ **PHYSICS 11& 12**

car 90km/h ( 25m/s) ⟶ **50m** truck 72km/h (20m/s) ⟶

Truck moved 100m in 5 s ( d= v x t)

Therefore car travels 150 m (100m+50m) to pass the truck from the point that started acceleration.

$V_{1(car)}$ = 25m/s, Δ d =150m, Δ t =5s. $\Delta d = v_1t + \frac{1}{2}at^2$
Find a. **(ans: 2m/s²)** $v_{2\,(car)} = v_1 + a\Delta t$ **(ans: 35m/s, 126km/h)**

➢ **MATH 11& 12**

**(11A)** $t_n = a + (n-1)d$; $T_{16} = a + (16-1)d$ ; a+ 15d =78 ...(1)

$T_6 = a + (6-1)d = a + 5d$; $T_{11} = a + (11-1)d = a + 10d$

$T_6 + T_{11} = 2a + 15d = 81$ ..................(2)

Solve for 'a' and 'd'; ( a= 3; d= 5) and use the formula and find out the $S_{10}$

Sum of the first ten terms $S_n = \frac{n[\,2a + (n-1)d}{2}$

**(12-A)** leading coefficient =1

(12 B) $f(x) = a(x-1)(x-2)(x-3)^2$

Plug the values $f(x)$ =20 and x = 4, and then find the value "a " and write the equation

*Answer key 122 - next issue*

**Contact: 647 341 3975**
By A.Sri Krishnaraj PhD
**E mail: ask@ keentutoringcentre.com**

KEEN TUTORING CENTRE

# மைக்கல்சன்...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒளியின் திசைக்கு எதிரான திசையிலும் இருக்கும். இவ்விரண்டு நிலைகளிலும் ஒளியின் வேகத்தினைக் கண்டு கொண்டால், ஈதர் இருப்பது உறுதியாகிவிடும். இதுதான் மைக்கல்சன்-மோர்லியின் பரிசோதனையின் கொள்கையாக அமைந்தது. இதற்காக, தொலைதூரத்தில் இருக்கும் விண்மீன் ஒன்றில் இருந்து வரும் ஒளியின் வேகத்தினை புவியில் இருந்து ஆறு மாத இடைவெளியில் தமது பரிசோதனையின் மூலமாக கணித்துப் பார்த்தார்கள். அப்பரிசோதனையில் எவ்விதமாக அவ்வேகங்களைக் கணித்தார்கள் என்ற கணிதச் சிக்கல்கள் எமக்கு வேண்டாம். அதிசயமாக குறிப்பிடத்தக்கதான அந்த முடிவினை மட்டும் அடுத்த தடவையில் தெரிந்து கொள்வோம்.

# கனடாவில் ஆண்டுதோடும் 27 பில்லியன் டொலர் மதிப்பிலான உணவுகள் வீணாகிறது!

கனடாவில் ஆண்டுதோறும் 27 பில்லியன் டொலர் மதிப்பிலான உணவுகள் வீணாவதாக ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

வீணாக்கப்படும் உணவுகளில் 51 சதவீத உணவுகள் மக்களின் வீடுகளில் வீணாக்கப்படு கின்றது. அதாவது உலகில்



உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களில் மூன்றில் ஒரு பங்கு கனடாவ-ில் மட்டும் வீணாக்கப்படுவதாக உலக உணவு விவசாய நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதற்கு காரணங்களாக உணவுகள் அதிகளவில் விற்பனை செய்யப்படுகின்றமை, காலாவதியாகும் திகதி குறித்த குழப்பம், உணவுகளை அதிகளவு வாங்குபவை தெரிவிக்கப்படுகின்றது.

உணவு வீணாவதைத் தடுக்க சில வழிமுறைகளை WWF என்ற சுற்றுச்சூழல் அமைப்பு பரிந்துரைத்தது.

பழைய அல்லது மிஞ்சிய உணவை மீண்டும் பயன்படுத்தவும், உணவை நன்றாக காற்றுப்புகாமல் மூடி வைக்கவும், குளிர்ச்சியான இடத்தில் (குளிர் சாதனப் பெட்டி) வைக்கவும், மொத்தமாக வாங்கிக் குவித்து வீணடிக்காமல் தேவைக்கேற்ப சிறிய அளவில் வாங்கி உண்ண வேண்டும் என இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

**50** PARTY HALL EVENT CENTRE MEETING PLACE **AVAILABLE FOR RENT**

***Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,*** புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய **50** பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

*GTA Square Mall (FINCH & MIDDLEFIELD*

தொடர்புகளுக்கு: ***416.917.6883***

# இசைப்பயணத்தில் இசைஞானி இளையராஜாவின் கனேடிய பயணம்






இசைஞானி இளையராஜா அவர்களுடன் ஸ்காபுரோவில் கடந்த ஒக்டோபர் 04, 2012 ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் இசைஞானி இளையராஜாவின் மகன் கார்த்திக் ராஜாவும் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் கேட்ட கேள்விகளுக்கு இசைஞானி இளையராஜா அவர்கள் இசை அனுபத்தின் மூலம் பதில் அளித்தார். இவரது இசை நிகழ்ச்சி எதிர்வரும் நொவெம்பர் மாதம் 03 ஆம் திகதி 100க்கும் மேற்பட்ட இசைக்கலைஞர்களுடன் றினிற்றி இவன்ஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

100க்கும் மேற்பட்ட இசைக் கலைஞர்கள் மற்றும் தமிழ்சினிமாவின் முன்னணிப் பாடகர்கள் அனைவரும் இதில் கலந்து கொள்கின்றனர்.

இளையராஜாவின் இன்னொரு நிகழ்ச்சி அமெரிக்காவின் சான்.ஃ.பிராஸ்சிஸ்கோ நகரில் எதிர்வரும் நவம்பர் 11ஆம் திகதி நடைபெற உள்ளது. இந்தக்கச்சேரியை ஸ்வாகத் கேர் ஃ.பவுண்டேசன் ஏற்பாடு செய்துள்ளது.

கார்த்திக் ராஜா, யுவன் சங்கர் ராஜா, பவதாரிணி, கே.ஜே. ஜேசுதாஸ், விஜய் ஜேசுதாஸ், ஹரிஹரண், கே.எஸ்.சித்ரா, சாதனா சர்கம், மனோ, கார்த்திக், ஸ்வேதா மேனன் உட்பட நிகழ்ச்சியில் பாடவிருக்கும் முன்னணி பாடகர்கள் பங்கேற்க உள்ளனர்.

# ‘இங்கிலீஷ்...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

அடுத்து, ஒரு ஹோட்டலில் இங்கிலிஷ் தெரி யாமல் தடுமாற்றம் அடைந்து பெருத்த அவமானத்தை சந்திக்கிறார். இப்படி தொடர்ச்சியான ஒன்றிரண்டு சம்பவங்களால் மனம் நொந்துபோன ஸ்ரீதேவி இங்கிலிஷ் கற்றுக்கொள்வது என்று தீர்மானிக்கிறார். அமெரிக்காவில் நான்கு வாரங்களில் இங்கிலிஷ் கற்றுத் தரும் பயிற்சி பள்ளியில் சேர்ந்து தன் கணவர் மற்றும் குழந்தைகள் அமெரிக்காவிற்கு வருவதற்குள் ஆங்கிலம் கற்றுக்கொள்ளும் முயற்சியில் இறங்குகிறார். டியூஷன் படிக்க சென்ற இடத்தில் ஸ்ரீதேவிக்கு ஏகப்பட்ட நண்பர்கள். அதில் ஒரு பிரெஞ்சுக்காரர் ஸ்ரீதேவியை ஒருதலையாக காதலிக்கிறார்.

கணவரும் குழந்தைகளும் அமெரிக்கா வரும்போது, ஸ்ரீதேவி இங்கிலிஷ் கற்றுத் தேர்ந்து எப்படி அசத்துகிறார் என்பதுதான் மீதிக் கதை என்பதை இப்பொழுதே நீங்கள் ஊகித்திருப்பீர்கள். உண்மைதான்.

குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி, இந்திய அளவில் ‘சூப்பர் ஹீரோயின்’ ஆக உயர்ந்து, கல்யாணம் செய்து சினிமாவில் இருந்து விலகி, பதினைந்து வருடங்களுக்குப் பிறகு வெள்ளித்திரைக்கு வந்திருக்கிறார் ஸ்ரீதேவி. வயதுக்கேற்ற தோற்றத்துடன் தோன்றினாலும், அவருடைய நடிப்பு பழைய ஸ்ரீதேவியை நினைவுப்படுத்துகிறது. கணவன், பிள்ளைகள் என குடும்பத்திற்காகவே வாழும் சசி என்ற கதாபாத்திரத்திற்கு மிகச் சரியாக பொருந்தியிருக்கிறார். முகத்தில் சிறு சுறுக்கத்தோடும் குரலில் தடுமாற்றத்தோடும் தோன்றும் ஸ்ரீதேவி, ரொம்பவே அமைதியான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். நியூயோர்க் மெட்ரோ ரயிலில் பயணிக்க எங்கே கார்டைச் சொருகவேண்டும் என்பது தெரி யாத, ஓரளவுக்குத் தெரிந்த, பழக்கமான - என்ற மூன்று நிலைகளையும் ஸ்ரீதேவி காட்டும் நடிப்பு ஒன்றே போதும். ஆங்கிலம் தெரியாமல் மற்றவர்கள் சொல்வதை புரிந்து கொள்ள முயற்சிக்கும் போதும்,



தனக்கு வேண்டியதை சொல்ல முடியாமல் தவிக்கும் போதும் கை தேர்ந்த நடிப்பை வெளிப்படுத்தி யிருக்கிறார். எல்லாக் காட்சிகளிலும் இருந்தாலும் அலுக்காத முகம்.

ஸ்ரீதேவி அமெரிக்கா பயணிக்கும் போது அவருடன் சக பயணியாக ஐந்து நிமிடங்கள் மட்டுமே வரும் அஜீத், அவரின் கதாபாத்திரத்தை மிகவும் அழுத்தமாக பதிவு செய்திருக்கிறார். குறிப்பாக அவர் பேசும் வசனங்கள் நம்பிக்கையூட்டும் வகையில் இருக்கிறது.

மற்ற கதாபாத்திரங்களில், ஸ்ரீதேவியின் கணவராக வரும் அதில் ஹுஸைன், நண்பராக வரும் மேதி, இங்கிலீஷ் ட்யூஷன் டேவிட், பாகிஸ்தானி இளைஞன் என அனைவருமே இயல்பாக பொருந்திப் போகிறார்கள். இங்கிலிஷ் டியூஷன் மாணவர்களும் கவர்கிறார்கள். அதுவும் ராமா என்ற கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் ராஜிவ் ரவிந்திரநாதன் நகைச்சுவை நடிகராக நம்பிக்கையளிக்கிறார்.

லஷ்மன் உடேகரின் ஒளிப்பதிவும் அமித்திரி தேவியின் இசையும் கதையுடன் பயணித்திருக்கிறது. அமித்ரி தேவின் பின்னணி இசை இதமான வருடல். பல நேரங்களில் உணர்ச்சியைப் பிரதிபலிக்கும் சின்னச் சின்ன ஒலித் துணுக்குகள் காட்சிக்குப் பலம் சேர்க்கிறது. லஷ்மன் ஷின்டேவின் ஒளிப்பதிவு, அமெரிக்காவை காதலிக்க வைக்கிறது.

மிக எளிமையான கதை. பாலச்சந்தர் அல்லது பாலுமகேந்திரா படங்களில் பார்த்துப் பழக்கப்பட்ட வகை பாத்திரம்தான். கதையோட்டம் கூட சில இடங்களில் எதிர்ப் பார்த்த மாதிரியேதான் உள்ளது. ஆனால், இதை எல்லாம் மீறி நம்மை படம் பார்க்க வைப்பது திரைக் கதையும் படமாக்கப்பட்ட நேர்த்தியும்தான். ‘சீனிகம்’, ‘பா’ ஆகிய படங்களை இயக்கிய பால்கியின் மனைவி கௌரி ஷிண்டேதான் இப்படத்தின் இயக்குநர். இவர் இயக்கும் முதல் படம் இது. கடைசிக்காட்சியில் ஸ்ரீதேவி நிச்சயம் இங்கிலிஷ் பேசுவார் என்பது தெரிந்து விடுகிறது. அதற்காக அவர் இங்கிலிஷில் வெளுத்துக் கட்டுவது போல காட்டாமல், இயல்பாக பேச வைத்திருப்பது நம்பகத்தன்மையைத் தருகிறது. சில இடங்களில் வசனம் பளிச்.

அமெரிக்க குடியுரிமை அதிகாரியிடம் ஸ்ரீதேவி சொல்கிறார்: “எனக்கு ஆங்கிலம் சரியாக வராது.”

அதிகாரி கேட்கிறார்: “ஆங்கிலம் தெரி யாமல் எங்கள் நாட்டில் எப்படி இருப்பாய்?”

அதிகாரியோடு பணியாற்றும் இந்தியர் ஒருவர் உடனே சொல்கிறார்: “இந்தி தெரியாமலேயே நீ எங்கள் நாட்டுக்கு வரலாம்.”

இங்கிலீஷ் அல்ல கதையின் முக்கியமான விஷயம். இந்தக் குடும்ப அமைப்பு எவ்வளவு சாதாரணமாக இல்லத்தரசிகளை நினைக்கிறது? அவள் உணர்ச்சிகளுக்கு குடும்ப அங்கத்தினர்கள் கொடுக்கும் மரியாதை என்ன? இவைதான் முக்கியமான விஷயம். இதைச் சொல்ல இங்கிலீஷ் ஒரு கருவி. மனைவிகளிடம் நிச்சயம் வரவேற்பைப் பெறக்கூடிய விஷயம். ஆனால், கருத்து சொல்கிற படம் என்ற விதத்தில் ‘இங்கிலிஷ் விங்கிலிஷ்’ மண்ணைக் கவ்வுகிறது என்றுதான் சொல்ல வேண்டும். ஸ்ரீதேவிக்கு பொருத்தமான கதாபாத்திரம், அதற்கு ஏற்ற திரைக்கதை என்ற விதத்தில் படம் தப்பிக்கிறது.

இங்கிலிஷ் விங்கிலிஷ் - பார்க்கலாம்.

நகைச்சுவைத் தொடர் 255

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



தாங்ஸ்கிவிங் லோங் வீக்எண்ட் ஒருவாறு முடிந்துவிட்டது.
“நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று” – திருக்குறள்




To forgot a good turns is not good, and good it is
To forgot at once what isn’t good

“எந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு” –திருக்குறள்
All other sins may be redeemed,

நாய் நன்றியறிவிப்பதற்கு வாலை ஆட்டுகிறது. (ஆனால் மக்களில் சிலர் தேவையற்றதுக்கெல்லாம் வாலாட்டுகின்றனர்.)

நன்றியறிவித்தல் பற்றி திருக்குறள், ராமாயணம், பாரதம் மற்றும் இலக்கண இலக்கியங்கள் பலவற்றில் படித்தாலும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் ஆட்டிலறி அன்னம்மாவும் முருகேசரிடமும் உலகரிடமும் பல கதைகளைக் கேட்டுள்ளனர்.

உலகர் ராமாயணத்தையும் பாரதத்தையும் பக்கத்தில் நின்றுபார்த்ததுபோல கதைப்பார்.

துரியோதனன், துச்சாதனன், சகுனி (அண்மையில் வெளிவந்த திரைப்படம் சகுனியல்ல) கெட்டவர்களாக இருந்தாலும் கர்ணன் பிறந்த உடனேயே குந்திதேவி படகினில் அவனை விட்டதும் தேரோட்டியால் வளர்க்கப்பட்டதும் துரியோதனன் கர்ணனை தனது நன்பனாக்கி தனது அரசிலேயே முக்கிய பங்கு கொடுத்ததும் அதற்கு நன்றிக்கடனாக் நட்புக்காக தனது உயிரையே கொடுக்கிறான்
(இப்போ அரசியலுக்காக பலரின் உயிரை எடுக்கின்றனர்)

யாகாவாராயினும் நா(ய்) காக்க
எங்கு பேசும்பொழுதும் சிந்திக்காமலும் நிதானமிழந்து பேசுவதும் பலரை பலவித அவஸ்தைக்குள்ளாக்கியிருக்கிறது.

இஸ்லாமிய மதத்தைப்பற்றி விதண்டவாதமாக நூல் ஒன்றை வெளியிட்ட ரகுமான் ரஸ்டி …..பலகாலமாக நாட்டைவிட்டு வெளியேறி தலைமறைவாகியிருந்தார்.

இன்று அமெரிக்காவில் திரையிடப்பட்ட திரைப்படம்…..இஸ்லாமிய மதத்தை கேலி செய்வதுபோலிருந்ததால் எதிர்ப்பு அலை உலகளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம் ஊர்வலம் கடையடைப்பு தீவைப்பு அமெரிக்க தூதுவராலயங்கள் மூடுவிழா பலவித சம்பவங்கள் நடந்தது நடந்து கொண்டிருக்கிறது. (நடக்கும்)

1979 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்த ஈரான் உள்நாட்டுக் கலவரம் இஸ்லாமிய புரட்சிப் போர் அமெரிக்காவில் 60 வீதமான ஆயுதங்களை ஈரானிய அன்றைய அரசன் ரேசா பால-ாவி வாங்கிக் குவித்தாலும் சமய எழுச்சியின் முன் ஆயுத பலம் அடங்கிவிட்டது….அவனின்றி அணுவும் அசையாது. (ஆட்டிலறியும் அசையாது)

இறைவன் இருக்கின்றானா மனிதன் கேட்கிறான்
அவன் இருந்தால் உலகத்திலே எங்கே வாழ்கிறான்…
என எழுதியது கவிஞர் கண்ணதாசன் தான்.



அர்த்தமுள்ள இந்துமதம் என்ன சொன்னது அது அவரவர் கடமைகளை எடுத்துச்சொன்னது என எழுதினார்.

சமயம் என்பது தீச்சுவாலை. அதனை தொடாத இடங்களில் தொட்டு சுட்டுக்கொண்டவர் பலர். இன்னும் தொட்டுக்கொண்டிருப்பவர் சிலர்.

என்ன நடந்தாலும் எமக்கு முடியாத நிலையில் எல்லாம் அவன் செயல் என சொல்லி முடித்துவிடுகிறோம்.

உலகண்ணை சில விசயம் கேட்டுத் திருந்த வேண்டும் அல்லது பார்த்து திருந்த வேண்டும். இந்த வருசம் கார் பார்க் பண்ணேக்கை தவறுதலாக தனது 8 வயது மகனை தந்தை பறிகொடுத்தார். 2 மாதங்கள்கூட ஆகவில்லை சகோதரியின் காரினால் இன்னொருவர் சகோதரி கொல்லப்பட்டிருக்கிறா.

வீட்டிலோ பொது இடத்திலோ கார் பாக் பண்ணுவதில் நாங்கள் மிக அவசரம். முதியவர்கள் வலுவிழந்தோர்க்கு ஒதுக்கப்பட்ட விசேட பாக்கிங்கில் பல நிமிடங்கள் காரை பாக் பண்ணுவது? அதன்மூலம் வரும் பாரதூரவிளைவுகள் அதற்கு செலவிடப்படும் தண்டப்பணம் நினைத்துப்பார்த்தால் இது தேவைதானா எனத்தோன்றுகிறது.

எமக்கு என்ன நடக்கிறது. எம்மைச்சுற்றி என்ன நடக்கிறது என தெரியாமல் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.



ஆயகலைள் அறுபத்து நான்கினையும்… ஏயஉணர்விக்கும் என்னம்மை…



உலகர் மனதுள் முணுமுணுத்தவாறே வீட்டில் இருக்கும் சரஸ்வதி லக்குமி படங்களை துடைத்துக்கொண்டிருந்தார்.




இனி கொஞ்ச நாளைக்கு உலகண்ணையைப் பிடிக்கேலாது. நவராத்திரி ஆரம்பம். புரட்டாதிச்சனி முடிவு. ஐப்பசி வெள்ளி வெள்ளி ஆரம்பம்.
என சொல்லி சிரிச்சா செக்கண்ட் புளோர் செல்லம்மா.

ஞாபகம் வருதே….ஞாபகம் வருதே...



## ஒக்ரோபர் 15…..31

15. நவராத்திரி விரதாரம்பம்
15. இணுவையூர் வீரமணிஐயர் பிறந்ததினம் - 1931
15. சீரடி பாபா நினைவுதினம் -1918
16. வீரபாண்டியகட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட தினம்
17. கவியரசு கண்ணதாசன் நினைவு தினம்
18. பி.பி.சி வானெலி ஆரம்பிக்கப்பட்டநாள்-1922
19. மயில்வாகனம் நிமலராஜன் நினைவுதினம் - 2000
19.ஐப்பசி வெள்ளி விரதம் - ஆரம்பம்
23. சரஸ்வதி பூசை ஆயுத பூசை
24. விஜய தசமி வாழை வெட்டு
31.பண்டாரவன்னியன் நினைவுதினம் - 1811
31. கலோவீன்












# வாழ்க்கைச் சதுரங்கம்

எதிர் எதிராக நீயும் நானும்
மதிநுட்ப விளையாட்டாம்
சதுரங்கம் ஆடத்தொடங்கினோம்
என்னுடன் நீயா? என்றே
அலட்சியமாக
ஆட்டத்தைத்தொடங்கினேன்
திடீர் என்று என்பக்கம்
‘ஆ’ வென்ற ஒலியுடன் குதிரை சாய்ந்தது
இல்லை என்மனம் சாய்ந்தது

விழிப்படைந்தேன் நிதானத்துடன்
மெல்ல காயை நகர்த்தினேன்
பாய்ந்துவரும் எதிரியின் குதிரையை
எட்டி வீழ்த்தினேன் தொடர்ந்து
கோட்டையையும் வீழ்த்தினேன்
இறுமாந்திருக்கையில்



மீண்டும் என் போர்வீரர்கள் பலர்
அடுத்தடுத்து வீழ்த்தப்பட்டார்கள்
ஆட்டம் சூடு பிடித்தது
நானும் வீழ்த்துவதை இலக்காக்கினேன்
உன் வீரர்கள் சிலரை நானும் வீழ்த்தினேன்
சற்று நேரம் சளைக்காது விளயாடினோம்
யாருக்கு வெற்றி என்றே நிச்சயிக்க முடியாது
தடுமாறினோம்
சில மணித்துளிகளில்

சுற்றிவளைத்துவிட்டு மெல்லச்சிரிக்கிறாய்
சுற்றுமுற்றும் பார்க்கிறேன்
நகர்த்தமுடியாது தவிக்கிறேன்
வேறு வழியின்றி
சரணடைந்தேன் தோற்றாலும்
படித்து விட்டேன் புதிய பாடம்
மீண்டும் ஒரு ஆட்டத்துக்கு
தயாராகி விட்டேன்.

**- ரஞ்சி கதிர் -**



# TEMPLE GREENS

100 % Vegetarian Food Take-out & Catering

கனடா சபரிமலை ஐயப்பன் ஆலய நிர்வாகத்தில்

உயர்தர சைவ உணவகம்

18 பதார்த்தங்களுடன் வாழையிலைச் சாப்பாடு பெற்றுக்கொள்ளலாம்

திருமணம், ருதுசாந்தி, அரங்கேற்றம், நூல்வெளியீடு, திவசம், மாசியம், மாளையம் இன்னும் பல வைபவங்களுக்கும் 50இல் இருந்து 1000 பேர் கொண்ட மண்ட வசதிகளுடன் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.





**416.335.7700**
**416.335.7300**

Sun City Plaza
2761 Markham Rd., Unit-28
Toronto, ON M1X 0A4
ayyappancanada.com

கனடா சபரிமலை ஐயப்பன் ஆலயத்திற்கு அருகில்

**Bayview/John**



Bedrooms: 3 Washrooms: 2 Markham $439,900

**Bayview / Royal Orchard**



Bedrooms: 3 Washrooms:2 Markham $449,900

**Ellesmere & Scar. Golf Club**




Bedrooms: 3 Washrooms: 2 Toronto $379,900

**Markham/Lawrence**




Bedrooms: 3+2 Washrooms: 2 Toronto $389,000

**Neilson/Hwy 401**



Bedrooms: 3 Washrooms: 3 Toronto $399,000

**Bayly St / Shoal Point**



Bedrooms: 3 Washrooms: 3 Ajax $354,900

**Audley / Taunton**



Bedrooms: 3 Washrooms: 3 Ajax $359,800

**Church St. & Meekings**




Bedrooms: 4 Washrooms: 4 Ajax $389,900

வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?

## No Credit or Bad Credit

கவலை வேண்டாம்



Designed by: Qcopy.ca

HomeLife/GTA
Realty Inc., Brokerage
Independently Owned and Operated
5215 Finch Ave. E. Suite 203
Toronto, ON. M1S OC2
Office: 416-321-6969 Fax: 416-321-6963

Raj Paramasamy
Sales Representative
Cell: 416-587-1619
Email: raj.paramasamy@hotmail.com

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"

MORTGAGE NEEDS....
Subo Thevarajah, AMP
Mortgage Agent
License# M08002859
416.627.2222
subo@bmsic.com
BonaFide Mortgage Solutions Inc. the true freedom...
MCAP

BonaFide Mortgage Solutions Inc. the true freedom...
Thayalan (Thaya) Gobalakrishnan Mortgage Agent(GTA) Lic No : M12001612
* New Mortgages * Refinance * Second Mortgages
Call me for any Mortgage Financing questions?
Cell: 416-575-3211 ,Fax: 1-888-545-0462
E-Mail: thaya.gobal@gmail.com

"Let me help you make the right choice"
SchurenSriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்
SASI CHELVARATNAM
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S OC2
*Independently Owned & Operated

TD Canada Trust
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable
Low Mortgage Rates
கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும அழையுங்கள்
Buying Home Home Equity Line of Credit
Consolitation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

RealEstate / Mortgage / Investments
SCAR GOLF CLUB KINGSTON — Bedrooms: 4, Washrooms: 3, 1 Year old, $489,900
BRAMPTON — Bedrooms: 3, Washrooms: 3, Bsmt: Finished, $399,900
9TH LINE & 14TH AVE — Bedrooms: 4, Washrooms: 3, $799,900, 3 Months old
HWY 06 HALDIMAND — Restaurant + Motel for sale. $549,900
MCCOWAN HWY 401 — Bedrooms : 2, Washrooms: 2, $249,900
QUEEN CREDITVIEW — SOLD — Bedrooms : 4+1, Washrooms: 6, $1,187,500
RE/MAX Vision Realty Inc. Brokerage.
A. Anton Jeeva B.Eng
416.575.5055
Real Estate / Principal Mortgage Broker
Specialized in bank sale homes
Tridel's Preconstruction condos in downtown available
Mortgage can be arranged as low as 2.85%
*Independently owned and operated
Office: 416.321.2228
E-mail: anton.jeeva@gmail.com, Web: Antonjeeva.com
2210 Markham Rd., #1, Toronto, ON M1B 5V6

விஜயதசமி அன்று (Oct. 24, 2012) உங்கள் வீட்டிற்கு அருகாமையில் நாட்டியம் பயில்வதற்கு ஒரு அரிய வாய்ப்பு
நிருத்திய கலாக்ஷேத்திர அதிபரும், பரதநாட்டிய கலைமணியும், பரதகலா வித்தகியுமான
ஆசிரியை ஸ்ரீமதி. செல்வானந்தி சுகுமார்
அவர்களால் புதிய பரதநாட்டிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
நடைபெறும் இடங்கள்
Ajax: (Taunton & Middlecote)
Markham: Markham & Elson
14 Th Ave & 9Th Lane (Legacy Dr)
Stouffville: (9Th line & Hoover Park)
Scarborough: Middlefield & Finch
Mclevin & Neilson
Stainess & Season
416.278.5345 / 416.754.9047

ON THE SPOT HOME INSPECTIONS INC.
Danny Sripath, B.Sc.
Qualified Home Inspector
Mold Specialist
InterNACHI
IAC2 Certified Mold Certified
CanNACHI
416.823.3552 / 416.289.0033
onthespothome@yahoo.ca
No 80 Corport Dr, Unit #201
Toronto ON M1H 3G5

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES